Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

ஒளி - 02 - கதிர் - 59 17-06-2001 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

நகையா!
22 கரட்டில் தெரிவு
செய்ய இன்றே நாடுங்கள்
சரண்யா ஜுவலர்ஸ்
பிரதான வீதி
களுவாஞ்சிகுடி
தொ. பேசி 065 . 50071

கிழக்குப்



காலத்தை இழுத்தடித்து..... டி.சிவராமின் ஆய்வு

சஞ்சயன் பக்கம்



உலகம் வியக்கும்...



சினிமா

மற்றும்.....
- சிறுவர் மலர்
- கவிதைகள், சிறுகதை
- வன்னி முகாம் வாழ்வு
- கதிரவன் பதில்கள்
- மதம் கொள்ளும் மதம்

அமைச்சர் மகிபாலவுக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு!

## ஜனாதிபதி–ரவூப் ஹக்கீம் சந்திப்பில் இணக்கப்பாடு இல்லை

(நமது விசேட நிருபர்)

**ஐக்கிய தேசியக் கட்சியினால் அமைச்சர் மகிபால ஹேரத்துக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் ஆதரவு வழங்குமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்,அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினால் பாராளுமன்



ரவூப் ஹக்கீம்

றத்தில் கொண்டு வரப்படவிருக்கும் அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் சூழ்நிலை தோன்றியிருப்பதாகவும் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் பங்காளிக் கட்சியான சிறீலங்காமுஸ்லிம் காங்கிரசுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குமிடையிலான உறவு விரிசலடைந்து பிளவுபடும் அபாயம் தோன்றியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான தற்போதைய கருத்து வேறுபாடுகளை களையும் முகமாக ஜனாதிபதியவர்கள் வெள்ளியிரவு அமைச்சர் ரவூப் ஹக்கீமை அழைத்து கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இந்த சந்திப்பின் போது எதுவித உடன்பாடுகளும் எட்டப்படவில்லை

(16ம் பக்கம் பார்க்க)

## ஆரையம்பதி ரெலோ அலுவலகம் நேற்றுடன் மூடப்பட்டது

(வேதாந்தி)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வந்த ரெலோ அலுவலகம் நேற்றுடன் மூடப்பட்டுள்ளதாக ரெலோ அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ரவி விக்கினேஸ்வரராஜா தெரிவித்தார்.

தங்கள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டவர்களும் தங்கள் அலுவலகத்துக்கு அண்மையில் நிலை கொண்டிருப்பதனால் கட்சிக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளை நீக்கும் நோக்குடனேயே இவ்வலுவலகம் மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்னும் சில தினங்களில்

(16ம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலை மாணவன் வவுனியாவில் கைது!

(வவுனியா நிருபர்)

வன்னியைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வவுனியா குட்செட் வீதியிலுள்ள இடைத்தங்குமுகாமில் வைத்து வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வள்ளிபுனம் உடையார் கட்டையைச் சேர்ந்த செல்வராசா சுந்தரலிங்கம் என்னும் மாணவரே கைது செய்யப்பட்டவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை வன்னியில் இருந்து கிழக்கு பல்கலைக்கழகத்திற்காக வந்த பத்து மாணவர்கள் படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் இவர்களில் ஒருவரைத் தவிர 9 பேர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிககப்படுகிறது.

உடனடி வேலைவாய்ப்பு

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப் பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)
1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM INSTALLER,
- ALUMINIUM FABRICATORS,
- ALUMINIUM FITTER.
- TILE PIXER,
- MASON,
- CARPENTER,
- PAINTER,
- ELECTRICIAN,
- ELECTRONIC TECHNICIAN

உடனடிப் பயணம்

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்
LL No -736
283/1 பிரதான வீதி, கொழும்பு.
விசாரணைகளுக்கு:
இல:15/1, 15/2, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090 ADVT.

## கி.பல்கலைக்கழக தேடுதல் கல்விச் சமூகத்துக்கே அச்சுறுத்தல்

– ரெலோ செல்வம் கண்டனம்

''கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வியாழனன்று படையினரால் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள், தமிழ் கல்விச் சமூகத்தையே அச்சுறுத்துகின்ற ஒரு விடயமாகும். இது கண்டனத்துக்குரியது.''

இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் 'த்லைவரும், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

''வந்தாறுமூலையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சுற்றி வளைத்து படையினர் நடாத்தியுள்ள தேடுதல் நடவடிக்கையானது தமிழ்க் கல்விச் சமூகத்தின் மீது விடுக்கப்பட்டுள்ள ஓர் அச்சுறுத்தல் நடவடிக்கை என்றே நாம் கருதுகின்றோம்.

பல்கலைக்கழக வெளிப்புறச் சுற்றுலாவில் புலிகளுடன்

(16ம் பக்கம் பார்க்க)

எங்களை இழுப்போம்

சமாதானக்கதவுகள் தொடர்ந்து திறந்திராது மூடுவதற்கு முன் புலிகள் பேசுவதற்கு வர வேண்டும்.

-பிரதமர் ரட்ணசிறி



கதவுக்கு முன்னுக்கு கிடக்கிற தடைக்கல்லையும் எடுத்துப். போட்டு சொல்லோனும் ஐயா.....

நீரிழிவு நோயாளர்களுக்கான விஷேட பாண் "குப்பூஸ்" ரொட்டி

Sun Shine

நீரழிவு நோயாளர்களுக்கென்றே விஷேடமாகத் தயாரிக்கப்படும் குரக்கன் பாண் - மற்றும் "குப்பூஸ்" அரேபியன் ரொட்டி போன்ற வித்தியாசமான உணவு வகைகளையும் நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

– இன்னும் –

காலை மாலை இரு வேளைகளிலும் சுடச்சுட சகலவிதமான பாண் மற்றும் பணிஸ் வகைகள் அனைத்தையும் நவீன இயந்திர வசதிகளுடன் சுத்தமான முறையில் தயாரித்து வழங்கும் ஒரே நிறுவனம்



Sun Shine

136, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே :065 - 25159

கிளைகள் : 20C, மத்திய வீதி, மட்டக்களப்பு
இல. 5, நவீன சந்தை, மட்டக்களப்பு

சுவை - சூடு - சுகாதாரம்

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கிறது தினக்கதிர்

**தினக்கதிர்**

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@snet.lk

## நூலக வாரத்தை பயன்படுத்துவோம்

கிழக்குப் பல்கலைக்கழகம் எதிர்வரும் ௨௨ம் திகதி முதல் ௨௪ வரை நூலக வாரத்தை நடாத்தவுள்ளது.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இலங்கையின் முன்னணி நூல் விற்பனை முகவர்களது விற்பனைக்கான நூல்களும், பிரபல எழுத்தாளர்களது சேகரிப்பு நூல்கள், பழங்கால ஓலைச்சுவடிகள், அரிய நூல்கள், மின்னியல் ஆவணங்கள் பலவும் காட்சிக்கென வைக்கப்படவுள்ளன.

இது தவிரவும், விசேட விரிவுரைகள், எழுத்தாளர் சந்திப்பு, பயிற்சிப் பட்டறை, நூல் விற்பனை முகவர்களுடனான சந்திப்பு என்பனவும் இந்நாட்களில் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக பதில் நூலகர் அறியத் தந்துள்ளார்.

உண்மையில், இம்மாவட்டத்துக்குத் தேவையான, மிகவும் அவசியமான பணியொன்றினை தற்போது கிழக்குப் பல்கலைக்கழகம் செய்யவுள்ளது எனலாம்.

இம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு முக்கிய உயர்கல்வி நிறுவனம் என்ற வகையிலும், தமிழ் மண்ணின் முக்கிய உயர்கல்வி பீடங்களில் ஒன்று என்ற வகையிலும் கிழக்குப் பல்கலைக்கழகம், தமிழ் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன.

இவ்வகையில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அது நடாத்திவரும் 'நாடக விழா' மற்றும் தமிழர் உணர்வுகளை வெளிப்படுத்தவென் பல்கலைக்கழக சமூகம் நடாத்திய 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் போன்றவை முக்கியமாகக் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

தற்போது அது நடாத்தவுள்ள இந்த நூலக வாரம், இம்மாவட்டத்திற்குள்ள பெரியதொருகுறையினை நிவர்த்தி செய்வதற்கான முதற்படியாக அமையும் என்பது திண்ணம்.

இன்றைய அறிவியல் யுகம் பரந்து விரிந்தது. தகவல் தொழில்நுட்டபத்தின் வளர்ச்சி, அறிவியல் ஈட்டும் அடைவுகளை உலகின் மூலைமுடுக்கெல்லாம் எடுத்துச் செல்கின்றன.

ஆனால், எமது பிரதேசத்தில், தகவல் பரிமாற்றத்தின் அடிப்படையான ஓர் ஊடகமான நல்ல பல நூல்களை பெறமுடியாதிருப்பது பெரிய குறைபாடு.

நல்ல பல அரிய நூல்களைப் பெற தலைநகரை நாடவேண்டிய அவலமே இன்னும் உள்ளது.

இங்குள்ள நூல்நிலைங்களைக் கேட்டால், அவர்களோ வாசகர்களையே குற்றம் சொல்கின்றனர்.

உண்மையில் அதையும் மறுப்பதற்கில்லை. வாசிப்புப் பழக்கம் இன்று பலரிடையேயும் மிக மிக அருகி வருவதையே காணமுடிகிறது.

நூல்களைத் தேடி வாசிக்கும் ஆர்வமுமில்லை. சும்மா கண்ணில் படுவதற்காயினும் இங்கு நூல்கள் கிடைப்பதுமில்லை.

இந்நிலையில், கிழக்குப் பல்கலைக்கழகம் நடாத்தவுள்ள நூலகவாரம், கிடைத்தற்கரிய பல நூல்களை மக்களின் பார்வைக்கு எட்டச் செய்வதுடன், அதன் வழி தேடலையும், வாசிப்புப் பழக்கத்தையும் மக்களிடையே ஊக்குவிக்கவும் செய்யும்.

இது ஒரு அரிய சந்தர்ப்பம். எனவே மாவட்டத்திற்குள்ளும் வெளியேயும் மூலைமுடுக்கெங்கும் இருக்கும் பலரும் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பெற்றோரும், பாடசாலைகளும் தமது பிள்ளைகளை தவறாமல் அழைத்துச் சென்று இவ்வாய்ப்பைப் பயன்படுத்துமாறு அவர்களைத் தூண்ட வேண்டும்.

மொத்தத்தில் அனைத்து மக்களுமே இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அத்துடன் இத்தகைய சமூக மேம்பாட்டுப்பணிகளை கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

# கிழக்குப் பல்கலைக்கழகத் தேடுதல்:
# உயர்கல்வி நிறுவனத்தின் இறைமை மீறல்

எந்தவொரு தேசத்திலும் அதனது கல்வி சமூகத்தின் நிறுவன கட்டமைப்பு மீது பொறுப்புணர்வுடன் கூடிய மதிப்பு வழங்கப்படுவதே ஜனநாயக மரபாக அமைந்து வருகிறது.

இத்தகைய ஜனநாயக மரபானது ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரச மற்றும் இராணுவ இயந்திரங்களால் ''பாரபட்சமாக'' கைக்கொள்ளப்படுவது கடந்த ஐம்பத்து மூன்று வருட அரசியல் செல்நெறியில் ஒன்றும் புதிதல்லதான்.

1956 ஜூன் 05இல் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ''தனிச் சிங்கள சட்டம்', 1970 இல் அவரது பாரியாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பைக் குறைக்கும் கபட நோக்குடன் கொண்டு வரப்பட்ட ''பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல்'' ஆகியன தமிழ் கல்வி சமூகத்தின் மீதான ஜனநாயக மரபு'. உரிமை மீறலுக்கான எடுத்துக் காட்டுகளாக எடுத்தாளப்படுகின்றன.

இத்தகைய ஜனநாயக உரிமை மீறலின்/உயர்கல்வி நிறுவனத்தின் ''இறைமை''யை மீறும் அரச பயங்கரவாதத்தின் தொடர்கதையாக கடந்த வியாழன் ஸ்ரீலங்கா படைத்துறையினரின் ''உட்பிரவேசம்'' அமைந்திருந்தமை நெஞ்சை நெருடுகிற நிகழ்வாகி விட்டது.

ஸ்ரீலங்கா படைத்துறையினரின் இத் தேடுதல் நடவடிக்கைக்குக் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழக வெளிச்சூழலில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து தப்பிய சில விடுதலைப்புலி உறுப்பினர்களைத்



தேடிக் கைது செய்வது என்பதே படைத்துறையால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தேடுதல் நடவடிக்கைக்காக அதிகாலையிலே பெருமளவிலான ஆயுதப் படையினர் குவிக்கப்பட்டதோடு. நவீனரக யுத்த டாங்கிகளும் **(BATTLE TANKS)** கவச வாகனங்களும் ''தயார்'' நிலையில் வைக்கப்பட்டும் காணப்பட்டமை கிழக்குப் பல்கலைக்கழக பிரதான வீதி சூழலை ''சமர்க்களம்'' ஆகவே தென்படச் செய்திருந்தது.

பல்கலைக்கழக விடுதி மாணவ மாணவிகளும் நகர மற்றும் சூழவிருக்கும் பகுதிகளிலிருந்து விரிவுரைகளுக்கு வருகை தந்த மாணவ மாணவிகளும் கல்விசார். கல்விசாரா ஊழியர்களும் உள் நுழைய முடியாது தடுக்கப்பட்டிருந்தனர்.

உத்தியோகபூர்வ வதிவிடத்தில் இருந்த பல்கலைக்கழக துணைவேந்தர் அனுமதியை தொலைபேசி ஊடாகப் பெற்று படையினர் தேடுதல் நடத்தியதாக ஊடகங்களுக்கு பல்கலைக்கழகம் சார்பாக குரல்தரவல்ல அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இத் ''தேடுதல்'' (?) நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் பல்லைக்கழக வளாகத்தின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் எவ்வித ''நிலைகளை''யும் **(POSITION)** எடுத்திராது அங்குமிங்குமாக குந்தியிருந்து ''கூடி''க் கதைத்ததையும் பரவலாகக் கண்ணுற முடிந்தமை ஆயுதம் தாங்கிய போராளிகளை நிஜமாகப் பிடிப்பதற்கான ஏற்பாடாகக் கருத முடியவில்லை என்றும் ''பொங்குதமிழ்'' போன்ற நிகழ்வுகளிற்கான பழி தீர்க்கும் முயற்சியாகவே கருத இடமுண்டு என்றும் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மற்றும் சாராத ''பொதுமக்கள்'' பரவலாகக் கருத்துத் தெரிவித்தனர்.

வியாழன் நண்பகல் ஸ்ரீலங்கா அரச வானொலியின் தமிழ் செய்தியறிக்கையின் பிரதான தலைப்புச் செய்தியாக ''வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழத்தினுள் ஒரு பயங்கரவாதி கைது செய்யப்பட்டார்.'' என்று தெரிவித்தமை இதை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்திருந் தது.

அரச படைத்துறையினரது கூற்று போல அவ்வாறு புலி உறுப்பினர் பல்கலைக்கழக வளவினுள் நுழைந்திருந்தாலும் அதற்கு மாணவர்களோ நிர்வாகமோ பொறுப்பல்ல. அரச படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களது காவல்களையும் மீறி போராளிகள் உள்ளே நுழைய முடிந்ததென்றால் அது படைத்துறையின் பலவீனம் ஆகவே கொள்ளப்பட வேண்டும். மாறாக உயர்கல்வி நிறுவனம் மீதான அத்து மீறலாக அமைந்திருப்பது கண்டிக்கப்பட வேண்டும். இத்தேடுதல் நடத்துவதற்கான அனுமதி துணைவேந்தரிடம் இருந்து கிடைத்தாலும் உயர்கல்வி அமைச்சரிடமும் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அனுமதி கிடைத்துத் தேடுதல் நடத்துவதாயினும் ''காவல்துறையினர்'' மூலம் அதுவும் அதிகாரம் கூடிய அதிகாரியின் தலைமையின் கீழேயே நடத்தப்பட்டிருக்க வேண்டும். எடுத்தவாக்கிற்கு படையினரைப் பயன்படுத்தியமை மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதே.

மேலும் தேடுதல் நாளன்று பல்கலைக்கழகத்திற்கு செல்லாது திரும்பிய விரிவுரையாளர்கள் ஏனைய ஊழியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் மறுநாள் (வெள்ளி) வழமை போன்று பல்கலைக்கழக நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். முதல்நாள் நடைபெற்ற தங்களது நிறுவன இறைமை மீறலை இட்டுப் பெரிதும் அலட்டிக் கொள்

**சுதந்திரன்**

ளாத நிலையில் - ''இவ் அடாத்தான படையினரின் தேடுதல் பெரிதுபடுத்தப்பட வேண்டியதொன்றில்லை'' என்ற ரீதியிலானதா என கடந்தகால வரலாறறிந்ததோரும் இதர மனித உரிமை ஆர்வலர்களும் அங்கலாய்ப்பதை அவதானிக்க முடிகிறது.

1987 அக்டோபரில் இந்திய அமைதி காக்கும் படையினரின் I.P.K.F யாழ் மருத்துவ பீட மைதானத்தில் தரையிறங்கியதையடுத்து மூண்ட மோதலின் பின்கூட இந்திய இராணுவத்தினரின் எப்பிரிவினரும் பல்கலைக்கழக சூழலில் எவ்விதத் தேடுதலையும் உடனடியாக நடத்தியிருக்கவில்லை என்பது நினைவூட்டத்தக்கது. இது உயர்கல்வி நிறுவனத்தின் இறைமை படையினரால் மீறப்படாமைக்கு எடுத்துக் காட்டாகும்.

அதேவேளை. 1987 இன் இறுதிப் பகுதியில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் அகதிகள் தங்கியிருந்த வேளை I.P.K.F மீது சிறு துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்பட்டதை ''சாட்டாக' வைத்து, அப்பாவி அகதிகள் நலன் மீது எவ்வதக் கரிசனையுமற்று I.P.K.F. யுத்த டாங்கிகள் ஏவிய எறிகணைகளால் பல அகதிகள் கொல்லப்பட்டு கல்லூரி மைதானத்தில் புதைக்கப்பட வேண்டிய அவலம் நடந்தேறியது.

கடந்த வியாழனன்று கிழக்கு பல்கலைக்கழக வாயிலில் யுத்த டாங்கிகள் பீரங்கி குழல்களும் நிறுத்தப்பட்டிருந்தன. இதனால் 'சிலவேளை'' அவ்வாறு ''சிறு'' அனர்த்த மேதுமேற்பட்டு ''இரத்தக்களரி'' ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் பலரது மனங்களைக் கிலேசமடையச் செய்திருந்தது. ஏனென்றால், பல்கலைக்கழகத்திற்கு எதிர்புறத்தில் அமைந்த விடுதிகளில் பல மாணவ மாணவிகள் தங்கியிருந்த நிலையில், யுத்த மூஸ்தீபு போல அமைந்திருந்த தேடுதல் நடவடிக்கை மக்களை அச்சமடையச் செய்திருந்தது.

ஈழ இந்திய யுத்த காலகட்டத்தில் 1989 இன் முற்பகுதியில் யாழ் இந்துக் கல்லூரியினுள் புலி உறுப்பினர் ஒருவர் ஓடியதாகத் தெரிவித்து. கல்லூரி வேளையில் துப்பாக்கிப்பிரயோகம் செய்தவாறு ஓடிய முன்னாள் தமிழ்ப் போராளிக் குழு உறுப்பினர்களது கண்மூடித்தனமான தாக்குதலால் ஒரு ஆசிரியர் கொல்லப்பட்டதோடு இன்னும் இரு ஆசிரியர்கள் படுகாயமடைந்துமிருந்தனர். இத்தாக்கு தலை/கல்வி நிறுவனத்தின் மீதான இறைமை மீறலைக் கண்டித்து, யாழ். மாணவ சமூகத்துடன் ஒன்றிணைந்து ஒட்டுமொத்த கல்விச் சமூகம் நடத்திய எதிர்ப்புப் போராட்டம் பின்னர் இத்தகைய அத்துமீறல்கள் இடம்பெறுவதைத் தவிர்த்துமிருந்தது.

1998 ஜூனில் திருகோணமலையில் நிகழ்ந்த வேலையற்ற பட்டதாரிகளது சாகும் வரை உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து உயர்வகுப்பு மாணவமாணவிகள் ''தாமாக'' முன்வந்து எவ்வித அமைப்பும் சாராது நடத்திய அடையாள உண்ணா நோன்பை ஸ்ரீலங்கா அரச படைத்துறையினர் வன்முறைத் தாக்குதலை நடத்திக் குழப்பியதைக் கண்டித்து, மாவட்ட படைத்தலைமை சம்பவத்திற்கு மன்னிப்புக் கோர வேண்டுமென பள்ளிகளைப் பகிஷ்கரித்ததையடுத்து ஈற்றில் திருமலை நகர மண்டபத்தில் அப்போதைய நகர பிதா. கல்லூரி அதிபர்கள், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் மாணவ பிரதிநிதிகளிடம் பொறுப்பதிகாரி மன்னிப்புக் கோரியிருந்தமை மாணவர் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகவே நோக்கர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதிர்ஷ்டவசமாக கிழக்குப் பல்கலைக்கழகத் தேடுதலில் அப்படியேதும் அசம்பாவிதம் நடந்திருக்கவில்லை. ஆனாலும் தேடுதலில் காணப்பட்ட முனைப்பும், ''டாங்கி'களின் பயன்பாடும் அங்கே ஒரு சிறு பொறி கிளம்பியிருந்தாலும், பெரும் அவலம் நேர்ந்திருக்கும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன்.

எனவே எமது கடந்தகால வரலாற்றுச் செய்திகளை கற்றுணர்ந்தவாறு, கிழக்குப் பல்கலைக்கழக சமூகமும் இதர கல்வி சமூகமும் தெளிவுற சிந்தித்து, தம்மீதான இத்தகைய அரச படைத்துறையினரின் அச்சுறுத்தல்களையும் இறைமை மீறல்களையும் கண்டித்து. தம்மை தற்காத்துக் கொள்ள முன்வர வேண்டும். கடந்தகால துயரப் பக்கங்கள் மீண்டும் புரட்டப்படாது தடுப்பதற்கு இது அவசியம்.

# காலத்தை இழுத்தடிப்பதன் மூலம்

# புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சி

புலிகள் முன் இன்றுள்ள சிக்கல் பேச்சுவார்த்தைகளோ, தடை நீக்கமோ அல்ல. அவர்கள் இன்று எதிர்நோக்கும் முக்கியமான சிக்கல் இன்று உருவாகிக் கொண்டிருக்கும் containment என்ற போரியல் இராஜதந்திர பொறியை உடைத்து அடுத்த கட்டத்திற்கு தமது போராட்டத்தை எவ்வாறு கொண்டு செல்லப்போகின்றார்கள் என்பதேயாகும். பல நாட்களாகத் தேடியும் containment என்ற மேலைத்தேய போரியற் பதத்தின் சரியான உட்கிடக்கையை வெளிப்படுத்தக் கூடிய ஒரு நல்ல தமிழ் சொல் கிடைக்காமையால் நான் மேற்படி ஆங்கிலப் பதத்தையே இங்கு பயன்படுத்துகின்றேன்.

### அடக்கு முறைக்கு எதிரான ஆயுதப் போராட்டங்கள்

containment என்பதைப் பற்றி இன்றைய மேலைத்தேயப் போரியல் என்ன கூறுகின்றது என்பதை முதலில் பார்ப்போம். ஒரு அடக்கு முறை அரசுக்கெதிராக் ஆயுதக் கிளர்ச்சியை இல்லாதொழிப்பதற்கு அல்லது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு மேலைத்தேய போரியல் வல்லுநர்கள் பல வழி முறைகளை விளக்குகின்றார்கள். இவற்றின் தொகுப்பே எதிர் கெரில்லாப் போரியல் என அறியப்படுகின்றது. இத்துறையைப் பற்றி ஓரளவு மேலோட்டமாக பல்வேறு கட்டுரைகளில் நான் குறிப்பிட்டு வந்துள்ளேன். உலகின் பல பாகங்களிலும் நடைபெற்ற அரச அடக்கு முறைகளுக்கு எதிரான பல ஆயுதப் போராட்டங்களை முறியடிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இந்த எதிர் கெரில்லாப் போரியல் அமெரிக்கா, பிரிட்டன், போன்ற மேற்கு நாடுகளைச் சார்ந்திருந்த மூன்றாம் உலக அரசுகளுக்கும் அவற்றின் படையினருக்கும் மிகவும் உதவியுள்ளது. "வியட்நாம், கியூபா, அல்ஜீரியா, நிக்காராகுவா ஆகிய நாடுகளில் புரட்சிகர கெரில்லா இயக்கங்கள் வெற்றிபெற்றதைப் பற்றி மட்டுமே

**டி.சிவராம்**

எல்லாரும் கவனிக்கின்றார்கள். ஆனால் எமது எதிர் கெரில்லா போரியலில் பயிற்றுவிக்கப்பட்ட படைகள் தென் அமெரிக்காவின் நிக்காராகுவா தவிர்ந்த அனைத்து நாடுகளிலும் அரைநூற்றாண்டுக்கு மேலாக தொடர்ந்து வெற்றி பெற்று வருவதையோ, பிலிப்பைன்ஸ் ,இந்தோனேசியா, தாய்லாந்து, போன்ற ஆசிய நாடுகளிலும் எமது எதிர் கெரில்லாப் போரியல் வழிகாட்டல் அடிப்படையில் அந்நாட்டுப்படைகள் ஆயுதம் ஏந்திய பிரிவினை வாத மற்றும் புரட்சிகர இயக்கங்களை முறியடித்ததையும் கட்டுப்படுத்தி வருவதையோ மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த பல ஆய்வாளர்கள் கவனிக்கத் தவறுகின்றார்கள்" என அமெரிக்க படைத்துறை அதிகாரி ஒருவர் தமது நூலில் சுட்டிக்காட்டுகின்றார். அவர் கூறுவது சரியே. இது மட்டுமல்லாது மலேசியா, ஓமான், எகிப்து, சைப்பிரஸ், போன்ற நாடுகளிலும் அயர்லாந்திலும் நீண்ட காலமாக நடைபெற்ற அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டங்களை நசுக்கவும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் பிரிட்டிஷ் எதிர் கெரில்லாப் போரியலும் நாகலாந்து மிசோராம், அஸ்ஸாம் ஆகிய இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் நடைபெற்ற ஆயுதம் ஏந்திய தனி நாட்டுக்கான போராட்டங்களை பிரிட்டிஷ் மரபு வழி வந்த இந்தியா எதிர் கெரில்லாப் போரியல் வழிமுறைகளும் பெரும்பங்காற்றியுள்ளன. அண்மைக்காலத்தில் மேற்கு நாடுகளால் மறை முகமாகவும் நேரடியாகவும் [illegible] செக்கோஸ்லொவாக்கியாவின் அல்பேனிய விடுதலைப் போராட்டத்தை தற்பொழுது வெற்றிகரமாக நசுக்குவதற்கும் மேற்படி மேலைத்தேய எதிர்கெரில்லாப் போரியல் வழிமுறைகளே பயன்படுத்தப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்வதானால் இரண்டாம் உலகப் பெரும் போர் முடிவடைந்த காலத்திலிருந்து இன்று வரை வெற்றியடைந்த அரச ஒடுக்கு முறைக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சிகளைவிட முறியடிக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தபட்ட போராட்டங்களே மிகவும் கூடுதலாகும்.

மேற்படி அரச எதிர்ப்பு இயக்கங்களில் கைவிட்டெண்ணிடக் கூடிய ஒரு சிலவே மரபு வழிப் படைப்பலத்திற்குரிய அம்சங்களை பெற்றிருந்தன. அந்த அம்சங்களையும் வளர்ச்சியடைய விடாமல் மேலைத்தேய எதிர்கெரில்லாப் போரியல் வழிமுறைகள் தடுத்துவிட்டன. பிலிப்பைன்ஸ், நாகலாந்து, எல்சல்வடோர், ஆகிய நாடுகளில் இவ்வாறு மரபு வழிப் படைகளாக வளர்ச்சியடைந்திடக் கூடிய பல பண்புகளை கொண்டிருந்த புரட்சிகர இயக்கங்களும் மேற்படி முறியடிக்கப்பட்டவரின் பட்டியலில் அடங்கும்.

### 55 வருடங்களாக வளர்த்தெடுத்த முறைகள்

கடந்த 55 வருடங்களுக்கு மேலாக அமெரிக்க, பிரிட்டிஷ், இந்தியப் படைத்துறைகளும் அவற்றின் போரியல் ஆய்வாளர்களும் மேற்படி போராட்டங்களை முறியடிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான எதிர் கெரில்லாப் போரியல் நுட்பங்களை சிறந்த முறையில் வளர்த்தெடுத்துள்ளன.

ஆனால் "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பதற்கமைய இப்போரியல் நுட்பங்கள் யாவற்றையும் மீறி உலகில் இரணடேயிரண்டு இயக்கங்கள் மரபு வழிப்படைகளாக இன்று வளர்ந்து செயல்படுகின்றன.

ஒன்று விடுதலைப் புலிகள். இரண்டாவது கொலம்பியா நாட்டின் இடதுசாரிப் புரட்சிகர இயக்கமான FARC.

> **மரபுவழி படைப்பலம் பெற்று ஒரு அரசின் படைகளை முறியடிக்கும் தறுவாயில் உள்ள இயக்கம் ஒன்றை அது தன் இறுதிக் குறிக்கோளை அடையாது குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு தொடர்ந்து எவ்வாறு தடுக்கலாம். அப்படித் தடுப்பதன் மூலம் காலப்போக்கில் எங்ஙனம் அந்த இயக்கத்தினுள் ஒரு தேக்க நிலையை தோற்றுவித்து அது நீண்ட காலத்தில் சிதைவடைந்து போவதற்கான அகக் காரணிகள் உருவாகக் கூடிய சூழ்நிலையை உண்டாக்கலாம் என்பதையே மேற்படி Containment மூலோபாயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.**

கொலம்பியாவின் வறிய விவசாயிகள் வாழும் கிராமப்புறங்களில் 1964ம் ஆண்டில் இருந்து அந்நாட்டின் அமெரிக்கச் சார்பு கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்கெதிராக FARC ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்தது. அதை அடக்குவதற்கு அமெரிக்காவும் அதன் கையாளான கொலம்பிய படைத்துறையும் செயல்படுத்திய பல விரிவான நுட்பமான எதிர் கெரில்லாப் போர் முறைகள் வெற்றியளிக்காத நிலையில் அந்த இயக்கம் அந்நாட்டின் 40சதவீதமான நிலப்பரப்பினை தன் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் மரபு வழிப் படையாக 1995, 1997 காலப்பகுதியில் வளர்ச்சியடைந்தது. அமெரிக்காவின் படைத்துறை உளவு அமைப்பு 1997ம் ஆண்டு கொலம்பியாவின் நிலை பற்றி தனது மேலிடத்துக்கு சமர்ப்பித்த அறிக்கையில் "கொலம்பியப் படைகளில் ஊழல் மலிந்துள்ளது. அவர்களால் FARC இயக்கத்தை எதிர் கொள்ள முடியாதுள்ளது. அந்த இயக்கம் விரைவில் அரசைக் கைப்பற்றக்கூடிய நிலைமையே இன்று அங்கு காணப்படுகின்றது" எனக் கூறியிருந்தது. (இவற்றையும் கொலம்பியாவின் கிளர்ச்சி பற்றிய மேலதிக விபரங்களையும் இணைய தேடிகளில் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.)

ஆனால் இன்று நான்கு வருடங்கள் ஓடி விட்டன. FARC இதுவரை கொலம்பிய அரச படைகளை முறியடித்து கொலம்பியாவின் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. அப்படிச் செய்யக் கூடிய உடனடிச் சூழலும் அங்கு காணப்படவில்லை.

கடந்த நான்கு வருடங்களில் FARC னுடைய மரபு வழிப் படை வலுவானது தனது இலக்கை அடைந்திடாமல் செய்வதற்கு அமெரிக்கா நடைமுறைப்படுத்திய மூலோபாயமே Containment

## மேலைத்தேய நாடுகளின் Containment உத்தியை கையாளும் இலங்கை

### மூலோபாயங்கள் மட்டும் வெற்றி தராது

வியட்நாமில் 1975ம் ஆண்டு தோல்வியடைந்த பின்னர் 'கிளர்ச்சி இயக்கங்களை படை பலத்தை மட்டும் நம்பி கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைப்பாட்டிற்கு அமெரிக்க படைத்துறை வந்தது. ஒரு குறிக்கோளை அடைவதற்கு படை வலுவும் ஒரு கருவியே ஒழிய அதனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மூலோபாயங்களை வகுப்பது வெற்றி தராது என்ற எண்ணம் வியட்நாம் தோல்வி பற்றிய மறு பரிசீலனைகளில் ஈடுபட்ட அமெரிக்க போரியல் ஆய்வாளர்கள் மத்தியில் தோன்றிற்று. இந்தப் பின்னணியில் தான் நாம் Containment பற்றிப் பார்க்க வேண்டும். மரபு வழி படைப்பலம் பெற்று ஒரு அரசின் படைகளை முறியடிக்கும் தறுவாயில் உள்ள இயக்கம் ஒன்றை அது தன் இறுதிக் குறிக்கோளை அடையாது குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு தொடர்ந்து எவ்வாறு தடுக்கலாம். அப்படித் தடுப்பதன் மூலம் காலப்போக்கில் எங்ஙனம் அந்த இயக்கத்தினுள் ஒரு தேக்க நிலையை தோற்றுவித்து அது நீண்ட காலத்தில் சிதைவடைந்து போவதற்கான அகக் காரணிகள் உருவாகக் கூடிய சூழ்நிலையை உண்டாக்கலாம் என்பதையே மேற்படி Containment மூலோபாயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இனி இந்த மூலோபாயத்தின் முக்கியமான அம்சங்கள் என்ன • என்பதை சுருக்கமாகப் பார்ப்போம்.

1.விழும் நிலையில் இருக்கின்ற அரச படைகளுக்கு இறுதித் தருணத்திலாவது தோல்வியைத் தடுத்திடக் கூடிய அளவிற்கு பெருந்தொகை படைத்தளபாட உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குதல். கொலம்பியப் பிரச்சினை பற்றி எழுதுகின்ற ஒரு அமெரிக்க ஆய்வாளர் இதை Salvadorizing என அழைக்கின்றார். ஏனெனில் 1983-84 காலப்பகுதியில் எல்சல்வடோர் அரசை அந்நாட்டின் இடதுசாரி கிளர்ச்சிப் படைகள் கைப்பற்ற இருந்த தருணத்தில் அமெரிக்கா அங்கிருந்த அரசுக்கு மிகப் பெரிய அளவில் படை உதவி வழங்கியது. அத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவ்வியக்கத்தை முறியடிக்கும் வேலையில் தனது விசேட படைப்பிரிவு ஆலோசகர்களையும் அங்கு ஈடுபடுத்தியது. இதே வேலையை 1996ற்குப் பின் கொலம்பியாவிலும் அது செய்து வருகின்றது. இது போலவே யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படைகள் முறியடிக்கப்பட இருந்த வேளையில் அந்த தோல்வியை இறுதி நேரத்திலாவது தடுத்து நிறுத்திடக் கூடிய அளவில் உதவி வழங்கப்பட்டது. அதாவது பின்னடைந்து செல்லும் ஒரு அரசபடையின் மனவலுவால் சாதிக்க முடியாததை பெரும் தளபாட வலுவால் குறைந்த பட்சமாவது சாதிக்கலாம் என்பதே இதனடிப்படையாகும். இவ்வாறு ஒரு அரச படையின் வீழ்ச்சியை இறுதி நேரத்தில் தளபாட வலுவின் மூலம் தடுத்து விட்டால் ஒரு புறம் பலவீனப்பட்ட படைகளை மறுசீரமைத்து அதனுடைய மனவலுவை மீள் நிலை நிறுத்தலாம் • என்பதும் மறுபுறம் 'இறுதி வெற்றி என்றும் எமக்கில்லை' என்ற ஒரு சோர்வை கிளர்ச்சிப் படைகள் மத்தியில் உருவாக்கலாம் என்பதும் மேற்படி கடைசி நேர படைத்தளபாட உதவிகளின் நோக்கமாகும். இதைச் செய்வதற்கு, கொலம்பிய அரசிற்கு அமெரிக்கா மட்டுமே உறு துணையாக இருந்தது. ஆனால் சிறிலங்கா அரசைப் பொறுத்த வரையில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, இந்தியா, பாகிஸ்தான் எனப் பல நாடுகள் புலிகள் மரபு வழிப் போரில் இறுதி வெற்றியடைவதை தடுத்திட உதவி செய்கின்றன.

2.சம்மந்தப்பட்ட அரசை பொருளாதார ரீதியாக நிலைப்படுத்துதல் (Stabilize). அமெரிக்கா இதை நேரடியாகவும் சர்வதேச நாணய நிதியம் (IMF) உலக வங்கி என்பவற்றின் ஊடான அவசர ஸ்திரப்படுத்தல் கடனுதவிகளின் மூலமும் கொலம்பிய அரசை கிளர்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார தளம்பல் நிலையில் இருந்து காப்பாற்றி நிலைப்படுத்த உதவிற்று. இலங்கைக்கும் இவ்வாறு யாழ்ப்பாணம் விழ இருந்த கையோடு இந்தியா வழங்கிய திடீர் கடனுதவியும் தற்பொழுது மேற்கு நாடுகளின் மறை முக ஆலோசனையின் பேரில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வழங்கியுள்ள பெருங் கடனுதவிகளும் மேற்படி அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள அரசுகளை பொருளாதார ரீதியாக நிலைப்படுத்துவதற்கான வழிவகைகளே.

### உளச்சோர்வு ஏற்படுத்துவதே நோக்கம்

3.மரபு வழிப் படை வலுவைக் கொண்டு வெற்றி பெறும் தறுவாயில் உள்ள இயக்கத்திற்கு இருக்கக் கூடிய, கிடைத்திடக் கூடிய சர்வதேச அரசியல் அங்கீகாரத்தை இல்லாதொழித்தல். பயங்கரவாதப் பட்டியலில் அவ்வியக்கத்தை சேர்த்து அதனுடைய நியாயப்பாட்டை அழித்தல். பயங்கரவாதமென அவ்வியக்கத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முத்திரை குத்துவதன் மூலம் அதன் உறுப்பினர்கள் மத்தியில் "நாம் என்ன வெற்றி பெற்றாலும் எமது இறுதி இலக்கை அடைந்தாலும் எமது முயற்சிகள் எல்லாம் சர்வதேச அங்கீகாரம் இன்மையால் விழலுக்கிறைத்த நீராகி விடும்" என்ற உளச் சோர்வு நிலையை இயக்க உறுப்பினர்களிடையில் தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டும் மேற்படி முத்திரை குத்தலை மேற்கு நாடுகள் செய்கின்றன. இப்படிச் செய்வதன் மூலம் முக்கியமாக அச்சுறுத்தலுக்குள்ளாகி இருக்கும் அரசோடு பேசுவதன் மூலம் மட்டுமே தனக்கு ஏதாயினும் ஒரு அங்கீகாரம் கிடைத்திடக் கூடும் என்ற எண்ணத்தை இயக்கத் தலைமைகளின் உள்ளத்தில் ஆழப்பதித்தல். இதன் மூலம் தோற்கடிக்கப்படும் தறுவாயில் உள்ள ஒரு அரசை நெருக்கடியிலிருந்து காப்பாற்றி அதிலிருந்து ஓரளவேனும் அந்த அரசு மீழ்வதற்கான கால அவகாசத்தை பெற்றுத்தரக் கூடிய பேச்சுவார்த்தைகளுக்குள் சம்மந்தப்பட்ட இயக்கத்தை இட்டுச் செல்லுதல்.

4.தனது மரபு வழிப்படை வலுவால் வெற்றி பெறும் தறுவாயில் உள்ள இயக்கமொன்றை சம்மந்தப்பட்ட அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வைத்தல். இதன் மூலம் இறுதித் தீர்வு ஏதோ ஒரு வகையில் முறியடிக்கப்பட்டு நிற்கின்ற அரசை தவிர்க்க முடியாதபடி உள்ளடக்கியே ஆக வேண்டும் என்ற நிலைமை ஏற்படுத்தி அந்த அரசிற்கும் அதன் படைகளுக்கும் உள்ள நியாயப்பாட்டை மீளுறுதி செய்தல்.

5.ஒரு அரச எதிர்ப்பு இயக்கத்தின் மரபு வழிப்படை வலுவானது தனது இறுதிக் குறிக்கோளை நோக்கி குவியாமல் தடுப்பதற்குரிய வகையில் வரையறுக்கப்பட்ட படை நடவடிக்கைகளை வடிவமைத்து செயல்படுத்தல். யாழ்பபாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கினி கீர படை நடவடிக்கைகளும் ஏப்ரல் மாதம் தோல்வியில் முடிந்த அக்னி கீலர படையெடுப்பும் இந்த வகையில் செய்யப்பட்டவையே.

### ஈழப்போரை தடுக்க இது பயன்படுமா?

மேற்கூறிய 5 விடயங்களின் ஒருமித்த தாக்கமானது ஒரு அரசுக்கு தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்கு தேவையான கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுக்கும் என்றும் இப்படியான கால நீட்சி இயக்கத்தை விட அரசுக்கே சாதகமாக அமையும் எனக் கூறப்படுகின்றது. Containment மூலோபாயத்தின் அடிப்படைக் குறிக்கோளே இந்தக் கால நீட்சியினை சம்மந்தப்பட்ட அரசுக்குச் சார்பாக ஏற்படுத்தி கொடுத்தலாகும். இந்தக் கால நீட்சியின் போது எவ்வளவு படை வலுக் கொண்ட அரச எதிர்ப்பு இயக்கமும் ஆண்டுகளின் ஓட்டத்தில் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தேங்கிச் சிதைந்து விடும் என Containment மூலோபாயத்தை முன் வைத்த, தற்போது முன் வைக்கின்ற மேலைத்தேய உயர் படைத் துறை அதிகாரிகளும் போரியல் வல்லுநர்களும் அடித்துக் கூறுகின்றார்கள்.

ஆயினும் ஈழப்போரை ஒடுக்க இது பயன்படுமா இல்லையா என்பது கேள்விக்குறியே. இதை அடுத்த முறை பார்ப்போம்.

○○○



அரசாங்கத்தின் அரசியலமைப்பு யாப்பின் வரைவினை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி குமாரதுங்க இப்பொழுது சொல்லியிருக்கின்றார். அதனை கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜ கட்சியும் மற்றும் சில பொது அமைப்புக்களும் வரவேற்றுள்ளன. இந்த யாப்பு இனப்பிரச்னைக்குத் தீர்வாக முடியாதாகையால் திரும்ப முதலிலிருந்து எழுதும் பணியைத் தொடங்க

உருவாக்கிற்று. சகல மட்டங்களிலும் கவர்ச்சியான பிரச்சாரங்களை மேற்கொண்டது. 'நான் அரசியல் யாப்பு எழுதுகின்றேன்' என்ற வாசகங்கள் பொறித்த ஏராளமான தொப்பிகள், டீசேர்ட்டுக்கள் முதலியவற்றை சிறு பிள்ளைக்ள முதல் பெரியோர்வரை அணிய வைத்தனர். 'நீங்கள் யாப்பு எழுதுவதில் உங்கள் பங்கைச் செய்து விட்டீர்களா? என் வினவும் சுவரொட்டிகள் நாடெங்கும் ஒட்டப்பட்டன. இதன்

என்று விபரித்தால் மிகையாகாது. உண்மையில் பிரதேசங்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை விட, அப்பிரதேசங்களுக்கு மத்திய அரசாங்கத்தில் எவ்வளவு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றதென்பது மிக முக்கியமாகும். 1987ல் கொண்டு வரப்பட்ட மாகாண சபை அமைப்பில் மத்திக்கும், மாகாணத்துக்கும் இடையே இரண்டும் அதிகாரம் செலுத்தக்கூடிய விடயங்கள் பல

முடியாமல் வரும்.

யாப்புத் தயாரிப்பதில்

லேயே தனிநாட்டுக் கோரிக்கையினைத் தீர்மானிக்கும் ஷரத்தினை

# 'நான் எனது நாட்டின் அரசியலமைப்பினை வரைகின்றேன்'

## "I am Writing My Constitution"

வேண்டும் என்று பிரபலமான வெளிநாட்டு சட்ட நிபுணர்கள் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்கள். இதில் அரசியல் அதிகாரப் பகிர்வு உறுதியான முறையில் வழங்கப்படவில்லையென்றும், ஒன்றுக்கு முரணான உறுப்புரைகள் ஏராளமாக இருக்கின்றனவென்றும், சகல தரப்பு மக்களினதும் அபிப்பிராயங்கள் பெறப்படவில்லையென்றும் இதற்கு அனேக காரணங்கள் காட்டியிருக்கின்றார்கள். இவ்வளவு உயிர்ச் சேதங்கள் அழிவுகளுக்குப் பிறகு, வெளிநாட்டாரே இப்படி நிராகரிக்கும் யாப்பினை ஸ்ரீலங்கா அர்சு கொண்டு வர எத்தனிக்கின்றது.

சென்ற வாரம் இதே பத்தியில் அரசியலமைப்பு யாப்பு மக்களினால் எழுதப்பட்டு சொந்தம் கொண்டாடப்பட வேண்டியது என்பதைப் பார்த்தோம். எங்கள் நாட்டிலோ நாங்கள், யாப்பு தயாரிப்பதை ஒட்டுமொத்தமாக அரசியல்வாதிகளிடமும், அவர்களுக்கு அடிகோலுகின்ற வழக்கறிஞர்களிடமும் ஒப்படைத்து விட்டு இருப்பதைப் பற்றி எவரும் கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. அது ஏதோ எங்களுக்கு விளங்காத கடினமான விடயம் என்று நாங்கள் நினைக்கத் தலைப்படுகின்றோம். ஆனால் உண்மையில் ஒரு நாட்டின் அரசியலமைப்பு யாப்பின் அடிப்படைத் தத்துவங்கள் எமக்கெல்லாருக்கும் தெரிந்த எளிமையான உண்மைகள்தாம். அவற்றைக் கோர்த்து, பின்பு அவற்றை செய

மூலம் ஒவ்வொரு பிரஜையும் ஒரு வித கூச்சமோ சந்தேகமோ இன்றி தம்முடைய கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் கூற முன் வந்தனர். இதன்காரணமாக, அவர்களுடைய யாப்பு சட்டவரைவு மொழியில் இல்லாமல் யாவரும் பூரணமாக விளங்கிக்கொள்ளும் சரள மொழியில் அமைந்தது. அது மட்டுமன்றி, சமூகத்தின் சகல குழுமங்களின் நலன்களையும் கூடியளவு பிரதிநிதித்துவப்படுத்துவதாக அதன் உறுப்புரைகள் அமைந்தன. இது எவ்வளவு மகத்தான வரலாறு!

யாப்பிற்கு முதல் தேவையானது அடிப்படைத் தத்துவங்கள் என்பதையும் சென்ற பத்தியல் பார்த்தோம். இந்தப் பிரபஞ்சத்தில்

காணப்பட்டன. இவையே கொழும்பு அரசாங்கத்துக்கும் வட-கிழக்கு மகாண அரசுக்கும் இடையே ஏற்பட்ட நெருடல்களுக்கு அப்பொழுது காரணமாக இருந்தன. ஏனெனில், மாகாண அரசு எதையும் செய்யக் கிளம்பினால் மத்திய அரசாங்கம் முட்டுக் கட்டை போடும் நிலைமை

இறையாண்மைத் தத்துவம் எமது பிரச்னையில் மிகுந்த பூசல் கிளப்பக்கூடிய விடயமாகும். ஒரு நாட்டின் இறையாண்மை என்பது வெளிநாட்டாரால் பார்க்கப்படுவது ஒன்றாகவும் உள்ளூர் பிரஜைகளினால் பாக்கப்படுவது வேறொன்றாகவும் தாராளமாக இருக்கலாம். வெளி

ஒரு பத்து இருபது வருடங்கள் கழித்து செயல்படுத்த பின்போடலாம். இதன்படி, பிரதேச சுயாட்சியை அனுபவித்த மக்கள் ஒரு சந்ததி கழிந்தபின்னர் அநத அனுபவத்தின் அடிப்படையில் தனிநாடு வேண்டுமா இல்லையாவென்ற தீர்மானத்தினை தேர்தல் மூலம் மேற்கொள்ளுவர். இதில் பெறப்படும் முடிவு அறிவுபூர்வமான முடிவாகவும் இருக்கும்.

**வெளிநாட்டவர்க்கு இலங்கை மக்களின் இறையாண்மை இத்தீவின் பூகோள வரையறைகளுக்குட்பட்ட மக்கள் அனைவரினதும் ஒன்றாகக் கருதப்படும் அதே சமயம் உள்ளூர் வாசிகள் வித்தியாசமான மாகாணங்கள் வித் தியாசமான தேசியக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் இருக்கும் ஒரு வகை இறையாண்மையை கைக் கொள்ளலாம்.**

அங்கு இருந்தது.

மத்திய ஆட்சிக்கும் பிர

நாட்டவர்க்கு இலங்கை மக்களின் இறையாண்மை இத்தீவின் பூகோள

சுருங்கக் கூறினால், எங்களுக்கு வேண்டிய முறையில், 'நாம் சமாதானத்துடனும் சுபீட்சத்துடனும் வாழ எந்த உருவத்திலும், நாம் யாப்புத் தயாரிக்கலாம். வானமே எல்லை!

மேலே கூறிய சமஷ்டி முறையில் நீதித்துறை மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பிரதேசத்துக்கும் மத்திக்கும் இடையே மத்தியஸ்தம் செய்கின்ற பொறுப்பு அதனிடம் உள்ளது. ஆயினும், முரண்பாடுகள் தோன்றியபொழுதே சட்டத்தின் துணையை நாடத்தேவையின்றி பிணக்குகள் தீர்க்கும் குழுக்களை இடைநிறுத்தலாம். எப்போதும் எங்கும் பிரதேச நிர்வாக நிறுவனங்களின் சுயாதீனத்தினை இவை நிலைநிறுத்துபவையாக இருக்கவேண்டும். அதே சமயம், இக்கட்டமைப்புக்களைத் தாபிக்கும்போது நிர்வாகத்தைச் செய்யக்கூடிய பயிற்றப்பட்ட அதிகாரிகள் இருக்கின்றனரா என்று உறுதி செய்து கொள்ளவும் வேண்டும். எத்தனையோ நல்ல சட்டங்கள் அதனை செயல்படுத்தத் தெரியாத அரசாங்க அதிகாரிகளினால் சேற்றில் தள்ளப்பட்டிருக்கின்றன. முதலிலிருந்தே சிந்தித்து செயல்பட்டோமாகில் இது இலகுவான விடயங்களாகும். ஆயின், இந்த நடவடிக்கையை செயல்படுத்த அரசாங்கத்திற்கு நாம் அழுத்தம் கொடுத்த வண்ணமே இருக்கவேண்டியவர்களாகின்றோம். அதைச் செய்ய நாம் தயாராக இல்லாவிடில் மேலே கூறியவையெல்லாம் பகல் கனவே.

## 'நீங்கள் யாப்பு எழுதுவதில் உங்கள் ப்ங்கைச் செய்து விட்டீர்களா?'

இன, மத, சாதி, பால், நிற, பிரதேச வேற்றுமையின்றி எல்லோரும் சீமமானவர்கள் என்பதே இந்த அடிப்படைத் தத்துவமாகும். இத்தத்துவத்தினை செயல்படுத்த வேண்டிய அமைப்புக்கள் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் இயங்குவதற்கான விழுமியங்களே இவற்றிற்குத் தொடர்பான பிற அடிப்படைத் தத்துவங்களாகின்றன. ஒரு பல்லின சமூகத்தில் மக்கள் ஒருமித்து வாழவேண்டுமெனில் அதற்காகப் பின்பற்றுவதற்கு

தேச ஆட்சிக்கும் இடையே கூட்டுச் செயற்பாட்டினை ஊக்குவதாலே மத்திய அரசும், பிரதேச அரசும் பகிர்ந்த விடயநிரல் இருப்பது பலனளிக்கக்கூடியதொன்றாகும். ஆயினும் இந்த சந்தர்ப்பங்களில் மத்திய அரசு அதிகாரத்தை பிரயோகிக்கலாமா இல்லையா என்கின்ற தீர்மானம் பிரதேச அரசின் கையிலேயே விடப்படவேண்டும். இந்த வகையில் மத்திய அரசு எப்போதும் பிரதேச அரசின் இணக்கத்தினைப் பெற முயற்சித்த வண்ணமே இருக்க வேண்டும். இது ஜனநாயகத்தின் அதியுயர் கட்டமாகும்.

ஒரு பிரதேசம் சுயாட்சியினை செயல்படுத்தினாலும் அப்பிர தேசத்திற்குள்ளே வாழும் சிறு குழுக்கள் அல்லது இனங்கள் தமக்கென விசேடமாக நிர்வாகத் திட்டமிடல் அலகுகளைத் தாபித்துக் கொள் ளலாம். இந்த அலகின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு பிரதேச அரசியலமைப்பில் இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். இவ்வாறு பிரதேசங்கள், மற்றும் அலகுகள் பிரிக்கப்படும்போது அவ்வவ் பிரதேசங்களிலுள்ள வளங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும். கூடியளவு கனிப்பொருள் நீர் போன்ற வளங்கள் சமத்துவமாகப் பகிர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலன்றி, வருங்காலத்தில் வரக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்க்க

வரையறைகளுக்குட்பட்ட மக்கள் அனைவரினதும் ஒன்றாகக் கருதப்படும் அதே சமயம் உள்ளூர் வாசிகள் வித்தியாசமான மாகாணங்கள் வித்தியாசமான தேசியக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் இருக்கும் ஒரு வகை இறையாண்மையைக் கைக் கொள்ளலாம். இறையாண்மை என்பது ஒரு மக்கள் தம்மை என்ன விதத்தில் அடையாளப்படுத்துகின்றனர் என்பதே தவிர வேறொன்றுமில்லை.. ஸ்ரீலங்காவுக்கு ஒரு கொடியும், அந்த அரசின் ஒரு பாகமாக இருக்கின்ற தமிழ் தாயகத்துக்கு விசேடமாக இன்னொரு கொடியும் இருக்கலாம். ஹொங்கொங் தேசம் சுயாட்சியின் அதியுயர்ந்த சுதந்திரத்தை அனுபவிக்கும் பிரதேசமாகும். அது சீனாவின் ஆட்சியின் ஒரு அம்சமாக இருந்தாலும் தனக்கென வேறான டொலர் நாணயத்துடனும், கண்காணிக்கப்படுகின்ற சீனாவுடனான எல்லைப்பிரதேசங்களுடனும், தனக்கென குடியமர்வு குடியகல்வு சட்டங்களுடனும் இன்னபிற குற்றச் சட்டங்களுடனும் இருக்கின்றது. இதனால் ஹொங்கொங் மீதான சீனாவின் ஆட்சி எந்த விதத்திலும் பங்கப்படவில்லை.

எங்களது இனப்பிரச்சனையைத் தீர்க்கவும் ஒவ்வொரு படிநிலையைக் கொண்ட யாப்பினையும் நாம் தயாரிக்கலாம். பிரதேச சுயாட்சியை ஏற்படுத்தி அந்த யாப்பி

**பிரதேச சுயாட்சிய்யை ஏற்படுத்தி அந்த யாப்பி லேயே தனிநாட்டுக் கோரிக்கை யினை தீர்மானிக்கும் ஷரத்தினை ஒரு பத்து இருபது வருடங்கள் கழித்து செயல்படுத்த பின்போடலாம்.**

லாக்கக்கூடிய கட்டமைப்புக்களை வரையறுத்தோமாகில் எமது கைகளில் ஒரு யாப்பு தயாராகிவிடும். தென்னாபிரிக்காவில் இந்த யாப்புத் தயாரிப்புத் திட்டம் வருடக்கணக்கில் தொடர்ந்தது நமக்குத் தெரிந்ததே. இந்தக் காலகட்டத்தில் அங்கிருந்த அரசாங்கம் இதில் மக்கள் பங்களிப்பதை பல வழிகளின் மூலம் உறுதி செய்துகொண்டது. பிரதேசத்துக்குப் பிரதேசம் மக்கள் குழுக்களைத் தாபித்து அவற்றுடன் யாப்புக் குழு சந்திக்கும் கட்டமைப்புக்களை

சில எடுகோள்கள் உண்டு. இவையெல்லாம் அரசு சகல இன மக்களின் மத்தியில் காணப்படும் வேறுபாடான தன்மைகளுக்கு செவி சாய்க்க **(responsive to the diversity in the country)** வேண்டும் என்பதையொட்டி வரையறுக்கப்பட்டவையாகும்.

சமஷ்டி ஆட்சியானது சுயாட்சியினதும் பகிர்ந்த முறை ஆட்சியினதும் **(shared rule)** கூட்டுச் சேர்க்கையாகும். இதை 'மத்திய அரசாங்கத்தை சமஷ்டியாக்குதல்'

சர்வதேச சமூகத்தையே வியப்பிலாழ்த்தும் தலைவர் பிரபாகரன்

# இராணுவ நகர்வுகளுக்கு சமனான அரசியல் - இராஜதந்திர நகர்வுகள்

ஜெயராஜ்

இந்நகர்வானது தலைவர் பிரபாகரனின் அரசியல், இராஜதந்திர ஆற்றலை உலகின் முன் வெளிப்படுத்திய சம்பவமாக அமைந்தது. இதனை அன்று சிறிலங்காவிற்கான அரசியல் தூதுவராக இருந்தவரும் இந்திய சிறிலங்கா சமாதான உடன்பாட்டின் சூத்திரதாரிகளில் ஒருவருமான கே.என்.டிக்சிற் காலம் கடந்தாவது ஒப்புக்கொள்ள வேண்டியே வந்தது.

அவர் சுமார் ஒரு தசாப்தத்தின் பின்னர் எழுதிய 'கொழும்புப்பணி' என்னும் நூலில் 'தமிழீழ விடுதலைப் புலி இயக்கம் தமிழ் மக்களின் நலனைப் பிரதிபலிக்கும் பலம் பொருந்திய அரசியல் இராணுவ சக்தியாக எழுச்சி பெற்று நிற்பதற்கு, பிரபாகரனின் தலைமைத்துவம் தான் காரணம்' எனக்குறிப்பிட்டார்.

இது தலைவர் பிரபாகரனுக்கு அவரைப் பரமவைரியாகக் கொண்டிருந்தவரிடம் இருந்து கிடைக்கப் பெற்ற பாராட்டு என்று கூடக் கொள்ளலாம்.

இவ்வாறு இராணுவ அரசியல் இராஜதந்திர ரீதியில் தனது ஆற்றலினையும் திறனையும் கடந்த காலத்தில் வெளிப்படுத்தியுள்ள தலைவர் பிரபாகரன் மீண்டும் ஒரு தடவை அரசியல் இராஜதந்திர ரீதியில் மேற்கொண்ட முக்கியமானதொரு நகர்வே நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மை கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி வன்னியில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளமையும்.அதன் பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அறிவிப்புக்களும் ஆகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதாக காலத்திற்கு காலம் அறிவித்த போதும் அரசியல் இராஜதந்திர வட்டாரங்களில் அவை முக்கியத்துவம் பெறவில்லை. சிங்கள பேரினவாத அரசின் பிரச்சாரத்தை அவை நம்பிக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணம் ஆகும். ஆனால் பெரும்இராணுவ வெற்றிகள் பலவற்றின் பின்னர் தலைவர் பிரபாகரன் இவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபடுவார் என



எவருமே எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், யாழ் குடா நாட்டை இராணுவ ரீதியில் மீட்டெடுக்கும் வரை புலிகள் அரசியல் பேச்சுக்களில் இறங்க மாட்டார்கள் என்றே பலரும் எதிர்பார்த் திருந்தார்கள். இதனால் தலைவர் பிரபாகரன் எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்தது மட்டுமல்ல, அதன் பின் நடந்தேறிய நிகழ்வுகளும் அரசியல் இராஜதந்திர வட்டாரங்களின் எதிர்பார்க்கைக்கு மாறானதாக அதிர்ச்சியூட்டுபவையாகவும் இருந்தன. அதாவது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே சமாதானத்துக்கான தொடர் சமிக்ஞைகளை வெளியிட்ட வண்ணம் இருந்தார். எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்த பின்னர் நிபந்தனை அற்ற



பேச்சுக்குத்தயார் என்ற அறிவிப்பு அவரிடம் இருந்து வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் இராணுவ ரீதியில் பாதகமானதாக அமையலாம் எனத் தெரிந்திருந்தும், தலைவர் பிரபாகரன் இராணுவ வெற்றிகளை அரசியல் பேச்சிற்கு பணயமாக வைக்கும் அளவிற்கு தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இதனை உலகம் ஓரளவுக்குப் புரிந்து கொண்டது. தலைவர் பிரபாகரன் அறிவிப்புச் செய்த போர்நிறுத்தத்தை உலகம் குறிப்பாக மேற்குலகம் வரவேற்றதோடு, விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தமது நம்பகத் தன்மையையும் வெளியிட்டன.

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தமானது, புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடு என்றும், புலிகள் தம்மை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளவும் அணி சேர்த்துக் கொள்ளவுமே இவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளனர். என்பதுமான சிறிலங்கா அரசின் பிரசாரத்தை உலகம் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. இதனை உணர்த்துமாப் போன்றே அமெரிக்கா உட்பட மேற்குலகம் சிறிலங்கா அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதோடு புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பித்தல் வேண்டும் என அழுத்தம் கொடுக்கத் தொடங்கின.

அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இட்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளே விடுதலைப் புலிகளுடன் அரசு யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என அபிப்பிராயங்களை வெளியிட்டன.

அதாவது தலைவர் பிரபாகரனின் இவ்அரசியல்இராஜதந்திர நகர்வானது இனப்பிரச்சினைக்குத் சர்வதேச மத்தியஸ்தத்துடன் ஓர் அரசியல் தீர்வைக் காணும் சந்தர்ப்பத்தை சர்வதேச உலகிற்கு வழங்கியுள்ள அதே வேளை, விடுதலைப்புலிகள் குறித்து சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் பிரசாரத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதாகவும் அமைந்தது.

இது ஒரு வகையில் சிறிலங்கா அரசு மீது தலைவர் பிரபாகரன் தனது அரசியல் இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறை மூலம் கொடுத்துள்ள அழுத்தத்தின் வெளிப்பாடு என்றே கூறலாம். அதாவது இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல் இராஜதந்திர ரீதியிலும் சிறிலங்கா அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் செயற்பட முடியும் என்பதனை தலைவர் பிரபாகரன் வெளிக்காட்டியுள்ளார்.

இதே வேளை தற்பொழுது தலைவர் பிரபாகரன் மேற்கொண்டுள்ள அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்குலகத்தவரின் இன்றைய உலகம் நோக்கிய பார்வைக்கு ஓரளவிற்கு அனுசரணையானதாகக் காணப்படலாம். இதனாலேயே அவர்கள் புலிகளின் அரசியல் முயற்சிகளுக்கு வரவேற்பு அளித்தும் இருக்கலாம். இருப்பினும் சிங்களப் பேரினவாதத்தைத் திருப்திப்படுத்தும் நீதியற்ற நடவடிக்கைகளும் தமிழ்த் தேசிய இனத்தைச் சிதைக்கும் சிங்களப் பேரினவாதத்தின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையிலும் மேற்குலகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இழைத்த தவறையே அவையும் இழைத்ததாக இருக்கும்.

ஏனெனில் தமிழ் மக்களின் போராட்டமானது, ஒடுக்கப்படும் இனத்தின் உரிமைக்கானதாகும். இதற்குத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தலைமைத்துவத்தை வழங்கி முன்னெடுத்துச் செல்கிறார். இதனை சிறிலங்கா அரசோ அன்றி வேறு எவருமே தமது விருப்பத்துக்கு ஏற்றபடி பயங்கரவாதம் எனக் கூறி முத்திரை குத்த முனைவதினால் போராட்டத்தை மக்கள் கைவிடப்போவதோ அன்றி தலைவர் பிரபாகரனுக்கு வழங்கும் ஒத்துழைப்பையோ கைவிட்டுவிடப் போவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்திய இராணுவம் பெரும் அழுத்தத்தைப் பிரயோகித்த போது தமிழ் மக்கள் வழங்கிய பெரும் அர்ப்பணிப்புடன் கூடிய பெரும் ஆதரவே அவரை உறுதியாகப் போராட்டத்தைத் தொடரவும் அதன் பின் தன்னை வளர்த்தெடுத்துக் கொள்ளவும் காரணமாகியது. அதாவது இந்திய அரசு சிறிலங்கா அரசினதும் சில ஆலோசகர்களதும் தவறான கருத்துக்களுக்குச் செவிமடுத்ததன் விளைவே, அது பெரும் இராணுவ இராஜதந்திர அரசியல் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலையை உருவாக்கியது.



இவ்வாறு மக்களின் உளப்பூர்வமான ஆதரவு தற்பொழுது விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பதை தற்போதைய நிகழ்வுகளும் நிருபிப்பதாகவே உள்ளன. அதாவது விடுதலைப் புலிகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டிற்கும் விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்யக் கூடாது என்ற கோரிக்கைக்கும் தமிழ் மக்கள் ஏகோபித்த ரீதியில் வழங்கி வரும் ஆதரவு ஒன்றே தமது பிரதிநிதியாக விடுதலைப் புலிகளையே தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

தமிழ்ச் சமூகம் தேசியத் தலைவர் பிரபாகரன் மீது இவ்வாறான பற்றுதியும் நம்பிக்கையும் கொண்டிருப்பதானது ஏதோவொரு மாயையின் பாற்பட்டதல்ல. இலங்கையின் தமிழ்த் தேசிய இனத்தின் பாதுகாப்பிற்கும் வாழ்விற்கும் சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்பு நடவடிக்கையில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் ஆற்றல் திறன் என்பவை அவரிடம் மட்டுமே உள்ளது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே ஆகும். அத்தனை தூரம் தலைவர் பிரபாகரனின் இலட்சியப் பற்றில் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். மக்களின் இந்நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் தலைவர் பிரபாகரனும் நடந்து கொண்டுள்ளார். எத்தகைய அரசியல் இராஜதந்திர முயற்சிகளில் அவர் ஈடுபட்ட போதும் அதற்கு இடமளிக்கும் போது மட்டுமல்ல எத்தகைய இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய போதும் தமிழ் மக்களின் உரிமை என்ற ரீதியில் அவர் எத்தகைய விட்டுக் கொடுப்புகளிற்கும் தயாராக இருக்கவில்லை. இதற்கென அவர் தனது உயிரையே அர்ப்பணிப்புச் செய்யக் கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளவும் அவர் தயங்கியதில்லை. இதற்கு இந்திய இராணுவத்துடன் யுத்தத்தைத் தொடங்குவது என அவர் எடுத்த தீர்மானமே போதுமான எடுத்துக் காட்டாகும்.

தலைவர் பிரபாகரனின் இவ்வுறுதியையும் இலட்சியப் பற்றையும் அவரை விரும்பாதவர்களால் கூட நிராகரித்துவிட முடியவில்லை. இந்த வகையில் தலைவர் பிரபாகரன் குறித்து கொழும்பிற்கான முன்னாள் இந்தியத் தூதுவர் கே.என்.டிக்சிற் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'அவர் கட்டுப்பாடு உடைய ஒழுக்க சீலர். எளிமையானவர். ஈழத் தமிழ் மக்களின் விடுதலையில் ஆழமான பற்றுறுதி கொண்டவர். அவர் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதும் அந்த மனிதனிடம் உள்ளீடான இலட்சிய நெருப்பும் கொள்கை உறுதியும் உண்டு.'

இதனை மேலும் உறுதி செய்கிறார், தலைவர் பிரபாகரனை நன்கு உணர்ந்து கொண்டவரான பத்திரிகையாளர் அனிதாப் பிரதாப். அவர் தலைவர் பிரபாகரன் பற்றிக் குறிப்பிடுகையில், 'அவரது ஆழப் பதிந்த பேச்சுக்களுக்கு அப்பாற்பட்ட ஈழம் பற்றிய தளர்ச்சியற்ற ஈடுபாடு எனக்கு அவர் பற்றிய ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது' எனக் குறிப்பிடுகிறார்.

இந்த வகையில் தலைவர் பிரபாகரன் அவர்கள், தம் மக்களுக்காகவும் இனத்திற்காகவும் எத்தகைய தியாகங்களையும், அர்பணிப்புக்களையும் செய்யத் தயாராக உள்ள அதே சமயம் அவர் தம் மக்கள் மீதும் தமிழ் மக்களின் போராட்டத்தில் உள்ள தார்மீக ரீதியிலான நியாயப்பாடு குறித்தும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளார். இதுவே, அவரைத் தமிழ் மக்களின் அபிமானத்திற்கும், நம்பிக்கைக்குமுரிய தேசியத் தலைவர் என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது.

நன்றி
ஏரிமலை

# "தமிழருக்கு என்ன அறிவு வேண்டிக் கிடக்கிறது?"

1981 ஜூன் 1ந் திகதி இலங்கைத் தமிழர் வாழ்வில் திருப்பங்களை ஏற்படுத்திய நாட்களில் ஒன்று. அன்று இலங்கை அரச படையினரால் யாழ்ப்பாண நூலகம் தீயிடப்பட்டது. உலகிலேயே நூலகத்திற்கு தீ வைத்த படையினர் இலங்கையில் தான் இருக்கிறார்கள். சொந்த மக்கள் மேல் குண்டு மழை பொழியும் படையினரும் இலங்கையில் தான் இருக்கிறார்கள். அந்நிய

அரசு 1994இல் பதவிக்கு வந்த போது யாழ் நூலகம் கட்ட செங்கல் சேர்க்கிறோம் என்று உவகை ஏற்றிக் கொண்டிருந்தது. இன்று வரை ஒரு செங்கல் கூட யாழ் நூலக வளவுக்குள் வந்து சேர்ந்ததாகச் சரித்திரம் கிடையாது.

இந்த யாழ் நூலக எரிப்புச் சம்பவம் அடிக்கடி திருகோணமலையில் இடம்பெறும் வன்செயல்கள் என்பவை அவன் மனத்

வரிக் கவிதையை பத்திரிகைத் தாளின் கார்பக்கத்துக்கும் கூடுதலான அளவுக்கும் பெரிதாகப் போட்டிருந்தார். சுதந்திரனில் வெளிவந்த கவிதைகளில் மிகப்பெரிய எழுத்தில் வெளிவந்த கவிதை அவனுடைய தாகத்தான் இருக்கும் என அவன் நம்புகிறான்.

இத்தகைய உறவுகளின் காரணமாக "உங்கள் தமிழ் ஈழ

# -தமிழீழ விடுதலை அணி என்றொரு புதிய அமைப்பு-

நாட்டுடன் போர் நடத்துவது போல பரபரப்புக் காட்டிக் கொண்டு சொந்த மக்களுக்கெதிராக பலத்த இராணுவ படையெடுப்புக்களை நடத்தி மகிழ்ந்து கொண்டிருக்கும் அரசாங்கம் கூட இலங்கையில் தான் இருக்கிறது.

யாழ்ப்பாண நூலகம் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகச் சிறந்த நூலகம் என்றும் அரிதான தகவல்களைக் கொண்டிருந்த நூலகம் என்றும் புகழ் பெற்றிருந்தது. 98 ஆயிரத்துக்கு மேற்பட்ட அரிய நூல்கள் அந்த நூலகத்தில் அப்போது இருந்தன.

தரப்படுத்தல் மூலம் தமிழ



மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவுக்கு வேட்டு வைத்த அரசின் படைகள் "தமிழருக்கு என்ன அறிவு வேண்டிக்கிடக்கிறது." என்று நினைத்ததாலோ என்னவோ யாழ் நூலகத்தையும் தீயிட்டு நாசப்படுத்தியது. யாழ் நூலகம் அரச படைகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட அந்த வேளையில் காமினி திஸாநாயக்கா உட்பட இரு அமைச்சர்கள் யாழ்ப் பாணத்தில் தங்கியிருந்தார்கள். காமினி திஸாநாக்கா சிறிய முயற்சி எடுத்தாற்கூட யாழ் நூலக அழிப்பைத் தடுத்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக

**அருண்**

இந்தச் செய்கைக்கு ஆதரவாளர் போல் தென்பட்டார்.

**யாழ் நூலகம் தீயில் நாசமடைந்தது என்ற செய்திகேட்டு தாவீது அடிகளார் தனது உயிரையே விட்டார்.**

அந்தத் தமிழ்த் துறவி 30 பாஷைகளுக்கு மேல் நன்கு எழுதப்படிக்கத் தெரிந்தவராகவும் அதைவிடக் கூடுதலான பாஷைகள் பேச வல்லவராகவும் இருந்தார் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். யாழ் நூலகத்தின் இழப்புடன் இலங்கைத் தமிழினம் தாவீது அடிகளாரின் மறைவின் மூலம் ஒரு நடமாடும் பல்கலைக்கழகத்தையும் இழந்து போனது. பின்னர் இது சம்மந்தமாக நியமிக்கப்பட்ட லயனல் பெர்னான்டோ தலைமையிலான குழுவொன்று யாழ் நூலகத்துக்கு அரசு ஒரு கோடி ரூபா வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருந்தது. இன்றுவரை அந்த இழப்பீடு வழங்கப்படவில்லை.

தற்போதைய சந்திரிகா

திலுள் ஆழமான வடுவை ஏற்படுத்தி விட்டிருந்தன. தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தும் எவ்வித பலனும் கிட்டவில்லையென்பது இலங்கை ஜனநாயகத்தில் மேலிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் சிதைந்து போக காரணமாக இருந்தது. புதிய பாதையில் இலங்கை அரசுக்குத் தமிழரின் பிரச்சினை

விடுதலை அணி என்ன செய்கிறது?" என்ற கேள்வியுடன் கோவை மகேசனுக்கு 1982 நடுப்பகுதியில் அவன் ஒரு கடிதம் எழுதினான். அதற்கு கோவை மகேசன் அவர்கள் அவனுக்கு பதில் கடிதம் ஒன்றை அனுப்பிருந்தார். அதில் தமிழ் ஈழ விடுதலை அணி வடக்கு கிழக்கு எங்கும் வியாபிக்க எண்ணங் கொண்

**உலகிலேயே நூலகத்திற்கு தீ வைத்த படையினர் இலங்கையில் தான் இருக்கிறார்கள். சொந்த மக்கள் மேல் குண்டு மழை பொழியும் படையினரும் இலங்கையில் தான் இருக்கிறார்கள்.**

பற்றிக் கூற முற்பட்ட இளைஞர்களின் பாதைதான் சரிபோல் தெரிந்தது. அந்தப் பாதையில் புகுந்த இளைஞர்களை அவன் உளமார வாழ்த்திக் கொண்டிருந்த, அதே வேளையில், தமிழர் விடுதலைக் கூட்டணி மேல் நம்பிக்கை இழக்காதவனாகவே இருந்தான்.

இந்த வேளையில் **தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையின்**

டிருப்பதாகவும் திருகோணமலையில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தால் தாங்கள் வந்து கொள்கை விளக்கமளிப்பதுடன் சந்தேகங்களைத் தீர்க்க முடியும் என்றும் எழுதியிருந்தார். அத்துடன் திருகோணமலைக் கவிராயரும் இவ் விடயத்தில் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் அவருடன் கலந்துபேசி கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யும் படியும் கேட்டிருந்தார்.



**தீவிரமின்மையால் மனந்தளர்ந்த இரண்டாம் மட்டத் தலைமையைச் சார்**

அவனைப் பொறுத்த மட்டில் இந்தக் கருத்துக்கள் ஏற்றுக்

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

**ந்த சிலர், தமிழீழ விடுதலை அணி என்ற பெயரில் அமைப்பொன்றை நிறுவிச் செயல்படத் தொடங்கினர்.** இதில் ஈழவேந்தன், கோவை மகேசன் போன்றவர்கள் முன்னணியில் இருந்தார்கள். கோவை மகேசன், சுதந்திரன் ஆசிரியர் என்ற வகையில் அவனுக்கு மிக நெருக்கமானவராகவே இருந்தார். தமிழ் ஈழத் தீர்மானத்தை அமிர்தலிங்கம் கண்டித்த போது கிளர்ந்தெழுந்த கோபத்தை அவன் எட்டு வரிக் கவிதையாக வடித்து சுதந்திரனுக்கு அனுப்பியிருந்தான். கோவை மகேசனும் அவன் மேல் இருந்த விருப்பும் அமிர்தலிங்கத்தின் மேல் எழுந்த வெறுப்பும் சேர்ந்ததாலோ என்னவோ அந்த எட்டு

கொள்ளத் தக்கவையாக இருக்கவில்லை. இலங்கையில் தமிழர் அரசியலைப் பொறுத்தமட்டில் "தமிழர் விடுதலைக் கூட்டணியில் வேகங்காணாது, செயற்பாடுகள் போதாது" என்று மனதாரத் தீர்மானிக்கும் ஒரு தமிழ் மகன், ஜனநாயகம் பேசும் வேறெந்தக் கட்சியிலும் சேரவோ, புதிய கட்சி ஆரம்பிக்கவோ கூடாதென்றுதான் இன்றுவரை நம்புகிறான். தமிழர் விடுதலைக் கூட்டணியால் வெறுப்புற்று ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் எந்த அணியில் இருந்தபோதிலும் அவன் அன்று மதித்தான். காலப்போக்கில் அணிகள் தங்களுக்குள் மோதிக்கொண்டபோது அவன் நெஞ்சங் கலங்கினான்.

**தமிழரின் அடிமைத் தளையை அறுத்துவிட வேண்டும் என்றுதான் இளைஞர்கள் புறப்பட்டார்கள். இயக்கங்களின் கொள்கைகளை அலசியோ, நடைமுறைகளை அனுசரித்தோ ஆரம்ப காலங்களில் அவர்கள் சேரவில்லை. இன்றுள்ள நாட்களை விட அன்று போராளிகள் ஆபத்து நிறைந்த நிலையில் இருந்தார்கள். எந்தப் பாதுகாப்பான இடமும் அன்றைய போராளிகளுக்குத் தளமாக இருக்கவில்லை.**

(தொடரும்.....)

# அந்நியத் தலையீடு எனும் அவலம்

**பூ**மிப்பந்திலே புதிய தேசங்களாக மிளிரும் பல தேசங்களும் மகத்துவமான சுதந்திரத்தை ஈட்ட நடத்திய விடுதலைப் போராட்டங்களில் காலத்துக்கு காலம் பல்வேறு போராட்ட பரிணமிப்புக்களை நிகழ்த்தியுள்ளமையை வரலாறு எடுத்தியம்புகிறது.

பல நாடுகளிலும் அடக்குமுறைக்குட்பட்ட மக்கள் குழுமம் ஆரம்பத்தில் அமைதி வழியிலே நியாயம் கேட்டமை கொடூரமான முறையிலே ஒடுக்குமுறை அரசுகளால் வன்முறையால் ஒடுக்கப்பட்டதால் தம்மைத் தற்காதுக் கொள்ள மாற்றுவழி ஏதுமின்றி ஆயுதப் போராட்டத்தில் இறங்கியமையே வரலாறு.

பேச்சுவார்த்தைகள் நடைபெற்றமை இதற்கு அண்மைய எடுத்துக் காட்டாகும்.

1972ம் ஆண்டு 'மியூனிச்' நகரில் சர்வதேச ஒலிம்பிக் கிராமம் மீது தாக்குதலை நடத்தி யூத விளையாட்டு வீரர்களது உயிருக்கு உலை வைத்தமை போன்ற "பயங்கரவாத" செயல்களில் ஈடுபட்ட பலஸ்தீன போராளிகளுடன் யூத, இஸ்ரேல் அரசு நோர்வே மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி 1994இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்தமையும் நினைவூட்டத்தக்கது.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் அண்மைக்காலமாக

## எழுச்சிக்குரல்

இத்தகைய விடுதலைப் போராட்டங்கள் மக்கள் மயப் படுத்தியதாகப் பரிணமித்தமையும் இராணுவத் தாக்குதல் வழிமுறைகளை பேரம் பேசும் ஆற்றலை பலப்படுத்தியவாறு அரசியல் இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்தமையும் உரிமைப் போராட்டங்களுக்குப் பரவலாக வெற்றியீட்டிக் கொடுத்திருக்கிறது. இவ்வாறான உள்நாட்டு

**கோ.துரைகுமாரன்**

விடுதலைப் போராட்டங்களில் சர்வதேச சமூகம் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்காடுத்திருப்பதைப் பரவலாகக் காணலாம்.

கடந்த வாரம் கூட, நோர்வேயின் தலைப்பட்டினமான ஒஸ்லோவில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பிலிப்பீன்ஸ் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் அந்நாட்டின் மாவோயிஸ் விடுதலைப் போராட்டக் குழுவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் மூன்றாந்தரப்பினூடாக சமாதானப்

ஈழத்தமிழரின் அபார அரசியற் போரியற் சாதனைகளால் மூன்றாந் தரப்பு ஏற்பாட்டுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கான முன்னெடுப்புக்களைப் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளும் "சிவப்புச் சட்டை" க் காரர்களும் "அந்நியத் தலையீடு வேண்டாம்!" என்று எதிர்ப்பது வேடிக்கையாக அமைகிறது.

வெளிநாட்டுத் தலையீட்டை சமாதானத்துக்கு ஏற்க மறுக்கும் இதே பேரினவாதிகள் விடுதலைப் புலிகளிடம் யாழ் நகர் வீழ்ச்சியுற இருந்த போது "ஸ்ரீலங்காப் படையினரை மீட்க இந்தியப் படையினரை அனுப்ப வேண்டும்" என அழுது புலம்பியிருந்தமையும் நினைவுக்கு வந்து நின்ற வேளையிலே, "சிசில் இராஜேந்திரா" என்ற மலேசிய நாட்டுக் கலைஞரின் கவிதை மிகப் பொருத்தம் கொண்டு "எழுச்சிக் குரல்" ஆக ஒலிக்கிறது.

***"அவனது ஹோட்டல் தொடர்களை***
***நடத்துபவர்கள் ஆஸ்திரியர்கள்***
***அவனது ப்ரல் பண்ணைத் திட்டத்தை***
***மேற்பார்வையிடுபவர்கள் ஆஸ்திரேலியர்கள்***

***அவனது மின்னணுத் தொழிற்சாலையைக்***
***கட்டுப்படுத்துவது ஜப்பானியர்கள்***
***அவனது டின்மீன் தொழிற்சாலைக்கு***
***ஆலோசகர்கள் சீனர்கள்***

***அவனது திருவோட்டிற்கு***
***நிதிப்பிச்சையளிப்பதுஅமெரிக்கா***
***அவனது கார்களுக்கு எரிபொருள் நிரப்புவது அரபு***
***ஐக்கிய எமிரேட்***

***அவனுக்குப் பேராசிரியர்களை***
***ஏற்றுமதி செய்வது 'யுனைட்டட் கிங்டம்'***
***அவனது கால்பந்தாட்ட வீரர்களுக்குப்***
***பயிற்சி அளிப்பது ஜேர்மனி***

***ஆனால்***
***நாட்டிலுள்ள தடுப்புக் காவல் சாவுகள் பற்றி***
***போலிஸ் அராஜகம் பற்றி***
***சிறைக்கற்பழிப்புகள் பற்றி***
***ஒரு சர்வதேசக் குரல்***
***ஒலிக்கத் துவங்கும் போது***
***அவன் குதிக்கிறான்***
***வானத்திற்கும் பூமிக்கும்***
***அந்நியத் தலையீடு என்று"***

# சரித்திரம் போற்றும் மாணவர் எழுச்சி

## 'சொவெட்டோ' மாணவர் கிளர்ச்சி

**துரை-மேகநாதன்**

**அ**நீதியான அடக்குமுறை ஆட்சிக்கெதிராக நீதி கேட்டு உரிமைப் போராட்டத்தைப் பல் வகையிலும் மக்கள் மயப்படுத்தியதாக முன்னெடுத்தன் மூலம் முந்நூறு ஆண்டு காலத்துக்கு மேற்பட்ட "இன ஒடுக்கல்" அடிமை வாழ்வை துடைந்தெறிந்து இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றனர் தென்னாபிரிக்க மக்கள்.



**ஆர்ப்பாட்டத்தை அடக்க கவச வாகனத்தில் வரும் வெள்ளைப் படைகள்**

தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டமானது அரசியல்-இராஜதந்திர வழிமுறைகள் மூலமாகவும் அமைதிவழியானதும் வன் முறை வடிவிலானதுமான போராட்டங்களாலும் மக்கள் எழுச்சிகளாலும் "விடுதலை"எனும் இலக்கை நோக்கி முன்னெடுக்கப்பட்டிருந்து..

தென்னாபிரிக்க விடுதலைப் போராட்ட வாரலாறானது மக்கள் எழுச்சிகள், மாணவர்களது போராட்டங்கள் மற்றும் போராட்டத் தலைவர்களது சிறையிருப்புக்கள் என எண்ணற்ற முக்கிய நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தகைய நிகழ்வுகளுள் மாணவ சக்தியின் மகத்துவங் கூறும் எழுச்சியாக இடம் பெற்ற "சொவெட்டோ மாணவர் கிளர்ச்சி" இன் இருபத்தைந்தாவது வருட நினைவு நாள் நேற்று ஆகும். அதையொட்டி சில வரலாற்று செய்திகளை நினைவூட்டிக் கொள்வதும் பகிர்ந்து கொள்வதும் காலத்திற்குப் பொருத்தமானதாகிறது.

தென்னாபிரிக்க சுதந்திர போராட்டமானது 1912 ஆம் ஆண்டில் "தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ்"**(AFRICAN NATIO NAL COGRESS-ANC)** இன் தோற்றத்துடன் தாபனப்படுத்தப்பட்டதாக மாறியது. கறுப்பினத்தவரின் உரிமைகள் மற்றும் தேசிய ஒற்றுமைக்காக நிறுவப்பட்ட இவ் அமைப்பு 1960 மார்ச்சில் வெள்ளையின நிறவெறி அரசால் தடை செய்யப்படும் வரை அமைதி முறையிலான போராட்ட வடிவங்களையே மேற்கொண்டிருந்தது.

ANC ,ன் இராணுவ அமைப்பு UMKHONTO WE SIZWE' என்பது நெல்ஸன் மண்டேலா தலைமையில் 1962 இல் அவர் சிறைப்படும் வரை இயங்கி வந்தது. இவ் அமைப்பினது பெயரின் தமிழ் அர்த்தம் "தேசத்தின் ஈட்டி" (SPEAR OF THE NATION) என்பதாகக் கொள்ளப்படும். (இவ் அமைப்பானது குறிப்பிடும் படியாக "பெரிதாக " இராணுவ தாக்குதல்கள் எதுவும் செய்ததாக விபராமாக அறிய முடியவில்லை)

பெரிதாக இராணுவ தாக்குதல்கள் விடுதலைப் போராளிகளினால் நிகழ்த்துப் படாத போதிலும், அவ்வப்போது மக்கள் குறிப்பிடத்தக்க எழுச்சிகளை செய்தே வந்துள்ளனர். 1809 இல் முதன் முறையாகக் கொண்டுவரப்பட்ட "பாஸ் சட்டத்தை " **(PASS LAW)** தென்னாபிரிக்க மக்கள் பரவலாக எதிர்த்தனர். பதினாறு வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய கறுப்பினத்தவர்கள் "பாஸ்" உடனே நடமாட வேண்டுமென்ற அடக்கு முறையை எதிர்த்து 1960 மார்ச் 21 இல் "ஷார்ப்வில்" **(Sharpeville)** நகரக் காவல்துறைப் பணியகத்துக்கு வெளியில் குழுமி அமைதி முறையில் ஆர்ப்பாட்டம் செய்த ஐயாயிரத்துக்கும் மேலான நிராயுத பாணிகள் மீது ஆயுதம் தாங்கிய நிறவெறி காவல் துறையினர் மேற்கொண்ட கண்மூடித் தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 69 கறுப்பினத்தவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர். இதைத் தொடர்ந்தே "தேசத்தின் ஈட்டி" தோற்றம் பெற்றது. இத் தினத்தை ஒட்டி தற்போது மார்ச் 21 சர்வதேச இன ஒடுக்கலுக்கு எதிரான தினம் ஆக அனுஷ்டிக்கப் படுகின்றது.

இத்தகைய திட்டமிட்ட இன்னுமொரு ஒடுக்குமுறைச் சட்டமாக 1955 இல் "பாண்டு கல்விச்சட்டம்" **(Bandu Education Act)** அமுல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் பிரகாரம் பள்ளிகளின் ஆங்கில மொழிக்குப் பதிலாக "டச்சு" மொழியிலிருந்து விருத்தி செய்யப்பட்டதான "ஆப்ரிக்கான்ஸ்" **(Afrikaans)** என்று வேற்று மொழியே கற்பிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டது. (ஸ்ரீலங்காவில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவினால் 1956.06.05 இல் சமர்ப்பிக்கப்பட்ட "தனிச் சிங்களச் சட்டம்" போன்று)

இவ் அநீதியான மொழி அடக்கு முறையை வன்மையாக கறுப்பின மாணவர்கள் எதிர்க்க தலைப்பட்டனர். 1969ல் ஆரம்பிக்கப்பட்ட "கறுப்பு விழிப்புணர்வு" **(Black Consciousness)** எனும் அமைதி வழியிலான எதிர்ப்பியக்கம் காரணமாகக் கறுப்பின மாணவர்களும் இளைஞர் யுவதிகளும் அரசியல் விழிப்புணர்வு நிரம்பப் பெற்றவர்களாக தாயகப் பணியாற்ற தலைப்பட்டிருந்தமை இவ்விடத்தில் நினைவிற்கொள்ளப்பட வேண்டும்.

பல்கலைக்கழக கறுப்பின மாணவர்களைப் பின்தளமாகக் கொண் **"BLACK CONSCIOUSNESS"** எதிர்ப்பியக் கத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க தலைவராக "ஸ்டீவ் பைக்கோ" **(STEVE BIKO)** விளங்கியிருந்தார். இவர் பின்னர் நிறவெறி அரசின் காவல்துறையின் சிறையில் இருக்கையில் 1977 செப்டம்பர் 12இல் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. "கறுப்பு விழிப்புணர்வு" காரணமாகக் கறுப்பின மாணவர்கள் தமது வரலாறு, பண்பாடு தொடர்பாக பெருமிதம் கொண்டதுடன் தாம் வெள்ளையினத்தவருக்குச் சளைத்தவர்களல்ல என்றும் எழுச்சி கொள்ளலாயினர்.

இப்பின்னணியில், "ஆப்ரிக்கன்ஸ்" **(AFRICAANS)** மொழி ஒடுக்கு முறையை எதிர்த்து அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைதி முறையிலே மாணவர்கள் எழுப்பிய எதிர்ப்புக் குரலை நிறவெறி அரசாங்கம் அசட்டை செய்தது. இந்நிலையிலே, 1976 ஜூன் 16 ஆந்திகதி "சொவெட்டோ" **(SOWETO)** நகரத் தெருக்களில் சாலை சாரைசாரையாக கறுப்பின பள்ளி மாணவ மாணவிகள் 15,000 பேர் அணிவகுத்து கண்டனப் பதாகைகளை ஏந்தியவாறும் எதிர்ப்புக் கோஷங்களை ஒலித்தவாறும் "ஓர்லண்டோ" **(ORLANDO)** கனிஷ்ட கல்லூரி வளாகத்தில் ஒன்று கூடியிருந்தனர்.



**பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியான 12 வயதுச் சிறுவன், ஹெக்டர் பீற்சனை மற்றொருவர் தூக்கிச் செல்கிறார்**



**ஆத்திரத்தில் அரச வாகனங்களுக்குத் தீயிடும் புரட்சியாளர்கள்**

என்றுமில்லாத இப் பிரமாண்ட கண்டனப் பேரணியைக் கண்டு கிலி கொண்டது வெள்ளையின நிறவெறி அரசு. இந்நிலையில் அரசாங்க வெள்ளையின காவல்துறை அமைதிவழியில் நியாயம் கேட்ட பள்ளி மாணவர்கள் மீது மிகவும் கோழைத் தனமாகக் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. இதில் தாயகத்தை நேசித்த பன்னிரெண்டு வயதுப் பாலகனான "ஹெக்டர் பீற்றசன்" **(HECTOR PETERSEN)** முதற்பலியானான். வெறும் குப்பை மூடிகளையும் வாளிகளையும் "கவசத் தடுப்புக்களாகக்" கொண்டு மாணவர்கள் அஞ்சாது தொடர்ந்த போராட்டம் மாதக் கணக்காக நாடளாவிய ரீதியில் நிறவெறி அரசின் மீதான கடும் எதிர்ப்பாக வெளிப்பட்டது. தென்னாபிரிக்க நிறவெறி அரசின் கொடூரத்தை சர்வதேச சமூகத்திற்கு இனங்காட்டிய "சொவெட்டோ மாணவர் கிளர்ச்சி" யில் சுமார் அறுநூறு பள்ளி மாணவர்கள் பலியாகியிருந்தனர்.

இத்தகைய எழுச்சிகள் மூலம் விடுதலை ஓர்மம் நிரம்பப் பெற்றவர்களாக பரவலான மக்கள் எழுச்சியை உண்டுபண்ணி ஈற்றில் 1990களில் தென்னாபிரிக்க மக்கள் நிஜமான சுதந்திர தேசத்தவர்களாயினர்.

நேற்றைய தினம் "சொவெட்டோ மாணவர் கிளர்ச்சி" இன் 25வது வருட நினைவு நாளாகும். இத் தருணத்தில் "டெனிஸ் ப்றுாட்டஸ்" **(DENIS BRUTUS)** என்ற தென்னாபிரிக்க கவிஞர் 21.03.1976 இல் நிகழ்ந்த "ஷார்ப்வில்" படுகொலையை நினைந்தெழுதிய

**"ஷார்ப்வில் பற்றி முக்கியமானது ஏதெனில்**
**அங்கு எழுபதுபேர் இறந்தது அல்ல;**
**ஷார்ப்வில்லின்**
**முதுகினில் குண்டு பாய்ந்த நாளை**
**நினைவு கூர்க.**
**ஏனெனில் அது வேறெதையும் விடத் தெளிவாக**
**ஒடுக்கு முறையையும்**
**சமுதாயத்தின் தன்மையையும்**
**உருவகப்படுத்துகிறது**
**ஷார்ப்வில்லை நினைவு கூர்க.**
**விடுதலைக்கான தணியாத**
**ஆர்வத்தையும் நினைவு கூர்க.**
**இறந்தோரை நினைவு கூர்க.**
**மகிழ்வுறுக!"** என்ற கவி வரிகளை நினைவு கூருவது எமக்கும் பொருந்தும்!

# மதம் கொள்ளும் 'மதம்'

எஸ். யேசு
களுவாஞ்சிகுடி

"மதம் மக்களின் அபின்" என்றார் "கார்ல்மாக்ஸ்" அவருடைய பொது உடமைத் தத்துவங்களுடன் ஒத்துப்போகாதவர்கள் கூட மேற்குறிப்பிட்ட அவருடைய கூற்றை ஏற்றுக் கொள்வார்கள்.

பிறக்கும் போது ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவே பிறக்கின்றான். ஆனால் ஒரு குழந்தை பிறந்தவுடனேயே அதன் மீது மதம் என்னும் பச்சை குத்தப்படுகின்றது.

குழந்தைப் பருவத்தில் அதன் ஏழு வயதுக்குள் போதிக்கப்படும் எதுவும் அந்தக் குழந்தையின் மனதில் பசுமரத்தாணி போல் ஆழப்பதிந்து விடுவதாக உளவியலாளர்கள் கூறுவர்.

அந்த வகையில் அந்தக் குழந்தையின் பெற்றோர் எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருக்கின்றனரோ அந்த மதத்தின் நம்பிக்கைகளுடன் அக் குழந்தை வளர்க்கப்படுகின்றது. இதனால் அக்குழந்தையின் சுய சிந்தனை மழுங்கடிக்கப்படுவதாகவும் கருதப்படுகிறது.

எப்படி இருந்தபொழுதும் மனிதர்களை மனிதர்கள் வாழும் நெறி அமைப்பதற்கே மதங்கள் உருவாகின.

அன்று கிறிஸ்தவ மதப் பிரிவுகள் எமது பகுதியில் காலூன்றுவதற்கு அந்த நேரம் இங்கு நிலவிய இந்து மதக் காவலர்களின் சாதியக் கோட்பாடுகளின் மீதான பற்றுதலே காரணமாகும். தாழ்த்தப்பட்ட மக்களை கடவுளிடம் நெருங்க விடாது கோயில் கதவுகள் மூடி சாத்தப்பட்டிருந்த கால கட்டத்தில் ஆலயங்கள் தமது கதவுகளை அகலத் திறந்துவிட்டன.

சமுகத்தில் வேரூன்றிவிட்ட நச்சுத் தாவரங்களான சாதிப்பாகுபாடு, பெண்ணடிமைத்தனம் போன்றவற்றுக்கு வேத நூல்களை துணைக்கழைப்பது வேதங்களுக்கே மாசு கற்பிக்கும் செயலாகும்.

பெரும்பாலான நவீன மதங்கள் ஆண் தலைமையாட்சி சமுதாய முறைமையைச் சார்ந்தவை. இவை ஆணின் அதிகாரத்தின் மேலோங்கிய தலையாய அதிகாரமாக கொள்ளுகின்றன. நிறுவன மயமாக்கப்பட்ட மதங்கள் உருவாவதற்கு முன்னர் பெண் வலிமைத் தத்துவம் படிப்படியாக பலவீனப்படுத்தப்பட்டு பெண் தெய்வங்களின் இடங்கள் ஆண் தெய்வங்களால் நிரப்பப்பட்டு விட்டன.

பிரதான ஆண்களினாலும் ஆக்கப்பட்டு, விளக்கம் கொடுக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளன.

அவர்களே நல்லொழுக்கம், நீதிநெறி நடத்தை என்பவற்றுக்கும் சட்டத்திற்கும் கூட வரைவிலக்கணம் வகுத்துள்ளனர். அவர்களே ஆண்களதும், பெண்களதும் கடமைகளையும், உரிமைகளையும், வகுத்துள்ளதுடன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் விதித்துள்ளனர். பெண்களை தாழ்ந்தவர்களாகவும், தூய்மை குன்றியவர்களாகவும், பாவிகளாகவும் ஏறத்தாழ பெரும்பாலான மதங்கள் கருதுகின்றன.

நல்லொழுக்கம், நடத்தை என்பன தொடர்பாக அவை எவ்வாறு இரட்டை நியாயங்களை உருவாக்கியுள்ளது என்பதையும் நெறி பிறழ்ந்த பெண்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகிப்பதை எவ்வாறு மதச் சட்டங்களை பெரும்பாலும் நியாயப்படுத்துகின்றன என்பதையும், நியாயமற்ற தொகுப்புகள் மதக் கோட்பாடுகளையும், அடிப்படைக் கொள்கைகளையும் ஆதாரம் காட்டி எவ்வாறு அங்கிகரிக்கப்பட்டு சட்ட ரீதியாக சரி என்று சொல்லப்படுகின்றன என்பதையும் காட்டுவதற்கு இன்று போதியளவு பகுப்பாய்வுகள் உண்டு.

இன்று மத விவகாரம் தொழில் ரீதியாகவே வளர்ந்துவிட்டது. பிறப்பில் ஒவ்வொருவரும் மனிதனாகத்தான் பிறக்கின்றான். சாதித் துவேசத்தை ஏற்படுத்திக் கொண்டவனே மனிதன் தான். எதற்கும் மதத்தையும், சாத்திரத்தையும், துணைக்கு வைத்துக்கொள்ளும் மனிதர்கள் அதையும் தொழில்முறையாகவே மத வாதிகளின் ஆதரவுடன் வளர்த்துக் கொண்டனர். சாதிப் பிரச்சினை வந்ததே தொழில் அடிப்படையில் தான். எதிலும் பொருளாதாரமும், சுய நலத்தனமும் ஒட்டிக் கொண்டே உள்ளன.

எம் மக்கள் இருக்க வீடு இன்றி உள்ளனர். உணவின்றி, உடுக்க உடை இன்றி வீதிகளில் அலையும் போது கடவுளுக்கு மட்டும் வானுயரக் கோபுரங்கள் கட்டி அழகு பார்த்து இறைவனடி சென்று அடைந்து விட்டோம் என நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் சிலர். இவர்களுக்கு இன்னும் இறைவனுக்கு செய்யும் தொண்டு எதுவெனத் தெரியாது இருப்பது வேதனை தரும், வேடிக்கை தரும் விடயங்களாக உள்ளன.

இதனால்த் தான் இன்று மேற்குலகிலும், கிழக்குலகிலும் சமய நம்பிக்கைகள், அவை காட்டிய வழிமுறைகள் இளைய தலைமுறையினரிடம் கேள்விக்குறிகளை தோற்றுவித்துக் கொண்டுள்ளன என்று எமது பகுதியிலும் இளம் தலைமுறையினரிடம் புதிய மாற்றங்களை காணமுடிகின்றது. இவர்களிடம் கல்வி வளர்ச்சியும், புதிய சிந்தனைகளும், விழிப்புணர்வும் ஏற்பட்டு வருவதால் தற்போது இவைகள் ஓரளவு மறைந்து வருவதையிட்டு நிம்மதியும், மகிழ்ச்சியும் அடையக் கூடியதாகவும் வரவேற்கக் கூடியதாகவும் உள்ளது.

ஆனால் இன்று மனிதனை நல்வழிப்படுத்த வேண்டிய மதங்களே மனிதனுக்குள் உறங்கிக் கிடக்கும் மிருக உணர்வுகளை தட்டியெழுப்பி மத வெறியை ஊட்டுவது வேதனைக்குரியது. அன்றைய சிலுவை யுத்தத்தில் இருந்து இந்திய அயோத்திப் பிரச்சினை பல குண்டு வெடிப்புக்கள் வரை பல விலை மதிக்க முடியாத மனித உயிர்களை பலி வாங்கியதாக



மதங்களினதும், மதக் குழுக்களினதும் சாதனைப் பட்டியல் நீள்கிறது. மற்றும் உலகின் பல நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கும் கொடிய யுத்தங்கள் மனிதப் படுகொலைகளுக்கும் மதங்களே நேரடியாகவும், பின்னணியாகவும் இருக்கின்றது. இதனால் அப்பாவி மக்களின் கண்ணீரும், பட்டினியும், பஞ்சமும் அதிகரித்துள்ளது. இந்த மதங்களின் கோரப் பிடிக்கு பல நாடுகள் சிக்கித் தவித்து வெளியேற முடியாமல் தவித்துக் கொண்டுள்ளன.

ஏன் இந்த மதம் பிடித்த மதங்களின் அகோரப் பசிக்கு எமது நாடும் தப்பவில்லை. இங்கு இனப்பிரச்சினை முடிவில்லாத் தீரவாய் நீழ்வதற்கும் வாழவேண்டிய இளம் தலைமுறையினரின் குருதி சிந்திக்கொண்டிருப்பதோடு அப்பாவி மக்கள் உயிர்கள் இழந்து, உடமைகளை இழந்து, அகதி வாழ்க்கையையே சொந்தமாக்கிக் கொண்டு இருப்பதற்கும், பௌத்த மதத் தலைவர்களின் அரசியல் தலையீடும், இனவாத கொள்கையுமே மிக முக்கியமான காரணங்களாக இருப்பது இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இன்றுவரை நடந்து கொண்டிருக்கும் படுகொலைகளுக்கும், கலவரங்களுக்கும் மதத் தலைவர்களே பின்னணியில் இருந்துள்ளார்கள். இருந்தும் வருவதை அண்மையில் நடந்த சம்பவ நிலைமைகள் தெரிவிக்கின்றன.

இன்று பௌத்த காங்கிரஸ் இலங்கை அரசியலில் ஒரு அழுக்கக் குழுவாகவே செயற்பட்டு வருகின்றது. இது அரசியலில் நேரடியாகப் பங்குபற்றாத போதும் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய சக்தி இவர்களிடமே உள்ளன.

சந்திரிகா அரசு சிறுபான்மையினரின் பிரச்சினையை விரும்பினால் கூட தீர்க்க முடியாத அபாய நிலை காணப்படுகின்றது. எந்தத் தீர்வானாலும் பௌத்த மதத் தலைவர்களின் ஆசியும் ஆதரவும் இருந்தால் தான் எதையும் செய்யக் கூடிய பரிதாபமான நிலை ஏற்படுகின்றது.

இதற்கு உதாரணமாக அண்மையில் அரசினால் சிறுபான்மையினருக்கு ஆதரவாக கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்ட மூலத்தை எதிர்த்து புத்தரின் போதனைகளை போதிக்க வேண்டிய பிக்குவே உண்ணாவிரதம் இருந்ததைக் காண முடிகின்றது.

மக்களை நல்வழிப்படுத்த போதிக்க வேண்டிய தலைவர்களே இனவாதத்தையும், தீய சிந்தனைகளையும் வளர்த்தால் நிலைமை என்னவாகும்?

மதங்கள் நல்ல நோக்கத்திற்காகவே ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் காலப் போக்கில் பலர் அவற்றை தமது சுயநல தேவைகளுக்காகவே பயன்படுத்தினர். பயன்படுத்தியும் வருகின்றனர். அன்றும் இன்றும் அரசியலாளர்கள் தம் ஆட்சி அதிகாரங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்கு மதங்களை கருவிகளாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பெரும்பாலும் பாதிப்பிற்குள்ளாவது மத நம்பிக்கையால் மூளைச் சலவை செய்யப்பட்ட வறிய மக்களே.

இதனால்தானோ அன்று பேரறிஞர் அண்ணாத்துரை அவர்கள் கூறினார்.

**"நான் சிலுவை அணியாத கிறிஸ்தவன் கைலி கட்டாத முஸ்லிம் திரு நீறு பூசாத இந்து சந்நியாசம் கொள்ளாத பௌத்தன"** என்று. இன்று மதங்கள் அப்பாவி மனித மரணங்கள் மீது கட்டி எழுப்பப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

✽✽✽✽✽

# மூலிகை மகத்துவம்
## துளசி

துளசி மூலிகை சாதாரணமாக எல்லா இடங்களிலும் எளிதில் பயிராகும். இதில் பல இனங்கள் உண்டு. கருந்துளசி, செந்துளசி, நாய்த்துளசி,மலைத்துளசி என பல இனங்கள் உண்டு.

இந்த மூலிகை இந்துக்களால் மிகப் புனிதமாகவும், மிகவும் சக்தி பெற்றதாகவும் விளங்குகிறது. இது 64 நோய்களைக் குணமாக்கும் சக்தி பெற்ற மூலிகையாக இருப்பதனால் இந்து ஆலயங்களிலும் நந்தவனங்களிலும் வீடுகளிலும் இதை தெய்வ அம்சம் மிக்க மூலிகையாக வளர்க்கிறார்கள். கருந்துளசியின் சாற்றைப் பிழிந்து பெரியவர்கள் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிடலாம். குழந்தைகளுக்கு 10 துளி கொடுக்கலாம். இதனால் நெஞ்சில் உள்ள சளி குறைந்து அற்றுப்போகும். இதயத்திற்கும் ஈரலுக்கும் நல்ல வலிமையைத் தந்து நல்ல பசியைத் தரும். இரத்தம் சுத்தியாக இதன் இலையை சாதாரணமாகச் சாப்பிட்டு வர இரத்தத்தில் உள்ள கிருமிகள் மடிந்து இரத்தம் சுத்தியாகும். தீராத வாய்வுகளுக்கு இஞ்சிச் சாறும் துளசிச் சாறும் சமனாய் தேன் கலந்து குடிக்க இடுப்பு வலி மூச்சுப்பிடிப்பு கழுத்து வலி முதலிய வலிகள் நீங்கும். தொடர்ந்து ஆறு நாட்கள் குடிக்க வேண்டும். இரவில் கண் பார்வை தெரியாமல் அவஸ்தைப்படுபவர்கள் துளசிச் சாற்றை இரண்டு துளி கண்களில் விட்டு வந்தால் நல்ல குணத்தைத் தரும். சூதக வாய்வு என்பது பெண்களுக்கு மாதவிடாய் சரியாய் வராமல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை போவதும் பதினைந்து நாளைக்கு ஒரு முறையாவது மாதவிடாய் ஆகும் போது வயிற்றில் வலி காண்பதும் கைகால் இடுப்பு வலி ஆவதும் விலக்காகும் போது உதிரம் அதிகமாய்ப் போவதும் கட்டியாய் விழுவதும் உதிரம் தண்ணீர் போல கறுத்து வெளியேறுவதும் ஆகும். இந்நோயை துளசி குணமாக்கிறது. ஒரு அவுன்ஸ் துளசிச் சாறும் தேனும் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர மேலே கண்ட வியாதிகள் குணமடையும். இரத்த சுத்தியும் இரப்பை இருதயம் இவைகளுக்கு வலிமையைத் தரும்.

ஆக்கம்
மூலிகை வேந்தன்
வைத்தியர் - ஸ்ரீராமநாதன்
கணவர்ணன் (கண்ணன்)

# எங்கள் தேசம்...!



எமது
மனிதர்கள்
பூபாளத்தை மறந்து
வெகு
நாட்களாகி விட்டன!

வானத்தை
அண்ணாந்து பார்த்து
நிலாப்பாட்டு
பாடுவதற்குக் கூட
எங்கள் குழந்தைகள்
அஞ்சுகின்றன!

இயந்திரப் பறவைகளும்
உலோக சாத்தான்களும்
மரண கீதமிசைக்கும்
மயான பூமியிது!

மனிதர்கள் அடிக்கடி
மண்ணுக்கு
இரத்த தானம் செய்வதால்
மழைத்துளிகள்
மண்ணின் மேனியை
முத்தமிடும் போது கூட
இங்கு மண் மணப்பதில்லை
மணப்பது.......?

எங்கள்
மண்ணில் பூக்கும்
பூக்கள் எல்லாம்
இப்போது
சிவப்பாகவே பூக்கின்றன!

கானமிசைக்கும்
குயில்கள் கூட
முகாரியிலேயே
பாடுகின்றன!

அருளானந்தன்
294, புதிய கல்முனை வீதி,
மட்டக்களப்பு

# இலக்கியம் தான் எனது அஸ்திவாரம்

## 'தென்பாண்டிச் சிங்கம்' இயக்குநர் இளையபாரதி

கலைஞரின் 'தென்பாண்டி சிங்கம்' தொலைக்காட்சித் தொடரை இயக்கிய இளையபாரதி, 'விசாரணைகள்', 'சூரியனைத் தொடாத சூரியகாந்திகள்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இப்போது 'மரணத்தின் நட்சத்திரங்கள்' எனும் கவிதைத் தொகுதியை வெளியிட உள்ளார். பல்வேறு பத்திரிகைகளில் உதவியாசிரியராக பணியாற்றியுள்ளார். சில திரைப்படப்பாடல்களை எழுதியுள்ளார். சில திரைப்படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றியிருக்கிறார். தொலைக்காட்சித் தொடர்களை இயக்கி வருகிறார். இப்படி பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட இளையபாரதி இணையத் தளம் 'சுவடி' க்காக வழங்கிய அனுபவங்களில் இருந்து.....


வறுமை, கண்ணீர், பிரச்சினை.... இதுதான் நான் பிறந்த குடும்பச் சூழல். அப்பா சாமிநாதன் சாதாரண விவசாயி. எனக்கு பத்து வயது இருக்கும் போது மாயூரம் நகராட்சிப் பூங்காவில் கலைஞர் பேசியதைக் கேட்டேன். அது, எம்.ஜி.ஆர். பிரிந்து போயிருந்த நேரம். கலைஞரின் பேச்சும், தோற்றமும் என்னை வெகுவாக வசீகரித்தன. கலைஞரின் எழுத்துக்களில் பெரிய ஈடுபாடு ஏற்பட்டது. அப்போது 'நெஞ்சுக்கு நீதி' முதல்பாகம் வெளிவந்தது. அதை நூலகத்துக்குச் சென்று தவறாமல் படித்தேன். அந்த இனம்புரியாத சின்ன வயதிலேயே எனக்கொரு வேகம் ஏற்பட்க் காரணமாக இருந்தது கலைஞர் தான்.

கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' கண்ணதாசனின் 'வனவாசம்', தொ.மு.சி. ரகுநாதனின் 'புதுமைப்பித்தன் வரலாறு', வெ.சாமிநாத சர்மாவின் 'கார்ல்ஸ் மார்க்ஸ்' இந்த நான்கு நூல்களும் தான் வறுமையிலிருந்தும், கஷ்டத்திலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் ஒரு மனிதன் மீண்டு வைராக்கியத்தோடு சாதனைகளைச் செய்ய முடியும் என்பதை மெய்ப்பித்தன. 'சிகரம்' இதழில் பணியாற்றினேன். அதுவும் நின்று விட்டது. இன்குலாப், இளவேனில் போன்றவர்களின் எழுத்துக்கள் என் பார்வையை மாற்றின. ஜெயகாந்தன், புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி ஆகியோரின் எழுத்துக்கள் அறிமுகமாகி என் பார்வையை மேலும் விசாலப்படுத்தின அப்போது தான் என் முதல் கவிதைத் தொகுதியான 'விசாரணைகள்' நூலைக் கொண்டு வந்தேன். அதில் இலக்கியத் தரம் எதுவும் இல்லை.

**தலித்துகள், ஆலயப் பிரவேசம் செய்கிற காட்சிக்கு இளையராஜாவின் இசையில் ஒரு பாடல் எழுதினேன். அந்தப் பாடல் இளையராஜாவுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.**

ரொம்ப அசட்டுத்தனமான நூல் அது. அப்போது கோமல் சுவாமிநாதனைச் சந்தித்தேன். அவர் என் கவிதைகளைப் படித்துப் பாராட்டினார். அத்தோடு, அவருடைய 'அனல் காற்று' படத்திலே எல்லா பாடல்களையும் எழுதுகிற வாய்ப்பையும் கொடுத்தார். அவரது 'அசோகவனம்', 'ஒரு இந்தியக் கனவு', 'யுத்தகாண்டம்' ஆகிய மூன்று படங்களிலும் பணியாற்றினேன். அவருடைய நாடகங்களில் பங்குகொண்டேன். இவையெல்லாம் எனக்கு நல்ல பயிற்சியாக அமைந்தன.

திடீரென அப்போது ஜெயகாந்தன் மீது மிகுந்த காதல் ஏற்பட்டு விட்டது. அவரின் எழுத்தாலும், பேச்சாலும், தோற்றத்தாலும் வசீகரிக்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டேன் என்றே சொல்ல வேண்டும். பிறகு எடிட்டர் லெனினின் அறிமுகம் கிடைத்தது. அவரின் மூலம் சிறுமுகை ரவியின் நட்புக் கிடைத்தது. அவரின் 'ராகங்கள் மாறுவதில்லை' படத்தில் பணியாற்றினேன். 'அலை ஓசை' எனும் தலித் பிரச்சினையைப் பேசிய படம் அது. அதில் தலித்துக்கள் ஆலயப் பிரவேசம் செய்கிற காட்சிக்கு இளையராஜாவின் இசையில் ஒரு பாடல் எழுதினேன். அந்தப் பாடல் இளையராஜாவுக்கு ரொம்ப பிடித்திருந்தது.



**திரைப்படத்துறை சார்ந்த உங்கள் வளர்ச்சியைச் சொன்னீர்கள். இலக்கியத்தில் உங்கள் வளர்ச்சிப் போக்கைத் தெரிந்து கொள்ளலாமா?**

திரைப்படத்துறையில் நான் செயல்பட்டாலும் இலக்கியம் தான் எனக்கு அஸ்திவாரம். 1986 இல் 'சூரியனைப் பார்க்காத சூரியகாந்திகள்' எனும் இரண்டாவது கவிதைத் தொகுதியைத் தயாரித்தேன். அதை கலைஞர் தான் வெளியிட வேண்டும் என்ற பிடிவாதத்தோடு, சின்ன குத்தூசியின் உதவியால் ஆற்காட்டாரின் மூலமாக கலைஞரைச் சந்தித்தேன். அப்போது, கலைஞர் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும், அண்ணா அறிவாலயம் கட்டுவதிலும் தீவிரமாக இருந்தார். தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார். அதனால், கலைஞரின் அறிமுகம் கிடைப்பதற்கே ஆறு மாதங்கள் ஆகி விடுகிறது. அதற்குப் பிறகு தான் அந்த நூலை கலைஞர் வெளியிட்டார். உண்மையில், எனக்கு திருப்தி அளித்த கவிதைத் தொகுதி அது கிடையாது. ஆனாலும்,

கலைஞர் அதை உயர்வாகப் பேசி, என் பெயருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறார். பின்பு அவரின் 'ஒரே ரத்தம்' படத்தில் பாடல் எழுத வைக்கிறார். அதன் பின் ஆற்காட்டார் எனக்காகவே 'காவலுக்குக் கெட்டிக்காரன்' எனும் படத்தை எடுத்தார். அந்தப் படம் சுமாராகத்தான் ஓடியது. அது மட்டும் நன்றாக ஓடியிருந்தால், சூழ் நிலை வேறு மாதிரியாக் மாறியிருக்கும். இந்தச் சூழலில் தமிழக அரசியல் சூழலில் ஒரு மோசமான நிலை ஏற்பட்டது. அப்போது எனக்குச் சின்ன இடைவெளி கிடைத்தது. அப்போது தான் கோமல் சுவாமிநாதன் என்னை ஒரு பத்திரிகை நடத்த அழைத்தார். அது தான் சுபமங்களா. இதற்கிடையில், குங்குமத்தில் நூற்றுக்கணக்கான பேட்டிகள் எடுத்திருக்கிறேன்.

ஒருவருடைய வாழ்க்கையையும், அவரின் பின்புலத்தையும், அவர்கள் எப்படி உருவானார்கள் என்பதையும் தெரிந்து கொள்வதில் எனக்கு ரொம்ப சந்தோசம் இருந்தது. பாவை சந்திரனோடு சேர்ந்து குங்குமம், வண்ணத்திரை, முத்தாரம் போன்ற பத்திரிகைகளில் எல்லாம் எழுதினேன். முத்தாரத்தில் தொடராக வெளியிடுவதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வி.பி.சிந்தனிடம் நான் எடுத்த பேட்டியை தமிழ் புத்தகாலயம் 'நான் ஏன் கம்யூனிஸ்ட் ஆனேன்' என்ற சிறு புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. இத்தகைய பின்புலம் தான் என்னை கோமலோடு இணைந்து 'சுபமங்களா' பத்திரிகையில் பணிபுரிய காரணமாக

அமைந்தது. தமிழில் தீவிரமான இலக்கியப் பத்திரிகையாகவும், எல்லாருக்குமான மேடையாகவும் ஜனநாயக பூர்வமாக அது அமைந்தது. அதில் வெளிவந்த பேட்டிகள் ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன. அடுத்த இதழ் பேட்டி யாருடையது என்று கேட்கிற அளவுக்கு அமைந்தது. அதையெல்லாம் பின்னர் தொகுத்து நர்மதா பதிப்பகம் 'கலைஞர் முதல் கலாப்ரியா வரை' என்ற நூலாக வெளியிட்டது. இந்நூல்தான் தமிழ் படைப்பாளிகளின் ஆவணமாக பதிவுகளாக அமைந்துள்ளது. வெளிப்படையாக விவாதிக்க முடியாத சில காரணங்களால் 'சுபமங்களாவை' தொடர முடியவில்லை.

**புதுமைப்பித்தன் அவரது மனைவிக்கு அந்தரங்கமாக எழுதிய கடிதங்களை நூலாக வெளியிட்டது சரியில்லை என்றொரு கருத்து இருக்கிறதே?**

புதுமைப்பித்தன் 1932 இல் திருமணம் செய்து கொள்கிறார். 1948இல் இறந்து விடுகிறார். 16 வருடம் தனது மனைவியை பிரிந்து எழுத்து வாழ்க்கைக்காக, பத்திரிகை வாழ்க்கைக்காக, சினிமா வாழ்க்கைக்காக ஒவ்வொரு விடுதியாக தங்கியிருக்கிறார். இது மிகப்பெரிய சோகமில்லையா.? இதை அந்தக்கடிதங்கள் மூலமாக அறியமுடிகிறது. இன்றைக்கு சுதந்திர இந்தியாவில் நிறையப் பிரச்சினைகள் இருந்தாலும், எல்லோருக்கும் இரண்டாயிரம் ரூபாய் வருமானத்துக்கான உத்தரவாதம் இருக்கிறது. ஆனால் அடிமை இந்தியாவில் புதுமைப்பித்தனும், பாரதியும் சோற்றுக்கு போராடியிருக்கிறார்களே. 'உன் கூந்தல் எண்ணெய்க்காக ஒரு ரூபாய் எம்.ஓ.பண்ணுகிறேன் அடுத்த தடவை ஐந்து ரூபாய் அனுப்புகிறேன் என்று எழுதியிருக்கிறார் இதெல்லாம் அந்தக் கடிதங்களின் மூலமாகத்தான் அறியமுடிகிறது.

**'மரணத்தின் நட்சத்திரங்கள்' என்கிற கவிதைத் தொகுதியை வெளியிட இருக்கிறீர்களே... அது பற்றி?**

என்னுடைய முதல் கவிதைத் தொகுதி என்று இதைத்தான் நான் குறிப்பிடுவேன். இந்தப் புத்தகத்தைத் தயார் செய்து வைத்திருக்கிறேன். கலைஞர் வெளியிட இருக்கிறார். அவரின் பல்வேறு அரசியல் காரணங்களினால் வெளியீட்டு நிகழ்ச்சி தள்ளிப்போகிறது. தமிழின் முக்கியமான தலைமைக் கவிஞர்கள் அந்த புத்தகத்தைப் படித்து விட்டு அது பற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த பார்வைகளையும், அபிப்பிராயங்களையும் திரட்டி, 'குருதி கசியும் இசைத்தட்டு' என்றொரு நூலாகத் தயாரித்துள்ளேன். இரண்டு நூல்களும் வெளியிடப்படும்.

**திரைப்படப் பாடலாசிரியரான நீங்கள் 'தென்பாண்டி சிங்கம' தொலைக்காட்சித் தொடரை எவ்வாறு எடுத்தீர்கள்'?**

ஆரம்பத்தில் சினிமாவுக்குப் பாட்டு எழுதினேன். பிறகு அதை விட்டு விட்டு படத்தை இயக்க விரும்பினேன். என்னை அப்படியான ஆளாக அடையாளம் காட்டியது சென்னை பிலிம் சொஸைட்டி நடத்திய Film appreciation course' தான். அதன் பிறகுதான் சென்னை தொலைக்காட்சிக்காக 'தென்பாண்டிச்சிங்கம்' தொடரை இயக்கினேன். நல்ல வரவேற்புக் கிடைத்தது. கா.சிவத்தம்பி போன்ற விமர்சகர்களும் அசோகமித்திரன் போன்ற எழுத்தாளர்களும் பாமர மக்களும் [illegible] படமாக அது இருந்தது. கலைஞருக்கும் மிகப்பிடித்தமான தொடராக அது அமைந்தது.

**இப்போது என்ன பணியில் ஈடுபட்டுள்ளீர்கள்?**

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு கலைஞரின் ஒரு மரம் பூத்தது. வெள்ளிக்கிழமை, சுருளிமலை என்று மூன்று கதைகளைக்கொண்டு சங்கிலித் தொடராக 250 வாரத்துக்கான தொடராகத் தயாரிக்கும் பணியில் இறங்கியுள்ளேன்.





### டூப்பெல்லாம் எனக்கு பிடிக்காது - மும்தாஜ்

கட்டிப்புடி கட்டிப்புடிடா பாட்டுக்கு கவர்ச்சியாக ஆடவும் தெரியும்; கத்தியை எடுத்து ஆக்ரோஷமாக மோதவும் தெரியும் என்கிறார் அகில இந்திய கிளாமர் குயின் மும்தாஜ்! ஒட்டுமொத்த தமிழ் ரசிகர்களின் இரவுத்தூக்கத்தைக் கெடுத்த இந்தக் கட்டழகி, முதன்முறையாக ஒரு படத்துக்காக சண்டை போட்டு நடித்துள்ளார் அதுவும் டூப் இல்லாமல்!

# இங்கேயும் ஒரு மீரா



அன்று மகிழ்ச்சியுடன் கண்விழித்தாள் மீரா. முகத்தில் மென் சிரிப்புடன் கிணற்றடிக்குச் சென்று குளித்து விட்டு வந்தவளிடம் அம்மா தேநீரைக் கொடுத்து அப்பாவிடம் கொண்டு போய்க் கொடு என்றார். சொன்னதைச் செய்தவளின் மனதில் சந்தோஷம் கொப்பளித்துக் கொண்டே இருந்தது. அதற்கு காரணம் 6 அடி உடைய உருவம்.

அவர்களின் வீட்டுக்கு நான்கு வீடு தள்ளி ஒரு குடும்பம் குடி வந்தது. அங்கு தான் அந்த 6 அடி இருந்தது. அது தான் அரவிந்த். அவன், அந்த அரவிந்த் யாரையும் நிமிர்ந்து பார்ப்பதை இவள் கண்டதே இல்லை. அமைதியான அழகான தோற்றம். இவளின் மனதில் அந்த அழகான தோற்றத்தை விட எப்பொழுதும் ஒரு சோகத்துடன் இருக்கும் அந்தக் கண்கள் தான் மனதில் நின்றது. சில வேளைகளில் அவன் இவளைப் பார்ப்பது போல இருக்கும். அதை உணர்ந்து இவள் நிமிர்ந்து பார்த்தால் அ்வன் வேறு எங்கோ பார்த்தபடி போய்விடுவான். வீட்டில் அவன் இருப்பதே குறைவு. எங்கு போகிறான். என்ன செய்கிறான் ஏன்று தெரியவில்லை. ஆனால் ஒரு சிலர் அவன் நாட்டின் விடிவுக்காக போராடும் ஒருவன் என்று கதைத்தார்கள்.

மீராவின் மனதில் ஒரு மூலையில் இந்த அரவிந்த் குடியேறினான். மீராவின் குடும்பமும் அரவிந்தனின் குடும்பமும் இப்பொழுது நன்றாகப் பழகினார்கள். இவள் கூட அம்மா ஏதும் வாங்கி வரச் சொன்னால் அவன் வீட்டுக்குப் போவாள். சில வேளைகளில் அவன் இருப்பான். இவளைக் கண்டும் காணாதவன்

**அவன் மனதில் அவள் இருப்பாளா? இதை எப்படி அறிவது? "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று ஓர் ஆண் மகனிடம்போய் எப்படி சொல்வது?**

போல போய்விடுவான். அவள் மனதில் நினைப்பாள். சரியான கல்லுளிமங்கன். கொஞ்சம் சிரித்தால் என்ன. உலகம் அழிந்து விடுமா என்று.

நாட்களும் சிறகு கட்டிப் பறந்தன. பிரச்சினைகளால் வாழ்க்கை சீரற்றுச் சென்றது. அப்பாவும் அம்மாவும் க.பொ.த உயர்தரத்துடன் அவளின் படிப்பு போதும் என்று சொல்லி விட்டார்கள். இந்த நாட்டில் படித்துத் தான் என்ன செய்வது. வெளிநாட்டு மாப்பிள்ளையாய்ப் பார்த்து அங்கு அனுப்பி விடலாம். என்பது அவர்களின் யோசனை. தங்கைகள் இருவரும் பாடசாலை போக அவள் வீட்டில் இருந்தாள். மீராவின் மனதில் ஒரு மூலையில் இருந்த அரவிந்த் இப்பொழுது அவள் மனம் முழுவதுமாய் வந்து அமர்ந்து கொண்டான். அதற்குக் காரணம் அவனின் நேர்மையான பார்வையும் எந்தப் பெண்ணையும் நிமிர்ந்து பார்க்காத அந்தக் குணமும் தான். ஆனால் அவன் மனதில் அவள் இருப்பாளா? இதை எப்படி அறிவது? நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று ஒரு ஆண்மகனிடம் போய் எப்படிச் சொல்வது. ஒரு தலைக் காதலாக நாட்கள் சென்று கொண்டிருக்க அதிசயமாக அரவிந்த் ஒருநாள் இவளைக் கண்டு ஹலோ எப்படி இருக்கிறீர்? என்றான். அந்த ஒரு வார்த்தையைக் கேட்டு இவள் மனதில் பட்டாம்பூச்சிகள் பறந்தன. முகம் சந்தோசத்தில் மலர நல்லாயிருக்கிறன்.நீங்கள்? என்றாள். மெதுவாக அவன் இதற்கு ஒரு புன்சிரிப்பைத் தந்து விட்டு சென்றான். அதன் பின் அவன் பொதுப்படையாக ஒரு சில வார்த்தைகள் அவளைக் கண்டால் கதைப்பது வழக்கமாயிற்று.

இந்த வேளையில் ஜேர்மனில் இருக்கும் அவளின் அண்ணா அங்கு கலியாணம் பேசிக் கடிதம் போட்டார். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மிகுந்த சந்தோசம். ஆனால் மீரா கலங்கினாள். அரவிந்த் அவளை விரும்புகிறானா என்று அறிந்தாலாவது வீட்டில் சொல்லிப் போராடலாம். காதலுக்கு எப்பவும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். எந்தக் காதலும் எடுத்தவுடன் நிறைவேறுவது இல்லைத் தானே. போராடத்தான் வேண்டும். போராடவும் அவள் தயார். ஆனால் அவனின் முடிவு தெரியாமல் என்ன செய்வது?

அன்று வெள்ளிக்கிழமை. அருகிலுள்ள பிள்ளையார் கோவிலுக்குச் செல்வது அவளின் வழக்கம். அன்றும் யோசனையுடன் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தாள்....

கோயிலுக்கா என்ற குரலை நிமிர்ந்து பார்த்தாள். சைக்கிளில் வந்த நால்வரில் ஒருவன் கேட்க, மற்றையவன் இல்லை அக்கா கோயிலுக்குப் போகிறாடா என்றான். மனதில் எரிச்சல் மண்டியிட்டது. பெரிய பகிடிதான் என்று இவள் மனதில் திட்ட, இன்னொருவன் இவள் "காதல் கோட்டை " தேவயானியாடா என்றான். இவர்களுக்கு வேறு வேலையில்லை. நாட்டிலோ நிலமை சரியில்லை. வேலையோ அல்லது படிப்போ முடிந்தால் வீட்டை போய் இருப்பது தானே. இதுகளால் துன்பப்படுவது பெற்றோரும் உடன்பிறப்புக்களும் தான். என்று நினைத்தவளின் மனதில் அரவிந்த் வந்து நின்றான். அவனிடம் இந்த சேட்டைகள் இல்லை. பார்வையிலே ஒரு புதுக் கண்ணியம் தெரியும். அவன் எங்கே.....இதுகள் எங்கே..... அவனிடம் எப்படி இவள் மனதைத் தெரிவிப்பது? என்று சென்றவளை மீரா என்ற அழைப்பு நிறுத்தியது. மனதில் வீற்றிருந்த நாயகனே எதிரில் நின்றான். மனம் துள்ள, இன்று எப்படியும் மனதைத் திறந்து காட்டிவிட வேண்டியது தான் என்று மனதில் அவள் எண்ணிக் கொண்டிருக்க அவன் ஒரு சில வார்த்தைகள் பேசிவிட்டு புறப்படத் தயாரானான். இவள் மெல்ல அரவிந்த் என்றாள். அவன் நின்று திரும்பிப் பார்த்தான். எப்படிக் கேட்பது என்று தயங்கிய மனதை காதல் கொண்ட ஏக்கம் முறியடித்து அவனிடம் தனது விருப்பத்தை அறிவித்தது.

ஒரு கணம் நெற்றியைத் தடவியபடி மௌனமாக இருந்தவன் பின்பு மீரா உன் மனதில் அப்படி ஒரு ஆசையை உருவாக்க நான் காரணமாக இருந்தால் மன்னித்து விடு. இந்தக் காதல் கத்தரிக்காய் எதிலும் எனக்கு விருப்பம் இல்லை. எனக்குக் காதல் என்றால் இந்த நாட்டின் மீதும், அதன் விடுதலை மீதும் தான். நான் என்னை முழுமையாக அதன் விடுதலைக்காக அர்ப்பணிக்கப்போகிறேன். இனிமேல் இங்கு வரமாட்டேன். தயவு செய்து காதல் கீதல் என்றில்லாமல் தயவு செய்து அப்பா அம்மா பேசும் மாப்பிள்ளையைக் கட்டிக் கொண்டு நல்லாயிரு. அதுதான் எனது ஆசை என்று சொல்லிவிட்டு நடந்தவனை மீரா நிறுத்தி அரவிந்த் நீங்கள் இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை. கொஞ்ச நாள் என்றாலும் நான் உங்களுடன் தான் வாழ விரும்புகிறேன். இல்லாட்டி நான் செத்து விடுவேன் என்றாள்.

அவன் கோபமாக என்ன சொல்கிறாய் சினிமாவுக்கும், கதைக்கும் தான் இந்த வசனம் சரி. தயவு செய்து என்னைப் புரிந்து கொள் என்றவன் விறுவிறு என்று திரும்பி நடந்தான். அவன் மனதிலும் அவள் இருந்தாள். அப்படி ஏதும் வந்து விடக்கூடாது என்றுதான் அவளைக் கண்டதும் ஓடி ஒழிந்தான். ஆனால் அவனையும் மீறி அவள் அவன் மனதில் உட்கார்ந்து விட்டாள். அதற்குக் காரணம் அவளின் குணமும் யாரையும் புண்படுத்தாத நல்ல மனமும் அடக்கமான அழகும் தான்.

கண்ணில் படாதது கருத்தில் நிற்காது என்பார்கள். இனிஅவனை அவள் பார்க்கப்போவதில்லை. எனவே சீக்கிரம் இவள் அவனை மறக்க வேண்டும். என்று மனதில் வேண்டிக் கொண்டான்.

மீராவின் மனதில் அவள் அழகாக கட்டியிருந்த மாளிகை சத்தம் இல்லாமல் இடிந்து விழுந்தது. அழுகையை விழுங்கி, அடக்கியபடி அவன் செல்வதையே பார்த்தாள். அவனின் உருவம் சிறு துளியாகி மறையும் வரையும் பார்த்து நின்றாள். அவளால் அவனை மறக்க முடியாது. இது இன்று நேற்று வந்த காதல் அல்ல. இவனை என்று முதன் முதலாக கண்டாளோ அன்றே வந்த காதல். இதை அழிக்க அவளால் முடியாது. அவன் மனதிலும் அவள் இருக்கிறாள். அது அவளுக்குத் தெரியும். அவன் இல்லாத வாழ்க்கை அவளுக்குத் தேவையில்லை. அவனுக்காக அவளும் காத்திருப்பாள். அவன் இருக்கும் வரை அவள் இருப்பாள். அவன் இந்த உலகத்தில் இல்லையென்றால் அவளும் இருக்க மாட்டாள்.

கண்ணீருடன் கோயில் கோபுரத்தைப் பார்த்தாள். அது உயர்ந்து நிமிர்ந்து நின்றது. அரவிந்தும் அது போல தான் அவள் மனதில் மட்டுமல்ல எல்லோர் மனதிலும் உயர்ந்து நிற்பான் என்று நினைத்தவள், கண்களைத் துடைத்து விட்டு கோயிலுக்குள் சென்றாள். கோயில் குருக்களின் மகள் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து வைத்திருந்த ராமர், கிருஷ்ணர் சிலைகளுடன் இருந்த மீரா சிலை வழமை போலில்லாமல் இன்று அவளைப் பார்த்து சிரிப்பது போல் இருந்தது.

அந்த மீரா கண்ணனுக்காக, இந்த மீரா அரவிந்துக்காக. கண்களில் நீர் நிறைந்து கன்னத்தில் வழிந்தோடியது. அது வெறும் கண்ணீர்த் துளிகள் அல்ல. அவளின் உடைந்த இதயத்தில் இருந்து வழிந்த இரத்தத் துளிகள்.

**நன்றி: வான்முரசு**

# பாவம் கண்ணகியம்மன்

**எங்களூரிலும்**
**கண்ணகியம்மன் கோயில்.......**
**வருடத்தின் ஒரு தடவை**
**வாஞ்சையாய் ஒளிகொள்ளும்**
**முற்றத்து கோயில் மரம்.....**

**கழுத்து மாலை**
**சேட்டுக்கு வெளியே**
**பதவியேற்க**
**எங்களூரிலும் பக்தர்கள்.....**

**கழுத்தைச் சுற்றி**
**நல்ல பாம்பாய்**
**சுடிதார்ச் "ஷோல்கள்"....**

**விரித்த கூந்தல்கள்**
**கறுப்பு வளையங்கள்**
**பௌடராய் கன்னம் - மினுங்க**
**எங்களூரிலும் பக்தர்கள்....**

**கோப்புசம் கழரும் என்றோ**
**கோயில் தகருமென்றோ**
**கழற்ற மறுத்த**
**தொப்பிகள்....**

**குமரிகள் கூட்டத்திற்கு**
**பிரத்தியேக நீர் இலாகாவாய்**
**கிணற்று வாளியுடன்**
**சிலர்.....**

**வரப்போரம்**
**புகை பிடித்து**
**நுளம்பு விரசும்**
**எல்லைப்படைகள்....**

**வட்ட மேசை மகா நாட்டில்**
**நக்கல் நாட்டியம்**
**ராமன்கள் நடுவில்**
**கச்சான் குவியல்**

**ஒளியை விரும்பி**
**ஒரு கூட்டம்....**
**ஒளியை விலத்தி ஒரு கூட்டம்...**

**நோக்கமற்ற நடையில்**
**பல கூட்டம்...**
**பரவசத்தில் சிலர்.......**

**கடைசிநாள்**
**புகைகிளம்ப**
**கைத்தொழில் பேட்டையகும்...**
**'பொங்கல்' புகைகளால்.....**

**பட்டுப்புடவை...**
**கனகாம்பரங்கள்...**
**ஸ்டிக்கர் பொட்டுக்கள்.....**
**அப்பாஸ்கள்.....**
**அஜித்கள்.......**
**ஆனல்ட் சுபாசினேக்கர்கள்...**
**சிம்ரன்கள்**
**சினேகாக்களிடையே**
**பாவம் எங்கள்**
**கண்ணகியம்மன்!**

**ஞானக்கிறுக்கன்**


# தீயாயும் நிழலாயும்

விடைபெற்ற புதல்வரின்
சொற்களும் நினைவுகளும் எதிரொலிக்கின்றன

பறவைகள் கூடும் மரங்களின் கீழே
மீண்டும் சந்திக்கும் புன்னகையுடன்
கைகுலுக்கிக் கொள்ளலாம்
அல்லது
மண்ணில் விழிக்கும்
ஒரு செடியின் முகத்தினில்
நம்மைக் காணலாம் என்றபின்
கையசைத்துச் சென்ற வீரர்
கைகளைப் பற்றியும்
தோளினைத் தடவியும்
நினைவாய் ஆழப்பதிந்த விழிகள்
நெஞ்சில் அசைகிறது

'கடலில்
குளிரில்
படகில்
தொடரும் பயணம்
பகைவரை வீழ்த்திய பின்
மலர்வுடன் மடி திரும்பும், என்றனர்

காற்று மெதுவாய் வீசியது
வெள்ளிகள் விழித்திருந்தன
இரவுணவை
அவர்கள் முழுமையாகச் சாப்பிட்டிருக்கவில்லை
எல்லா முகங்களிலும் பூக்களிருந்தன
எல்லா விழிகளிலும் நெருப்பெரிந்தது



மெல்லிய மஞ்சள் ஒளியில்
அணியணியாய்ச் சேர்ந்து நின்ற பின்
சென்றனர்.

சென்ற பின்
ஒரு வெற்றிடம்
பதற்றத்தோடும் யோசிப்போடும் அங்கு விரிந்தது.

அவர்கள் நின்றுலவிய முற்றத்தில்
நீக்கமற்றிருந்தன பாதச்சித்திரங்கள்

'காற்றே!
என் மைந்தரை வருடிச்செல்
இந்தப் பாதச் சுவடுகளை எடுத்துச் செல்லாதே
கண்களால் அவற்றைக் காத்திருக்கிறேன்'

நீண்ட அவ்விரவிற் காத்திருந்தேன்
சத்தங்கள் கேட்கவில்லை
தொலை தூரமா?

சேதிகள் வரவில்லை
யாதாயிருக்கும்?

துயரும் வலியும் மிக்க
ஞாபகங்களுடன்
அலைந்தலைந்து களைத்த பின்
மறுநாள்
சூரியன் எடுத்து வந்தான்
எதிரிகள் வீழ்ந்த கதையை
என்னரும் புதல்வரின் வீரக்கதையை

கடலில்
குளிரில்
படகிலெல்லாம்
தீ மூண்டதாம் பகைவர் மீது.

கரையில்
தரையில்
எங்குமே முள்ளழிந்து முளைத்தனவாம்
நிழல் முளைகள்

வெற்றி பூத்து வீசியது வாசம்

மனமெழுந்து
சுழன்று
பறந்தது வானில்.

கணமே
சரிந்து வீழ்ந்தது மைந்தரின் நினைவில்
யார் முகம் வீழ்ந்ததோ
யார் குருதி வடிந்ததோ?

எனது எல்லாக் கீதங்களும் காயமுற
வீழ்ந்த வீரர் நினைவெழுந்தது.

நாளும் இரவுகள்
தீயில் மூண்டவாறும்
தேனில் இழைந்தபடியும்
இப்படியே இப்படியே தான்.

ஒரு பறவையை வருடவும்
ஒரு மலர்ச் செண்டை முத்தமிடவும்
இன்னுமென்ன செய்ய வேண்டும் நாம்?

□□□

கருணாகரன்

# ஆங்கிலத்தில் தமிழ் எழுத்துக்களும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

## சாந்தனின் ஆங்கிலச் சிறுகதைகளும்

வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர் ஆங்கிலத்தில் எழுதிப் புகழ் பெறுகின்றனர். சியாம் செல்வதுரையின் (தாய் சிங்களவர்) Funnyboy cinnamon Garden , ஏ.சிவானந்தனின் When memory dies என்பன இலங்கை வாழ்வைக் கூறும் படைப்புக்கள். (Funny boy சரிநிகரில் எஸ்.கே.விக்கினேஸ்வரனால் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்தது.)

மறு புறத்தில் த.இராமநாதனின் ஈழத்து நாவல் 'கரந்தும் உயிர் வாழ வேண்டின்' மற்றும் செங்கையாழியானது 'யானை' ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இன்னும்பல ஈழத்து நாவல்களும்

**கந்தையா ஸ்ரீகணேசன்**

சிறு கதைகளும், கவிதைகளும் ஆங்கிலத்தில் வெளியிட வேண்டிய தேவை எதிர்காலத்துக்கு உண்டு.

அந்தப் பணியில் ஈழத்து எழுத்தாளர் ஒருவர் ஏற்கனவே தனது பணியைத் தொடங்கியுள்ளார். யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஐ.சாந்தன் தனது பத்து சிறுகதைகளைத் தமிழில் மறு உருவாக்கம் செய்து 'The sparks' என்கின்ற தொகுப்பை 1990 இல் வெளியிட்டார். இது பற்றி எழுதிய ஏ.ஜே. கனகரெட்னா சாந்தனின் எழுத்துக்கள் Translation அல்ல. Transereations என்று குறிப்பிட்டார். அண்மையில் ' In their own worlds ' அவர்களது உலகங்களில்- என்னும் தலைப்புக்களில் இருபது கதைகளை கொடகே பதிப்பகத்தினூடாக வெளியுலகுக்கு வழங்கியுள்ளார். இவரது கதைகள் ஒரு பக்கம், இரு பக்கங்கள் மட்டுமே கொள்ளக் கூடியவை. அந்தளவுக்கு சுருங்கக் கூறி விரித்துப் பொருள் தரும் ஆற்றல் உள்ள கதைகள் அவருடையது. இதனால் அவற்றை Flash Fiction வகையை சார்ந் தவை என்று ஏ.ஜே.கனகரெட்னா கூறுவார்.

தமிழில் 'கடுகு' இன்னொரு வெண்ணிரவு, ஒரு பிடிமண், கிருஷ்ணன் தூது, முளைகள் போன்ற ஏழு சிறுகதைத் தொகுப்புக்களையும் 'ஒட்டுமா' என்ற நாவலையும், சோவியத் பயணக் கட்டுரைகளையும் தந்த சாந்தன் தமிழ் வாழ்வை The sparks, In their own worlds ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புக்கள் ஊடாக வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுகிறார். ஒரு தொழிநுட்பவியலாளரான சாந்தன் 1975 ல் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றவர். சிறு சிறு வசனங்களில் புரையோடிப்போயிருக்கும் மனிதரின் அவலங்களை நுணுக்கமாக குறியீட்டுத் தன்மையுடன் அலசும் பாங்கு அலாதியானது. தலைப்புச் சிறுகதைகளை 'In their own worlds' களிவரை பயணம் அனுப்பி விட்டு இன்றைய பாதுகாப்பு நெருக்கடி சூழலில் வீடு திரும்ப காலதாமதமாவதால் துடிக்கும் மனைவியை / பெண்ணின் மனநிலையை சித்திரிக்கிறது.
இந்த மனநிலையை குறியீட்டுப் பாவனையில் மண்புழுவுடன் விளையாடும் சிறுவனுடன் காட்சிப்படுத்துகின்றார். மண்புழுவின் துடிப்பும் பெண்ணின் துடிப்பும், குறியீட்டு நிலையில் கதாசிரியரின் நோக்கை துலாம்பரமாக புலப்படுத்துகின்றன. இனப் பிரச்சினையைப் பற்றி எழுதும் கதைகளும் தமிழ் நிலைப்பட்டு அல்லாமல் மனித நிலைப்பட்டே அமைக்கப்பட்டுள்ளன. ' தெமட்ட கொட அகதி' அகதிகள் பற்றிய மற்றவர்களின் கணிப்பை அலசுகிறது. ' The habitat , The cuckoo's Nest ' என்பன தமிழரின் வாழிடத்தை கோடி காட்டுவன. பேசப்படும் பொருளின் நாடக முரண் அணியை மனித நிலைப்பட்டு வெளிப்படுத்துவன சாந்தனின் கதைகள் என்று குறிப்பிடுவார் பேராசிரியர் சிவத்தம்பி.

போரில் சிக்குண்டு உழலும் மக்கள் வாழ்வை நுணுக்கமாகப் படம் பிடிக்கும் சாந்தனின் சிறுகதைகளும், அனுபவமும் ஒன்று திரட்டப்பட்டு சாந்தனை நடு ஆங்கில நாவல் ஆசிரியராக மாற்ற வேண்டும். ஏனெனில் நாவல் வடிவத்தினூடாக எமது இன்றைய அவலத்தை வெளியுலகுக்கு கடத்த வேண்டியது அவசியம். அதனூடு எம் வாழ்வு எதிர் கொள்ளும் சிக்கற் பாடுகளை வெளியுலகம் அறிந்து கொள்ளும் என்பதும் யதார்த்தத்தை உணரும் என்பதும் திண்ணம்.

## நீ போராடு



உன் பசிக்கு
நான் உண்டால்
உன் பசி தீராது

உன் நோய்க்கு
நான் மருந்து
உண்டால் உன் நோய்
குணமாகாது.

உன் தூக்கத்திற்கு
நான் உறங்கினால்
உன் தூக்கம் நீங்காது.

உன் சோகத்திற்கு
நான் அழுதால்
உன் சோகம் நீங்காது

உன் வலி
எனக்கு நோகாது

உன் தேவை
எது எதுவென்று
நீ நிறைவேற்றிக்
கொள்கிறாயோ
அது போல்
உன் சுதந்திரத்திற்காகவும்
நீ போராடு

-சி.நாகேந்திரன்

# சிறுவர் மலர்

## வேஷம் கலைந்தது

பாக்கியராஜ் ஒரு ஏழைப் பால்க்காரன். ஒரு நாள் வீட்டுக்கு தேவையான ஒரு கிலோ சர்க்கரை வாங்க பலசரக்கு கடைக்குச் சென்றான். வியாபாரி வீரப்பனின் கடை கண்ணில்பட்டது. அங்கிருந்து ஒரு கிலோ சர்க்கரை வாங்கிக் கொண்டான்.

வியாபாரத்தில் தில்லு முல்லு செய்பவன் வீரப்பன். அவனிடம் வாங்கும் பொருட்கள் எடை குறைந்து இருக்கும். சர்க்கரை வாங்கிக்கொண்டு புறப்பட்ட பாக்கியராஜைப் பாத்து வீரப்பன்"நீ பால் வியாபாரிதானே. நல்ல பசு நெய்யாக எனக்கு ஒரு கிலோ எடுத்து வா" என்றான். ஒரு கிலோ நெய்யின் விலையைக் கூறி வீரப்பனிடம் பணத்தை பெற்றுக்கொண்ட பாக்கியராஜ் மீண்டும் நெய்யுடன் வீரப்பன் கடைக் வந்தான். வீரப்பன் நெய்யின் எடை சரியாக இருக்கிறதா என்றுபார்க்க தன் கடை தராசியில் வைத்து தூக்கிப் பார்த்தான். "ம்...என்ன நெய் முக்கால் கிலோதானே இருக்கிறது என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?" வீரப்பன் பாக்கிய ராஜ்ஜயைப் பார்த்து சத்தம் போட்டான்.

புரியாத பாக்கியராஜ் "முக்கால் கிலோவா? இருக்காதே....சரியாகத்தான் எடை போட்டுக் கொண்டு வந்தேன் உங்களின் தராசியில் தான் தவறு இருக்க வேண்டும்" என்றான்

வீரப்பனா! விடுவான் "உன் ஏமாற்று வேலையை வேறு எங்காவது வைத்துக்கொள்.... பிழைப்பவருக்கு நம்ம ஊரில் என்ன தண்டனை தெரியுமா?" என்று மிரட்டினான் வீரப்பன்.

"தண்டனையா?...அது எனக்கா உனக்கா என்று பார்த்து விடலாம் வா..."என்றான் பாக்கியராஜ். இந்த



மரியாதையாக ஒரு கிலோ நெய்யை கொடு....இல்லையேல் முக்கால் கிலோவிற்கான பணத்தை எடுத்துக் கொண்டு மீதியை கொடுத்து விடு" என்றான்

"மீதியைக் கொடுப்பதா? முடியாது....சரியாக நான் கொண்டு வந்த நெய் ஒரு கிலோதான்"

ஏமாற்றப் பார்க்கிறாயா...உன்னை சும்மா விடப் போவதில்லை பிறரை ஏமாற்றிப் ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் என்னிடம் இருந்து சாமான்கள் வாங்கிச் செல்கிறார்கள். அவர்கள் யாரும் என் எடைக்கல்லை சந்தேகிக்கவில்லை உன்னை சும்மா விடமாட்டேன். இப்போதே நாம் பஞ்சாயத்து தலைவரிடம் போகலாம் வா....குற்றம் உன் மேல் நிரூபிக்கப்பட்டால் தண்டனை என்னவென்று தெரியுமா? சபையின் நடுவே நிறுத்தி பத்து பிரம்படியும் நூறு ரூபாய் அபராதமும் கட்ட வேண்டும்.

வீரப்பன் நெய்யையும் எடுத்துக் கொண்டு பாக்கியராஜையயும் அழைத்துக் கொண்டு பஞ்சாயத்து தலைவரிடம் போனான்

எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பஞ்சாயத்துத் தலைவர் பாக்கியராஜிடம் கேட்டார் "வீரப்பன் சொல்வதெல்லாம் சரி தானா?"என்றார்

'இல்லை ஐயா நான் சரியாக ஒரு கிலோ நிறுத்துத் தான் கொண்டுவந்தேன்"

"வீரப்பன் உன் தராசினையும் எடைக்கல்லையும் கொண்டு வா" என்று உத்தரவு இட்டார் தலைவர்.

தயாராகவே கொண்டு வந்திருந்த வீரப்பன் தராசையும் எடைக்கல்லையும் கொடுத்தான் "பாக்கியராஜ நீ..."

"ஐயா வீரப்பன் கடையில் இருந்துதான் அந்த ஒரு கிலோ சர்க்கரையை வாங்கினேன் அந்த சர்க்கரையின் எடைக்கே நிறுத்து நெய்யைக் கொண்டு வந்தேன். இதோ சர்க்கரை. நான் கொண்டு வந்த நெய் முக்கால் கிலோ இருந்தால்...அந்த சர்க்கரையும் அவ்வளவுதான் இருக்க முடியும்?.."

வீரப்பன் திடீரென்று வெயிலில் உருகும் நெய் போல் ஆனான். "ஐயா வீரப்பனின் கடையில் சர்க்கரையை கட்டவிழ்க்காமல் அப்படியே கொண்டு வந்திருக்கிறேன்" சர்க்கரை தலைவரின் கைக்குப்போனது

திருப்பி.. திருப்பி பார்த்த தலைவர்.. சர்க்கரைப் பொட்டலம் அப்படியே இருப்பதைக் கண்டார். வீரப்பன் கொண்டு வந்த தராசில் சர்க்கரையை நிறுத்துப் பார்த்தார் தலைவர். சரியாக முக்கால் கிலோ இருந்தது. வீரப்பனுக்கு வியர்த்துக் கொட்ட தொடங்கியது விபரிதத்தால் மாட்டிக் கொண்டோமே என்று எண்ணினான் தலை சுற்ற தொடங்கியது அவனுக்கு.

தலைவரைப் பார்த்து "நெய் குறைந்தாலும் பரவாயில்லை அதை நான் எடுத்துக் கொள்கிறேன்" என்றான் வீரப்பன். எடுப்பது இருக்கட்டும் வீரப்பா இங்கே கொடுப்பது என்ன தண்டனை தெரியுமா? அதை நீ முதலில் பெற்றுக் கொள்"

வீரப்பா உன்னைப் பற்றி குறை கூறியது இந்த பால்காரன் மட்டும் அல்ல..இங்குள்ள அனேக பேர் உன் மீது குறை கூறியுள்ளனர் உன் செயலை வெளியில் எல்லோருக்கும் தெரியும் படி தெளிவுபடுத்தியது இந்தப் பால்காரன் மட்டும் தான்" பஞ்சாயத்து தலைவர் வீரப்பனை கண்டித்துக் கொண்டார்.

தண்டனை நிறை வேற்றப் பட்டது வீரப்பன் முகத்தை முடிக்கொண்டு மற்றவர்களை காண வெட்கித் தலை குனித்தபடி சென்றான்.

பால்கார பாக்கியராஜைப் பாராட்டி தலைவரும் அங்கிருந்தவர்களும் புகழ்ந்து அனுப்பினர்.

# அறிவியல் அரங்கம்

## வளி மண்டலம் என்றால் என்ன?

பூமியைச்சுற்றிக் கவிழ்ந்துள்ள வாயு மண்டலப் பரப்பை வளி மண்டலம் என்று அழைக்கின்றார்கள். வளிமண்டலம் ஆறு பகுதிகளைக் கொண்டது. அவையாவன

**அடிவளி மண்டலம (Tropospher):**

இப்பகுதியில் உயரம் மிகுதியாகும் போது வெப்பநிலை குறைகிறது. இப்பகுதியில் மேகம், பனி, மழை முதலியன உருவாகின்றன. இதன் மேல்மட்ட உயரம் 8 முதல் 20கி.மீ வரை ஆகும். கீழ் மட்ட உயரம் நிலப்பரப்பு வரை.

**மீயடி வளிமண்டலம (Stratosphere):**

அடிவளி மண்டலத்திற்கு மேல் அமைந்த பகுதி, இது. இதன் மேல்மட்ட உயரம் 16 முதல் 64கி.மீ வரை. இப்பகுதி அமைதியான பகுதியாகக் காணப்படுகிறது.

**இடைவெளி மண்டலம் (Mesosphere)**

இது வெப்ப நிலைப் பகுதியாகும். இதன் மேல் மட்ட உயரம் 50 முதல் 80கி.மீ வரை. இங்கே வெப்பநிலை கூடும் அல்லது குறையும். இல்லை இரண்டுமே மாறிமாறி நடைபெறுகின்றன.

**வெப்பவியல்மண்டலம (Thermospher)**

இது இடைவெளி மண்டலத்திற்கு மேல் அமைந்துள்ளது. இதன் உயரம் 520கி.மீ வரைக்கும் மிகுந்தாலும் வெப்பநிலை மாறாமல் இருக்கும்.

**அயனி மண்டலம (Lonosphere)**

இது பூமிப்பரப்பிலிருந்து மிகுந்த உயரத்தில் உள்ள பகுதி ஆகும். இதன் கீழ் மட்ட உயரம் 50முதல் 30கி.மீ வரை மேல்மட்ட உயரம் 480முதல் 960கி.மீ வரை. எலெக்ட்ரான் துகள் அடங்கிய பகுதி இதுவாகும். இது நீண்டதூர ரேடியோத் தொடர்புகளுக்கு பயன்படுகிறது. சூரியனில் இருந்து ஊதாக்கதிர்களும் விண்ணில் உள்ள காஸ்மாக் என்ற கதிர்களும் இப்பகுதியில் கலந்து எண்ணற்ற எலெக்ரான்களை உண்டு பண்ணுகின்றன.


**புறவளிமண்டலம் (Exosphere)**

இது வளிமண்டலத்தின் இறுதிப் பகுதியாகும். இப்பகுதியில் காற்றின் அடர்த்தி மிகக் குறைவாகும். எனவே, இங்குள்ள மின்னோட்டத்துகள்கள் பூமியின் ஆட்சியில் இருந்து விலகிச் செல்லும். பூமியின் காந்த சக்தி காரணமாக இங்குள்ள மின்னோட்டத்துகள்கள் அவ்வாறு தப்பிச் செல்வதில்லை.

வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்களாவன:- நைதரசன் 78.08 வீதமும், ஒட்சிசன் 20.94 வீதமும் வேறு வாயுக்களான காபனீரொட்சைட்டு, தூசு நீராவி, ஈலியம், ஆகன் போன்றவாயுக்கள் 0.97 வீதமும் காணப்படுகின்றது.

**தே.மதன்ராஜ்**
**தரம் - 08B**
**மட்/மெ.ம.கல்லூரி**

## சிங்கம் பற்றி சில------



சிங்கத்தை ராஜா என்பார்கள். கம்பீரமாக நடப்பவனையும் சிங்கம் போல் நடப்பவர் என்றுதான் புகழ்வார்கள் உங்களுக்கெல்லாம் அடேயப்பா சிங்கம் வீர பராக்கிரமம் உள்ளதென்றே படலாம்

உண்மையில் சிங்கம் வேட்டையாடவே சோம்பரித்தனம்படுகின்ற விலங்காகும்.அது மற்ற விலங்குகளின் மிச்ச இரையைக் கூட தின்னும் போதுமான ஆகாரம் கிடைக்காவிட்டால் தன் குட்டிகளை பட்டினி போட்டு விட்டு தான் மட்டும் வயிற்றை நிரப்பிக் கொள்ளும்.சில சமயம் தனது குட்டிகளையே அடித்து கொன்று விடுவதும் உண்டு

தொண்ணூறு சதம் வேட்டையாடுவது பெண் சிங்கம் தான் அது பட்டென்று இரையின் மீது பாயும் விலாவில் வளைத்துப்பிடிக்கும் பிறகு மெதுவாக குத்தி கிழித்துக் கொன்று விடும் நாம் நினைப்பது போல் கழுத்தில் அறைந்து கொல்வதில்லை

சமயத்தில் தமக்கும் இரைக்கும் உள்ள தூரத்தை தவறாக கணகிட்டு இலக்கை தவறிவிடுவதும் உண்டு

சிங்கம் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் தூங்கியோ கழிக்கிறது அல்லது ஓய்வெடுக்கிறது. மற்ற விலங்குகளின் இரையை திருட முடியாத சாந்தப்பங்களின் அது ஓரிரு மணி நேரம் வேட்டையாடுகிறது.

## கண்டு பிடியுங்கள்

**காற்றற்ற வெற்றிடமான ஓர் அறை. 200 மீற்றர் உயரமானது அதன் உச்சியில் அமைக்கப்பட்ட தளத்திலிருந்து ஒரு இரும்புத்துண்டைக் கீழே போட அது 3 வினாடிக்ளில் நிலத்தை வந்தடைந்தது. அதே தளத்தில் இருந்து ஒரு பறவையின் சிறகினைக் கீழே போட்டால் எத்தனை வினாடிகளில் அது நிலத்தினை வந்தடையும்? எங்கே கண்டு பிடியுங்கள் பார்ப்போம். ரூ.25 காத்திருக்கிறது.**

**அனுப்ப வேண்டிய முகவரி**
**கண்டு பிடியுங்கள் -7**
**தினக்கதிர் வார மலர்**
**155, திருமலை வீதி**
**த.பெ.எண் -06**
**மட்டக்களப்பு.**

**கடந்த வாரம் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான விடையினை பலர் எழுதியிருந்தனர். அவர்களில் குலுக்கல் மூலம் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டு**

*பரிசுபெறுபவர்*

**செல்வன்.உ.முரளி**
**திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

*பாராட்டப்படுவோர்*

**1.செல்வன்.சசிதரன் விதூஷன்**
**173/A ஏரன்ஸ் லேன்,**
**மட்டக்களப்பு.**
**2.ம.றோகன காந்**
**5/3 ஆர்.கே.எம்.ஒழுங்கை,**
**கல்முனை.**
**3.ஏ.மோகன்**
**பொலிஸ் ஸ்ரேஷன்,**
**மட்டக்களப்பு.**
**4.ஸ்ரீ.குணாதீதன்**
**10, தாமரைக்கேணி வீதி,**
**மட்டக்களப்பு.**
**5.ஆ.பிரியராஜ்**
**அமரசிங்கம் வீதி,**
**ஆரையம்பதி - 03.**

**விடை**
**8 நாட்கள்**

## சொல்லுங்கள் பார்ப்போம்

**ஐந்தடி வாழை ஒன்று நடப்பட்டால் எத்தனை நாட்களின் பின் அது குழையிடும். எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்.**

*முடியாவிட்டால் 14ம் பக்கம் பார்க்க*

# கதிரவன் பதில்கள்

**கேள்வி:** கதிரவனே உமக்குத் திருமணம் ஆகிவிட்டதா? உமக்கு நடிகை 'லைலா' லவ் லெட்டர் எழுதினால் என்ன செய்வீர்?

**க.கமலதாசன், வேதக்கோயிலடி, வந்தாறுமூலை**

**பதில்:** நடிகை "லைலா" love letter எழுதினால் நான் உமக்கு அக்கடிதத்தை அனுப்பிவிடுகிறேன். முடிந்தால் நீரே நடிகைக்கு நட்பு மடல் வரைந்து விடும்.

**கேள்வி:** அன்பின் கதிரவனே தலைப்பு ஒன்றின் கீழ் கவிதை எழுதுவதா? கவிதை ஒன்றை எழுதிவிட்டு தலைப்பு ஒன்றை வைப்பதா எது சிறந்தது?

**பா.நிறேஸ், செல்வாநகர், ஆரையம்பதி**

**பதில்:** போட்டிக்கவிதைகளுக்கு பெரும்பாலும் தலைப்புத் தந்து விட்டு கவிதை எழுத வேண்டி வரும். மற்றுப்படி அநேகமாகவை கவிதையை எழுதிய பின் பொருத்தமான தலைப்பை நாமே தீர்மானிக்கலாம்.

**கேள்வி:** கதிரவனே! அண்மையில் பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் இரு தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளானதாக வந்த செய்திக்கு பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மறுப்புத் தெரிவித்திருக்கிறாரே.. நீதி இன்னும் எத்தனை நாளைக்குத் தூங்கும்?

**சே.மு.முகைதின், பகுறியாவீதி, காங்கேயனோடை-13**

**பதில்:** அநீதி ஆட்சி பீடத்தில் உள்ள மட்டும் நீதி தூங்கியே கிடக்கும். இதற்கு வழி காண்பது நீதி உள்ள மனிதர்களால் மட்டுமே முடியும்.

**கேள்வி:** மட்டுநகரில் ஒரு பிரபல பெண்கள் கல்லூரி மாணவிகள் பீச்சுக்குப் போய் வியர் குடித்ததாக கூறுகிறார்களே உண்மையா கதிரவனே?

**அ.ராட்சன், சந்திரா லேன், மட்டக்களப்பு**

**பதில்:** ஏன் நீர் அதைப்பற்றிச் சிந்திக்கிறீர். பெண்கள் பியர் குடிக்கக் கூடாது என்று யார் சொன்னது. அந்த மாணவிகளுக்கு சின்னச் சின்ன ஆசை அதுதான். சின்ன வயதில் இதைக் குடித்துள்ளார்கள். பொதுவாக குடி கேடு. இது ஆண்களுக்கும் பொருந்தும், பெண்களுக்கும் பொருந்தும். பியர் குடிப்பது தான் சம உரிமை என்ற எண்ணம் இந்த சிறுசுகளுக்கு வந்துத்துப் போல.

**கேள்வி:** வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தினக்கதிருக்கு வழங்கிய பேட்டியைப் பற்றி உமது கருத்து என்ன கதிரவனே?

**எஸ்.கமலதாஸன், ஆரையம்பதி.**

**பதில்:** தான் தமிழன் என்பதை அவர் நிலை நாட்டியுள்ளார். இவரைப் பார்த்தாவது ஏனைய 'தமிழர்கள்' திருந்த வேண்டும்.

**கேள்வி:** நாட்டில் எப்போது சமாதானம் வரும்?

**ஏ.டபிள்யூ.இஸ்மையில், அல்.அர்லுத்.ம.வி சம்மாந்துறை**

**பதில்:** பார்வையாளராக இருக்காமல் பொது மக்கள் அனைவரும் பங்காளியாக மாறவேண்டும். ஊர் கூடி இழுத்தாத் தான் தேர் நகரும்.

**கேள்வி:** காதலியிலிருந்து பதிலை எதிர் பார்ப்பதற்கும் கதிரவனிலிருந்து பதிலை எதிர் பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம்?

**என்.சசிதரன், செல்வாநகர், ஆரையம்பதி-02**

**பதில்:** காதலியின் பதிலை நீங்கள் மட்டுமே சுவைப்பீர். கதிரவனின்



பதிலை எல்லோரும் சுவைப்பார்கள்

**கேள்வி:** நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு என்ன காரணம்? இதனை எவ்வாறு தீர்க்கலாம்?

**ஏ.டபிள்யூ.இஸ்மைல், சம்மாந்துறை**

**பதில்:** போருக்கு ஆயுதம் தேவை. அதனால் பொருட்களுக்கு விலை கூடுகிறது. எங்களுடைய தலைகளில் குண்டு போடுவதற்கு எங்களிடமே பணம் அறவிடுகிறார்கள். இதனால் தீர்ப்பதற்குப் போர் நிறுத்தப்பட்டால் மட்டுமே சாத்தியம்.

**கேள்வி:** வன் முறையைக் காட்டிலும் பேனாமுனை வலிமை மிக்கது என்கிறார்களே? உண்மையா?

**அ.மகாசுமேதை, அம்பிளாந்துறை.**

**பதில்:** உண்மையென்பதால் தானே செய்தித் தணிக்கை பத்திரிகையாளர் மீது தாக்குதல் எனப் பலதும் நடக்கிறது

**கேள்வி:** காதலுக்குத் தூது வைக்காதே என்று கூறுகிறார்களே, ஏன் கதிரவனே?

**பா.நிறேஸ், ஆரையம்பதி**

**பதில்:** 'தூது' 'காதலை'க் கவ்விக் கொண்டு போய்விடக் கூடாது என்பதற்காகத்தான்.

**கேள்வி:** சமாதான முயற்சிகளில் இருந்து எரிக் சொல்ஹெய்மை ஓரங்கட்டியது பற்றி உங்கள் கருத்து என்ன?

**ஆ.தவச்செல்வன், வந்தாறுமூலை.**

**பதில்:** சமாதானத்தையே ஓரம் கட்டும் முயற்சி என்றே கருதுகிறேன்.

**கேள்வி:** வடக்கு கிழக்கு வைத்தியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் பற்றி உமது கருத்து என்ன?

**பு.டிலக்ஷன், ராதாலயம் அம்பிளாந்துறை**

**பதில்:** வைத்தியர்களின் கோரிக்கை நியாயமானது தான். நோயாளர்களின் நிலமை தான் பரிதாபகரமானது.

**கேள்வி:** இந்து ஆலயங்களில் ஏன் பெண்கள் பூசை முடிப்பதில்லை.?

**அ.குலாம்பிகை, ஆண்டு-5 மட்.வின்சன் மகளிர் தேசிய கல்லூரி**

**பதில்:** ஆண்களாலேயே இந்து ஆகமவிதி எழுதப்பட்டமையினால் பெண்களுக்கு அதில் இடம் கொடுக்கவில்லை போலும்

**கேள்வி:** கவிதைக்குப் பொய் அழகு என்று சொல்கிறார்களே, உண்மையா கதிரவனே?

**சீ.அல்லிராணி, இருதயபுரம்.**

**பதில்:** இதுவும் ஒரு கவிதையில் (பாட்டில்) தானே சொல்லப்பட்டுள்ளது.

**கேள்வி:** அன்பின் கதிரவனே நான் படிப்பவை எல்லாம் மனதில் இருக்க வேண்டும் என் நினைக்கிறேன். ஆனால் முடியவில்லை என்ன பரிகாரம் செய்யலாம்?

**கி.பத்மநாதன், ஸ்ரீமகாவிஷ்ணு வித்தியாலயம் வந்தாறுமூலை.**

**பதில்:** படிப்பது எதுவானாலும் மனதை ஒரு நிலைப்படுத்தி படிப்பதை பூரணமாக விளங்கிப் படித்தால் அது மனதைவிட்டு ஒரு போதும் அகலாது.

**கேள்வி:** மட்டுநகரின் நகர அபிவிருத்தித் திட்டம் பற்றிய கதையை இப்போது காணவில்லையே ஏன்?

**தி.நிரோஷினி, பற்றிமாகிரி லேன், மட்டக்களப்பு**

**பதில்:** யார் சொன்னது? எதிர் வரும் யூலை 10ம் திகதி நகர அபிவிருத்திக்கான அடிக்கல் நடும் விழா இடம் பெறுமாம்.

**கேள்வி:** காதலித்து ஏமாறுபவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

**கி.ஜெகமோகன், இராஜதுரைக்கிராமம், ஆரையம்பதி**

**பதில்:** மனிதக் காதலில் ஏமாந்திருந்தால் மண்ணைக் காதலி. நாட்டைக் காதலி நீ ஏமாற மாட்டாய். வெற்றி நிச்சயம்.

---

## உயிரே உனக்காக



ஆறும், 'அறுபதென்று(ம்)
சிறிதும்
போருக்குத் தெரியாது
ஒரு பொருளும் எடுக்காமல்
ஓடு ஓடென்று விரட்டும்.

**ந.சசிகரன், செல்வாநகர், ஆரையம்பதி-02.**

**போட்டி இல:- 07**
**பரிசுக்குரியது**

## யாருக்காக.........?

பெற்றவர் உற்றார் இல்லை.
துணையுடன் பிள்ளைகளும்
இல்லை- இப்போ
நல்லலெண்ணத் தூதுவருமில்லை
இனி
நாங்களும் பேரினத் தீயில்
அழிந்திட்டால்
யாருக்குத் தேவை இந்த
தழ(ல்) ச(வ)ன மதிப்பீடு?

**கிரானூர் பிரசன்னா**

## தலைவிதியிது தான்

நால்வராய் நாம் வாழ்ந்து
இருவரையிழந்து மீதியிருவராகி
சொர்க்கமான சொந்த மண்ணை
துக்கமுடன் விட்டகன்று அகதிகளாகி
ஓரமாய் ஒதுங்கிட ஓரிடமின்றி
பட்டினியின் மயக்கத்தில்-நாமிருவரும்
மரத்தடியில் மரணித்தால்
புதைத்திடுங்கள் வேரடியில்
எங்கள் தலைவிதியிது தான்

**சுந்தரி பூபாலசிங்கம், பாண்டிருப்பு**

## சுதந்திரமாய் சோறுண் போம்

அழாதே மகளே அழாதே......
கூழ் காச்சித் தருகிறேன்- உன்
அண்ணனின் புயல் வேகம் கண்டு
அப்பாவைக் கொன்றொழித்த
இனவாத அரக்கர் படை
புறங்காட்டி சிதறியொரு தரம்
மலர்ந்திடும் ஈழத்தில்
அண்ணன் வந்திடுவான்
சுதந்திரமாய் சோறுண்போம்

**கே.எஸ்.சிவமதன், கரடியனாறு.**

## விட்டு விடாதே...!

ஈழத்தாயாக பிறந்து
வீடு மனையினை யிழந்து
உடன் பிறப்புக்களையெல்லாம்
பொல்லாத......
எறிகணைக்கு இரையாக்கி
தன்னுயிர்க் கணவனைத் தானும்
படையினர்க்குப் பலி கொடுத்து
வீதியோரம் தஞ்சமென்றிருக்கும்
தமிழ்த் தாயே........
நீ....மீதமுள்ள.....
குழந்தையைத் தானும்
விட்டுவிடாதே..!

**எஸ்.கிருஷ்ணன், மட்டு.கன்னங்குடா, கன்னங்குடா.**

## மாறாத அவலங்கள்

இனிமையை இழந்த இலங்கை
தமிழ் மண்ணே!
உன் இருப்பிடத்தில் தான்
எத்தனை அவலக் கோலங்கள்
கணவனை இழந்து கையில்
குழந்தையுடன்
அகதிகள் என்னும் முத்திரை
குத்தப்பட்டு
அனாதைகளாய் வாழ்வோர்
நிலை
என்று தான் மாறுமோ?

**தி.வினிதா, காளிகோயில் வீதி, ஊறணி, மட்டக்களப்பு.**

## ஆந்நாமையின் வெளிப்பாடு

உக்கிர யுத்தத்தால் ஊரை விட்டு
காடு மேடு அலைந்து கால் வலிக்க
வந்து
காலாறி இருக்கன் அதற்குள்
ஓ....அழாதே கண்ணே அழாதே.....
உன்னைத் தொட்டிலிட்டு சீராட்டி
உறங்க வைக்க தகப்பனார்
வரட்டும் அழாதே தங்கமே
அழாதே....
உப்புக் கஞ்சி ஆறவச்சி -இதோ
என் கண்மணிக்குத் தர்ரேன்
அழாதே மோனே அழாதே....

**திருமதி.எஸ்.ஹரி, ஆரையம்பதி-03**

## முடியாது

வந்தேறு குடியென்றார்
வகை தொகையால்
கைதும் செய்தார்
வயிற்றுப் பசி தீர்க்கும்
உணவுக்கும் தடை போட்டார்.
வாட்டியெடுத்தால்
வழிக்கு வந்திடுவார் என்று
கனவும் காண்கிறீர்கள்!

**அ.ஜெயதீபி, களுவாஞ்சிக்குடி.**

## யார் தே(நே)சத் துரோகி?

பாலூட்டத் தாயானேன்
பாசமூட்ட சேயானாய்
வாழ்வூட்ட இருந்தவரின்
வாழ்நாள் இறந்த காலமாக
நிகழ் காலத்தில் எதிர் காலத்தை
நினைக்கிறது நெஞ்சு
தேசத் துரோகியாக வராது
இருக்க
நேசத் தாயாகிய நானுமுண்டு-
என்
பாசமிகு பிஞ்சுக்கும்
கொடுக்கிறேன் நஞ்சு

**இ.இமைக்ஷான், 39,திருச்செந்தூர் வீதி, கல்லடி, மட்டக்களப்பு**

## கானல் நீர்

"கணவனை இழந்து
சொத்துக்களை இழந்து
மரத்தடியை இருப்பிடமாக்கி
சமாதனத்தை எதிர் பார்த்து
கண்ணீருடன் இருக்கும் எமக்கு
சமாதானம் கானல் நீரோ"

**ஏ.ரி.செல்வன், வந்தாறுமூலை**

## நிழல்கள்

சோற்றுக்குத் திண்டாடினாலும்
சொந்த மண்ணில்
சொர்க்கம் கிடைக்குமென்று
எண்ணிய எம் கனாக்களை
நிஜமாக்காமல் நிழல்களாகவே
தந்து விட்டு
சொல்லாமல் சென்றதேனோ
- சொல்ஹெய்ம்!

**எம்.கிருஷ்ணா, மட்டக்களப்பு.**

## மகனே(ளே)!..


இரத்தத்தைப் பாலாக்கி
வியர்வையைப் பணமாக்கி
வளர்ப்பேன் உன்னை
என்றெண்ணி இருக்கையில்
போசாக்கில்லாத் தாய்மாரில்
நானொருத்தியானேன்
நீ கதறும் கதறலுக்கு
என் பதில் சொல்வேன் நான்
புட்டிப்பாலை தாய்
பாலாக்குவதை
தவிர.........

**எம்.ரோகனகாந், ஆர்.கே.எம்.வீதி, கல்முனை.**

## உண்மைத்தாய்

கரடு முரடான வாழ்க்கையிலும்
அகதி முகாமில் அடைபட்டுக்
கிடந்து
கட்டிய கணவனையும் இழந்து
பெற்றெடுத்த குழந்தைக்கு
உணவூட்டி வளர்க்கிறாளே!
உண்மையான தாய் தான் இவள்.

**கே.மதன்ராஜ், 2/22, மாமாங்கம், மட்டக்களப்பு.**



பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டவர் தனது பரிசினை காரியாலயத்தில் வந்து பெற்றுச் செல்லலாம்.

**இப்படத்தை பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகம் இல்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு 50 ரூபாய் பணப்பரிசு வழங்கப்படுவதுடன் அக் கவிதையும் பிரசுரிக்கப்படும். மேலும் உங்களுடைய கவிதைகளை 15ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:-**

**கவிதைப்போட்டி - 08**
**தினக்கதிர் வாரவெளியீடு**
**த.பெ.எண்:- 06**
**மட்டக்களப்பு**

# 'கணவனும் மனைவியும் கைையத் தொட்டுக் கொள்ளவும் வழியில்லை'

வடக்கு கிழக்கில் நீண்ட காலமாகத் தொடரும் யுத்தமானது உயிர், உடைமை அழிவுகளை மாத்திரம் ஏற்படுத்தவில்லை. தற்கொலையில் நாட்டம் கொண்ட சமுதாயமொன்றையும் உருவாக்கியிருக்கிறது என்பதற்கு வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்கள் சிறந்த உதாரணம்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில வருடங்களாக இடம்பெற்ற தற்கொலைகளில் 39 சதவீதமானவை நலன்புரி நிலையங்களில் சம்பவித்திருக்கின்றன. வவுனியாவிலுள்ள சுகாதார வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ள திடுக்கிடும் தகவல் இது. நலன்புரி நிலையங்களில் வாழ்வோரில் பெருமளவானோர் வாழ்க்கையில் விரக்தி கொண்டவர்களாகவும், உயிரை மாய்த்துக் கொள்வதில் நாட்டம் உள்ளவர்களாகவும் காணப்படுவதாக சுகாதாரப்பிரிவு தகவல் கூறுகிறது.

வவுனியாவில் எல்லாமாக 15 நலன்புரி நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றில் வாழ்பவர்கள் வன்னி மற்றும் யாழ்குடாநாட்டிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்கள். வன்னியில் வாழ்ந்து நேரடியாக இடம் பெயர்ந்து வந்தவர்கள் ஒரு புறம் .... யாழ்குடா நாட்டு இராணுவ நடவடிக்கைகளால் வன்னிக்கு அகதிகளாக வந்து வாழ்ந்து மறு தடவை அகதிகளாக வவுனியாவுக்கு இடம்பெயர்ந்தோர் மறுபுறம்.......

வவுனியாவில் உள்ள முகாம்களை அரசாங்கம் நலன்புரி நிலையங்களென கண்ணியமாக அழைத்துக் கொள்கிறது. ஆனால் இவையெல்லாம் உண்மையில் அகதி முகாம்கள்தான். அகதி முகாம்களிலும் பல்லாயிரம் பேர் பல வருட காலமாக அகதிகளாக வசிக்கின்றனர். அங்குள்ள அவல வாழ்வுகள் விபரிக்க முடியாதவை. நீண்ட கால அவலங்களால் விரக்தியின் விளிம்பையும் கடந்து விட்டவர்கள் இவர்கள்.

அகதிகளின் தற்கொலை நாட்டத்துக்கு டாக்டர்கள் பல்வேறு காரணங்களைக் கூறுகிறார்கள்.



தொழில் எதுவும் கிடையாது. யுத்த சூழலில் நீண்ட காலம் வாழ்ந்ததனால் உண்டான மனஅழுத்தம், பிள்ளைகளுக்கு கல்வி வசதியின்மை, உறவினர்களைப் பிரிந்து நீண்ட காலம் வாழ்வதால் உண்டான ஏக்கம், நிச்சயமற்ற எதிர்காலம்.....

இவ்வாறு பல்வேறு காரணங்கள்.......எல்லாவற்றுக்கும் மேலாக அங்கு கிடைக்கும் உணவு நிவாரணம் அடியோடு போதுமானதாக இல்லை. கவலையை மறக்க முனைந்து பலர் மட்டரகமான மதுவுக்கும் அடிமையாகி விட்டனர். எப்படியாவது கொஞ்ச நாள் வாழ்ந்து விட்டுப் போகலாமென்ற மன நிலையே பலரிடம் உள்ளது.

பத்து அடி நீளமும் அகலமும் கொண்ட அடைப்புக்குள் குடும்ப மொன்று வருடக்கணக்கில் வாழ்வதாயின் அவர்களுக்கு விரக்தி தோன்றுவதற்கு வேறு காரணமே தேவையில்லை. கணவன் மனைவியரிடையே எந்த வித அந்தரங்கத்துக்கும் இடம் கிடையாது. பிள்ளைகள் மத்தியிலேயே அனைத்து விடயங்களையும் பேசிக் கொள்ளவோ ஆலோசிக்கவோ முடிகிறது. சிறிய இடமொன்றில் அனைவரும் ஒன்றாகவே படுத்து உறங்குகிறார்கள்.

இன்னும் சற்று வெளிப்படையாகக் கூறுவதாயின் கணவனும் மனைவியும் கைகளைத் தொட்டுக் கொள்வதற்குக் கூட அந்தரங்கமான சூழல் அங்கு இல்லை. கணவன் மனைவிக்கிடையே பல வருட காலமாக தொடருகின்ற பாலியல் விரிசல்களை அங்குள்ள அகதிகள் வெளிப்படையாகக் கூறுவதுண்டு.

இது நகைப்புக்கிடமான

> **வவுனியாவில் வாழும் பரிதாப ஜீவன்கள்!**
>
> **உயிரை மாய்க்கும் ஆசை பெருகுகிறது**

விடயமல்ல. உண்மையில் கொடுமைதான். அவர்கள் பாவத்திற்குரிய ஜென்மங்கள் என்பதைத் தவிர வேறு எதுவுமே கூற முடியாதுள்ளது. இளம் தம்பதியர் பலரும் வவுனியா நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றனர். இவர்களின் நிலமையும் இதே பரிதாபம்தான்.

அகதிகளில் பெரும்பாலானவர்கள் ஏதோவொரு வகையில் உளவியல் தாக்கத்துக்கு உட்பட்டிருப்பதாக வவுனியா ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் கூறுகிறார்கள்.

வீடு, வாசல் நிலபுலன்களைக் கைவிட்டு வந்து பல வருடங்களாகி விட்டது. இனிமேல் இருப்பிடம் திரும்புவதற்கும் சந்தர்ப்பம் கிடையாது. அந்திம காலம் வரை அகதிகளாக வாழ வேண்டிய பரிதாபத்திலேயே இவர்களெல்லாம் உள்ளனர். யுத்தம் முடிந்தால் கூட இவர்களெல்லாம் வாழ்க்கையைப் பழையபடி கட்டியெழுப்புவதென்பது சாத்தியமற்ற விடயம். கவலைப்படுவதற்கும் எல்லை உண்டு. இதனால்தான் அகதிகள் தற்கொலையை நாடுவது அதிகமாகவுள்ளது.

தற்கொலை செய்து கொள்வோரில் 74 சதவீதமானோர் ஆண்களென்பது மற்றுமொரு தகவல். அதுவும் 21வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களே கூடுதலாக உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். யுத்த அவலம் குடும்பப் பாரம் காரணமாக இவர்கள் உயிரை மாய்க்கும் முடிவுக்கு வருகிறார்கள்.

உலகில் தற்கொலை வீதத்தில் உச்சத்தில் இருக்கும் நாடு



ஹங்கேரி. இரண்டாவது நாடு இலங்கை.

இலங்கையில் தற்கொலை செய்வோரின் வீதமானது சமீப காலமாக குறைவடைந்து வருகின்ற போதிலும் வவுனியா மாவட்டத்தில் தற்கொலை மற்றும் தற்கொலை முயற்சி மேலும் அதிகரித்தே வருவதாக சுகாதாரத் திணைக்கள மதிப்புக் கூறுகிறது. இம்மாவட்டத்தில் 1998ம் ஆண்டு 58 பேர் தற்கொலை செய்து கொண்டனர். 1990ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 61 ஆகவும் 2000ம் ஆண்டில் 62 ஆகவும் உயர்ந்தது.

ஆனால் 1999ம் ஆண்டில் எல்லாமாக 311 பேர் தற்கொலை முயற்சி செய்துள்ளனர். 2000ம் ஆண்டில் 407 பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். இவ்விரு வருடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் தற்கொலை முயற்சியானது 31 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது.

கடந்த 2000ம் ஆண்டில் வவுனியா ஆதார வைத்தியசாலையில் சம்பவித்த மரணங்களில் 12 சதவீதமானவை தற்கொலை மரணங்களென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறுகிறது.

அகதிகளிடையே தற்கொலை மனோபாவத்தை மாற்றுவது தங்களது கைகளில் இல்லையென்பது வைத்தியர்களின் கருத்து. யுத்தம் முடியாதவரை இப்பிரச்சினைக்குத் தீர்வும் இல்லையென்பது அவளின கருத்து. யுத்தம் முடியாதவரை இப்பிரச்சினைக்குத் தீர்வும் இல்லை.

நலன்புரி நிலையங்களில் வாழ்வோரின் அடிப்படைத் தீர்வு குறித்து உரிய கவனம் செலுத்தப்படாத இந்நிலையில் உளவியல் தாக்கம் குறித்து சிந்திக்க எவரும் தயாராக இல்லை. உளவியல் தாக்கத்துக்கு உள்ளானோரை வவுனியாவிலிருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பினாலும் கூட அங்கேயும் உரிய கவனிப்பும் கிடையாது. வியாதியை முற்ற வைப்பதற்கே வழியேற்படும் என்கின்றனர் வைத்தியர்கள்.

அலரி விதை உட்கொள்வதன் மூலம் பெரும்பாலானவர்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். வறிய நிலையில் வாழும் அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் தற்கொலைச் சாதனம் அலரி விதை!

தங்களுக்குள்ளேயே பரிதாபங்களைப் புதைத்துக் கொண்டு அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருக்கும் மனிதப் பிறவிகள் இவர்கள். இந்த அவலம் அனுபவித்தால் மட்டுமே புரியும்.

-நன்றி - 'வான்முரசு'-

# வடிசாராய ஒழிப்பில் ஈடுபடும் அரங்கச் செயற்பாட்டுக்குழு

வவுனியா மாவட்டத்தில் வடிசாராய விற்பனை, உற்பத்தி, குடிப்பது என்பவற்றினை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் அரங்கச் செயற்பாட்டுக்குழுவினர் ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கையினால் இயங்கராவூர் என்ற கிராமத்தில் வடிசாராய உற்பத்தி முற்றாக தடுக்கப்பட்டு உள்ளது. இதே போன்று அண்மையில் பாவற்குளம் பகுதியில் வடிசாராய ஒழிப்பு நடவடிக்கையில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர், பாவற்குளம் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினர், சமுர்த்தியைச் சார்ந்தோர் என அனைவருடனும் அந்தப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர், பொதுமக்கள் என அனைவரும் ஒன்று திரண்டு அரங்காற்றுகை ஒன்றின் மூலமாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வடிசாராயத்திற்கான எதிர்ப்புணர்வை தூண்டினர். மக்களில் பெரும்பாலானவர்கள் வன்முறை ரீதியாக வடிசாராய ஒழிப்பு நடவடிக்கைக்கு ஆர்வம் காட்டிய போதும் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் மக்களைச் சாந்தப்படுத்தி வன்முறையற்று செயற்படவேண்டுமென விளங்கப்படுத்தியுள்ளனர். பெரும்பாலும் பெண்களே தமது பாதிப்புக்களைச் சொன்னதுடன் வடிசாராயத்தின் மூலமான அனைத்து பாதிப்புக்களையும் தடுக்க வேண்டுமென்று குரல் கொடுத்துள்ளனர். இந்த அரங்காற்றுகையின் போது வடிசாராயம் முற்றாக ஒழிக்கப்பட்டதை ஏனைய கிராமங்களில் பெருமகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறுவதற்காக கலந்து கொள்கின்றனர்.

அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் இந்த நடவடிக்கை பெரும்பாலானவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் வடிசாராயம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற நல் நோக்குடன் அவர்கள் செயற்படுவது புரிகின்றது. அத்துடன் குழுவொன்றினை அமைத்து மேலும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது அவர்களின் செயற்பாட்டுக்கு வலுவூட்டுகிறது.

ஒரு சிலரைத் தவிர வடிசாராய ஒழிப்பிற்கு அனைவரும் பொதுமக்கள் தரப்பில் ஆதரவு இருப்பதால் வடிசாராயம் முற்றாக ஒழிக்கப்படக் கூடிய செயற்பாட்டில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் தொடர்ந்தும் ஈடுபட வேண்டும். எவரும் கைவைக்காத இந்தப் பணி எல்லோரும் ஒன்றுபட்டு இல்லாதொழிக்க வேண்டியதாகும்.

**கனகரவி**
**வவுனியா**

# இஞ்சாருங்கோ



**மனைவி:** 83 கறுப்பு யூலை சம்பவத்திற்கு விஷேட ஆணைக்குழு நியமித்து விசாரிக்கப் போறாங்களாமே....

**கணவன் :** பத்தொன்பது வருடத்திற்கமுன் நடந்த சம்பவம் இப்ப திடீரெண்டு ஏனாம் ஆராயப் போறாங்க?

**மனைவி :** அதுதான் நம்ம நாட்டு அரசியல்

**கணவன் :** கிட்டடியில நடந்த செம்மணிப்புதைகுழி, பிந்துனுவெவ படுகொலையெல்லாம் எப்பயாம் ஆராயிற?

**மனைவி :** அதுக்கு இன்னும் இருபது வருஷம் போகோணும்.

**கணவன்:** நம்மட மாவட்டத்தில கொக்கட்டிச்சோலை, சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை எல்லாம் நடந்த கொலைகளும் இவருக்கு ஞாபகம் இல்லைப்போல....

**மனைவி :** எப்படி அது ஞாபகம் வரும்? இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் தானே ஞாபகம் வரும்.

**அம்பிகை**

ஊர்வலம்..........

# கடல் வழி வந்த சீர் பாத தேவியின் தரிசனத்தால் அரச குலக் கோட்டமாக மகிமை பெற்ற திருப்பதியாம் வீரமுனை

(சென்றவாரத் தொடர்.....)

## பூர்வீகம்

சங்க காலம் தொடக்கம் பெரும் புகழுடன் வாழ்ந்த சோழ மன்னர்களது வரலாற்றிலே ஆறு நூற்றாண்டுகள் இருள் படிந்த காலமாகும். கி.பி.300 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி. 800 ஆம் ஆண்டு வரைக்கும் சோழ நாட்டு வரலாறு இருள் மண்டியதாகும். இக் காலத்தில் சோழர்கள் முடி இழந்து சிற்றரசர்களாக வாழ்ந்தார்கள். இருண்ட காலத்துச் சோழ மன்னர்களைப் பற்றிச் சோழ வரலாறு மௌனமே சாதிக்கிறது. இருந்தாலும் சில சோழ மன்னர்களைப் பற்றிப் பெரிய புராணமும் திருமுறைகளும் கூறுகின்றது.



சோழர்கள் இருண்ட காலத்திலே சோழ மன்னர்கள் சிற்றரசர்களாக உறையூர், பழையாறை, திருவாரூர் என்னும் நகரங்களிலிருந்து கொண்டு செங்கோல் செலுத்தினார்கள்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்து பழையாறை நகரமே சோழர்களது தலைநகராக விளங்கியது. பழையாறை அரியணை வழியிலே சோழ மன்னனாகக் கி.பி.831 ஆம் ஆண்டு குமராங்குசன் முடிபுனைந்தான்.

குமராங்குசன் நந்திவர்ம பல்லவனின் ஆணையை ஏற்றுக் கொண்டு திறை செலுத்தும் சிற்றரசனாகச் செங்கோல் செலுத்தி வந்தான். பல்லவனுக்குத் திறை செலுத்தும் மன்னவனாகக் குமராங்குசன் செங்கோல் செலுத்தி வந்தாலும், கொடையில் கர்ணனை நிகர்ந்தவனாக விளங்கினான்.

### ஐ..எல்.ஜலீல்

நேர்மை, ஒழுக்கம் என்னும் பண்புகளை ஆபரணமாகப் பூண்ட குமாரகுசன் தெய்வ பக்தியிலும் தர்ம சிந்தனையிலும் இணையற்று விளங்கினான். குடி மக்களைத் தன் மக்கள் போல் பேணிக் காத்து வந்த குமாரங்குசனது பெருமைகளைப் பற்றி வேலூர் பாளையச் செப்பேடுகள் சிலாகித்துக் கூறுகின்றன.

சோழர்களது இருண்ட காலச் சிற்றரசு வாழ்க்கைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைப்பது போல் விஜயாலயன் என்னும் வீரப்புதல்வனைப் பெற்றெடுத்தான். குமராங்குச சிற்றரசன் இளவரசன் விஜயாலயனது ஒரே பேறான தங்கையாகப் பிறந்தாள் இளவரசி சீரபாத தேவி! குமராங்குச மன்னனது அரவணைப்பிலே, பழையாறையில் விஜயாலயனும் சீரபாத தேவியும் வளர்ந்து வயதெய்தினார்கள்.

இக்காலையில் பழையாறை அரண்மனைக்கு வந்த அமைச்சரைச் சோழ மன்னனான குமராங்குசன் அகம் மலர அன்புடன் வரவேற்றான். சிங்கை மன்னனின் பரிசுப் பொருட்களை முன் வைத்த அமைச்சர், திருமணச் செய்தியையும் வெளிப்படுத்தினார்.

பல்லவ வேந்தனுக்குத் திறை செலுத்திச் சிற்றரசன் போல் வாழ்ந்து வந்த குமராங்குச சோழன், சோழ நாட்டின் நலத்தைப் பொறுத்து சிங்கை மன்னனது சம்பந்தத்தை விரும்பினான். தனது மகள் சீரபாத தேவியினைச் சிங்கை மன்னவனுக்குக் கொடுப்பதற்கு இயைந்தான். திருமண முகூர்த்த நந் நாள் குறித்து அமைச்சர் சிங்கை நகர் திரும்பினார்.

மன்னவன் பாலசிங்கன் திருமணத்திற்காக நாட் குறித்து வந்தது பற்றிக் குதூகலப்பட்டான். பெரியவர்கள் நிச்சயித்த நந்நாளில் சிங்கை மன்னவனாகிய ஜெயதுங்க பரராசசிங்கன், சோழ இளவரசி சீரபாத தேவியினை மக்கள் மனமார வாழ்த்த பழையாறை அரண்மனையில் திருமணம் செய்து கொண்டான்.

புதுமணத் தம்பதிகள் வெகு மகிழ்வாக ஓர் திங்கள் பொழுதினை இன்பமாகச் சோழ நாட்டிலே கழித்தார்கள். சிங்கை மன்னவன், பழையாற்றை நகரத்திலே இன்பத்தின் எல்லையில் என்னாளும் நீந்திக்கொண்டிருக்க முடியுமா? தனது வள நாட்டிற்குத் திரும்ப வேண்டிய தன் அவசியத்தை இல்லாள் சீரபாத தேவியிடம் கூறினான்.

கணவன் வாழும் இடம் தானே மனைவிக்கும். ஆகவே கணவனுடன் சிங்கை நாட்டிற்குச் செல்லச் சீரபாததேவி தந்தையிடம் அனுமதி கோரினாள்.

ஒரே பேறான மகளாக சீரபாத தேவி இருந்தாலும், கணவனுடன் இணைந்து வாழவேண்டியவளாயிற்றே! கணவன் வாழும் இடம் தானே மனைவிக்குச் சொர்க்கம். ஆகவே அருமை மகளைச் சிங்கை மன்னவனுடன் தனிமையாகக் குமராங்குச சோழன் அனுப்பி வைக்காமல் தன் மக்களிற் பலரைத் துணையாகச் சேர்த்தான்.

(தொடரும் -)

# இந்த வாரம் உங்கள் பலன்

## (17.06.2001-23.06.2001)

**மேடம்:-**

((அச்சுவினி, பரணி,கார்த்திகை 1ம் கால்)

கோபம், பயம், மனவைராக்கியம் உண்டாகும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். கல்வி தொழில் விருத்தியடையும். புகழ் சேரும் குடும்பத்தில் குதூகலம் நிலவும். பணத் தட்டுப்பாடு சிக்கல் நீங்கும். வழக்கில் வெற்றி விடுதலை கிடைக்கும். புதிய தொழில் சேரும். கடிதத் தொடர்பு கிடைக்கும். சமிபாட்டுக் குறைபாடு. சிறு காயம் ஏற்படும். அதிஷ்ட நாள்:ஞாயிறு, திங்கள்

**இடபம்:-**

(கார்த்திகை 2,3,4ம் கால் ரோகிணி, மிருகசீரிடம் 1,2ம் கால்)

கவலை கஷ்டம் நோய் பிணிகள் நீங்கும். மனநம்பிக்கை உண்டாகும். கல்வி, தொழில் விருத்தியடையும். வேலைச் சுமை அதிகம் இருக்கும். குடும்பத்தில் சிறு வாக்குவாதம், பெண்ணால் தீமை ஏற்படும். எண்ணிய படி பண வரவு கிடைக்கும். புதிய தொழில் சேரும். பொருள் தொலையும். திருமணம் ஒப்பந்தமாகும். வெளியூர் சென்று வாழ்வீர்.
அதிஷ்ட நாள்:புதன், வியாழன்

**மிதுனம்:-**

(மிருகசீரிடம் 3,4ம் கால் திருவாதிரை, புனர்பூசம், 1,2,3ம் கால்)

பயம், நோய், கவலை ஏற்படும். மற்றவர்களால் தீமை உண்டாகும். கல்வி, தொழில் மந்தமாக இருக்கும். செல்வாக்கு குறையும். தொழில் தாபனத்தில் எதிர்பாராத பிணக்குகள் ஏற்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். அதிக பணச் செலவு ஏற்படும். காதல் திருமணம் கைகூடும். பொன்,பொருள் தொலைந்துபோகும்.
அதிரஷ்ட நாள்:- திங்கள், செவ்வாய்.

**கடகம்:-**

(புனர்பூசம் 4ம் கால், பூசம், ஆயிலியம்)

பற்பல சிக்கல்களை எதிர் கொண்டு வாழ்வீர். கல்வி தொழில் மந்தமாகும். செல்வாக்குக் குறையும். தொழில் இடை நிறுத்தம் இடமாற்றம் ஏற்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். பணத் தட்டுப்பாடு உண்டாகும். காதல் திருமணம் கைகூடும். கால், முகம் இவற்றில் காயம் உண்டாகும். குரு வழிபாடு செய்யவும்.
அதிஷ்ட நாள்:திங்கள், செவ்வாய்

**சிங்கம்:-**

(மகம், பூரம், உத்தரம்1ம் கால்)

எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். கல்வி தொழில் நன்மையாக அமையும். புதிய தொழில் சேரும். தொழில் தாபனத்தில் சிறு சிக்கல்கள் ஏற்படும். குடும்பத்தில் சந்தோசம் நிலவும். உறவினர்களால் நன்மையுண்டாகும். திருமணம் கை கூடும். தேகத்தில் காயம் எதிரிகளால் தீமை உண்டாகும், அவதானம்.
அதிஷ்ட நாள்: புதன், சனி

**கன்னி:-**

(உத்தரம் 2,3,4ம் கால், அத்தம் சித்திரை 1,2ம் கால்)

கோபம், மனவைராக்கியம் ஏற்படும்.கல்வி, தொழில் மந்தமாக இருக்கும். நஷ்டம் ஏற்படும். உயரதிகாரிகளாலும், பெண்ணாலும் தீமை உண்டாகும். குடும்பத்தில் பயம், சோகம் நிலவும். நண்பர்கள் வீட்டிற்கு வருகை தருவார்கள். கொடுக்கல், வாங்கல் தூரதேசப் பயணங்களை தவிர்த்துக் கொள்ளவும்.
அதிஷ்ட நாள்: வியாழன், சனி

**துலாம்:-**

(சித்திரை 3,4ம் கால், சுவாதி, விசாகம் 1,2,3ம் கால்)

எண்ணிய படி காரியங்கள் கைகூடும். நோய், கவலை, பயம் நீங்கும். கல்வி, தொழில், விருத்தியடையும். இலாபம் புகழ் சேரும். குடும்பத்தில் அமைதியும், ஆனந்தமும் நிலவும். திருமணம் ஒப்பந்தமாகும். தூரதேசப் பிரயாணம் கைகூடும். எதிர்பாராத விபத்துக் காயம் பொருளழிவு ஏற்பட வாய்ப்புண்டு.
அதிஷ்ட நாள்: திங்கள், புதன்

**விருச்சிகம்:-**

(விசாகம் 4ம்கால், அனுஷம், கேட்டை)

நோய், பயம், கவலை உண்டாகும். கல்வி, தொழில் விருத்தியடையும். குடும்பத்தில் அமைதி குலைந்து காணப்படும். உறவினர்களோடு கலகம் ஏற்படும். திருமணம் ஒப்பந்தமாகும். தூரதேசப் பிரயாணம் கைகூடும். பண உதவி கிடைக்கும். கைவிட்டுப் போன பொருள் பண்டங்கள் கைசேரும்.
அதிஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய்

**தனு:-**

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் கால்)

நீண்ட நாட்களாக தடைப்பட்டிருந்த காரியங்கள் கைகூடும். வெற்றி புகழ் சேரும். மகிழ்ச்சி பொங்க காணப்படுவீர்கள். சிறை மீட்சி உண்டு. கல்வி தொழில் சிறந்து விளங்கும். குடும்பத்தில் ஆனந்தம் நிலவும். திருமணம் தூரதேசப் பயணம் கைகூடும். திடீர் விபத்து ஏற்பட வாய்ப்புண்டு.
அதிஷ்ட நாள்: புதன், வியாழன்

**மகரம்:-**

(உத்தரடம் 2,3,4ம் கால் திருவோணம், அவிட்டம் 1,2ம் கால்)

நோய், கவலை, சோம்பல் உண்டாகும். கல்வி, தொழில் மந்த நிலையில் இருக்கும். குடும்பத்தில் அமைதியும், ஆனந்தமும் நிலவும். உறவினர்கள் வீட்டிற்கு வருகை தருவார்கள். பணம் அதிகம் செலவாகும். உல்லாச சுற்றுப் பிரயாணங்கள் கைகூடும். பெரியோர்களால் உதவியுண்டு.
அதிஷ்ட நாள: ஞாயிறு, சனி

**கும்பம்:-**

(அவிட்டம் 3,4ம் கால், சதயம், பூரட்டாதி 1,2,3ம் கால்)

சோம்பல் நீங்கும். சுகம் உண்டாகும். கல்வி, தொழில் எண்ணிய படி விருத்தியடையும். குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவும். திருமணப் பேச்சுக்கள் சூடு பிடிக்கும். வெளியூர் சென்றவர்கள் நாடு திரும்புவர். பண உதவி கடிதத் தொடர்பு பொன், பொருள் கை சேரும். விசம், நீர் இவற்றால் ஆபத்து உண்டு.
அதிஷ்ட நாள்: ஞாயிறு, திங்கள்.

**மீனம்:-**

(பூரட்டாதி 4ம்கால், உத்திரட்டாதி, ரேவதி)

கோபம் உண்டாகும். எதனையும் சந்தேகத்தோடு நோக்குவீர். கடும் யோசனைகளும் ஏற்படும். கல்வி, தொழில் விருத்தியடையும். பணம் சேரும். திருமண விசயங்கள் தடைப்படும். பெரிய மனிதர்களாலும் உறவினர்களாலும் ஆறுதல் உதவி கிட்டும். பொன், பொருள், வீடு, வாகனம் சேரும்.
அதிஷ்ட நாள்: புதன், வியாழன்

"சோதிடர்"
கோ.ஸ்ரீ இளங்கோகரன்
ஆரையம்பதி

# அந்த ஐந்து நிமிடத்தில்........!

அந்த மதியவேளை
நிழல் பார்த்து ஒதுங்கினோம்,
தனிமைக்காகத்
தடைகளை தவிர்த்தோம்
முதல் ஐந்து நிமிடத்தில்
அடுத்து ஐந்து நிமிடம் வரை
பலரும் பார்க்கும் வண்ணம்
பழையவற்றைக் கதைத்தேன்!
நீ உண்மைகளை

உதிர்த்தாய் - ஆனால்
என் உள்ளத்தின்
புன்முறுவல்
உன் காதில் விழமுன்
ஊடுருவிவிட்டது
அந்த ஐந்து நிமிடத்தில்
சிதைந்த இதயம் கூட
சிலிர்த்த அந்த நேரத்தில்
நாவால் வர மறுப்பதை

நண்பி மூலம்
நம்பவைக்க நினைத்தேன்
நரம்பு தளரும் என
நினைத்தோ காலம்
தடுத்துவிட்டது.
அத்துடன்
ஐந்து நிமிடமும் முடிந்தது.

விமல்ராஜ்,
ஆரையம்பதி.

# கஞுவாஞ்சிகுடி "பஸ்" தம்புள்ளயில் தடம் புரண்டது பெண்கள், குழந்தைகள் உட்பட 22 பேர் காயம்!

(வேதாந்தி, ஏறாவூர், காத்தான்குடி, களுவாஞ்சிகுடி நிருபர்கள்)

**கொழும்பிலிருந்து களுவாஞ்சிகுடி நோக்கி புறப்பட்ட களுவாஞ்சிக்குடி டிப்போவுக்குச் சொந்தமான பஸ்வண்டி வெள்ளி இரவு 3 மணியளவில் தம்புள்ளயில் தடம் புரண்டதால் பஸ்லில் பிரயாணம் செய்த 22 பேர் காயத்துக் குள்ளாகி அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

இவர்களில் 6 பேரின் நிலமை கவலைக்கிடமாகவுள் ளதாக வைத்தியசாலை வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்தவர்களில் 03 பேர் அவசர சிகிச்சைப் பிரிவிலும், 16 பேர் சாதாரண விடுதியிலும், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் டபிள்யூ அத்தப்பத்து தெரிவித் தார். இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந் தவர்கள் எனத் தெரிவிக்கப்ப டுகிறது.

இந்த விபத்தினால் பஸ் வண்டி பாரிய சேதமடைந்துள்ளது.

இது தொடர்பாக சம்பவம் நடந்த இடத்திற்கு களுவாஞ்சி குடிசாலையைச் சேர்ந்த உயர் மட்டக் குழுவினர விஜயம் செய்ய வுள்ளதாக சாலை முகாமையாளர் எஸ்.கருணாகரன் தெரிவித்தார்.

இதேவேளை காயம டைந்தவர்களின் நலன்கள் தொடர் பாக் மட்டக்களப்பு மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரரா சசிங்கம் வைத்தியசாலை வட்டா ரத்துடன் தொடர்பு கொண்டு சிகிச்சை நலனுக்கான ஒழுங் குகளை மேற்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஹபரனை பொலிசார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்ற னர்.

## கி.பல்கலைக்கழக........

நடைபெற்றதாகக் கூறப்படும் தாக்குதலைக் காரணங்காட்டியே இச்சுற்றிவளைப்புத் தேடுதல் நடாத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக் குள் புலிகள் நுழைந்தால், அவர்களைத் தேடியே இச்சுற்றிவ ளைப்பு நடாத்தப்பட்டதாக, உப வேந்தரிடம் இராணுவத்தினர் தெரிவித்தாகவும் அறிகின்றேன்.

பல்கலைக்கழக வளா கத்தினுள் தமக்கு ஒவ்வாதவர்கள் நுழைந்துள்ளதாகப் படையினர் கருதினால், அதற்கு அவர்களே பொறுப்பானவர்கள். பல்க லைக்கழகம் அமைந்துள்ள பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட் டின்கீழ் உள்ள பிரதேசமே தமக்கு ஒவ்வாதவர்கள் அதனுள் நுழை யாது தடுக்க வேண்டியது படை யினருடைய பொறுப்பே.

### 'டாங்கி' ஏன்?

மேலும், அவ்வாறு ஓரிருவர் உள்ளே நுழைந்ததாக் கருதி இத்தேடுதல் நடாத்தப்பட்டி ருந்தாலும், பாரிய யுத்த டாங்கிகள் அதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய தேவை என்ன?

தேடுதல் நடாத்தப்பட்ட விதமானது, ஓர் பாரிய போர் முனைப்புப் போன்றே அமைந்துள் ளது. பல்கலைக்கழக சமூகத் தினரை அச்சுறுத்துவதற்காகவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நான் கருதுகின்றேன்'

### அழைத்தது யார்?

பல்கலைக்கழகத்துக் குள் படையினர் தேடுதல் நடத்துவ்தென்பது வழமையான உயர்கல்விப் பீட நடைமுறைக ளுக்கு முரணானது. பல்கலைக் கழகத்தினுள் அப்படி ஏதாவது தேவை இருந்து உபவேந்தர் அழைப்புவிடுத்தாலொழிய, பல்க லைக்கழக வளாகத்தினுள் பாதுகாப்புத் தரப்பு நுழைய முடியாது.

அத்தகைய தேவை ஏற்பட்டாலும் கூட பொலிசாரே இத்தகைய நடவடிக்கைகளில் இறங்க முடியும்.

இங்கு, படையினர் தேடுதல் நடாத்திய வேளையில், துணைவேந்தர் பல்கலைக்ககத்தில் இருக்கவில்லை. காலை 10 மணிவரை தேடுதலை நடாத்திய படையினர் விரிவுரையாளர்கள் மாணவர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்களை உள்ளே செல்ல அனுமதிக்காது திருப்பி அனுப்பியுள்ளனர்.

இவ்வாறு பல்கலைக் கழகத்தில் பொறுப்பானவரும் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த மாணவர்களின் பாதுகாப்பும் பலத்த அச்சுறுத்த லுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்விச் சமூ கத்தைப் பீதிக்குள்ளாக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இது குறித்து பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவும், கல்வி உயர்கல்வி அமைச்சும் உடனடி விசாரணைகளைநடாத்த வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறேன்."

என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆரையம்பதி...............

செங்கலடியில் இயங்கும் அலு வலகமும் மூடப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை தங்கள் அமைப்பின் பெயரைக்கூறி யாரா வது கப்பம் கேட்டால் அல்லது துன்புறுத்தினால் இது சம்பந்தமாக தமக்கு அறியத் தருமாறு பாரா ளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் துள்ளார்.

இராணுவ முகாம்களுக்கு அருகாமையில் இருக்கும் ரெலோ அலுவலகங்களை மூடி விடுமாறு பொதுமக்கள் தெரிவித்த வேண்டு கோளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட ரெலோ இயக்கப் பொறுப்பாளர் கே. சாந்தன் தெரிவித்தார்.

## அக்கரைப்பற்றில் குடும்ப விபரம் திரட்ட பணிப்பு

(ஏறாவூர் நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் ஆலயடி வேம்பு, திருக்கோயில், அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச பிரிவுகளில் வசிப்பவர்களது விபரங்களைத் திரட்டித்தருமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி யூ.எல். எச். கேட்டுள்ளார்.

கிராமசேவகர்களை அழைத்து நேற்று நடாத்திய விஷேட கூட்டமொன்றில் அவ் இப்பணிப்புரையினை விடுத் துள்ளார்.

இக்கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கிராம சேவை அதிகா ரிகள் கலந்து கொண்டனர்.

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நூலக வாரம்

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழ கத்தின் ''நூலக வாரம் - 2001'' இம்மாதம் (ஜூன் மாதம்) 22ம் திகதி, வெள்ளிக்கிழமை முதல் 24ம் திகதி ஞயிற்றுக்கிழமை வரை கிழக்குப்பல்கலைக்கழகத்தில் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் கொழும்புபல் கலைக்கழக பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் (கல்விப்பீடம், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள வுள்ளார்.

இலங்கையின் முன்னணி நூல்விற்பனை முகவர்களது விற்ப னைக்கான நூல்களும், பிரபல எழுத்தாளர்களது சேகரிப்பு நூல்கள், பழங்கால ஓலைச் சுவடிகள், அரிய நூல்கள், மின்னி யல் ஆவணங்கள் பலவும் காட்சிக் கென வைக்கப்படவுள்ளன.

மேலும் நூலக வாரத்தை முன்னிட்டு விரிவுரைகளும், எழுத்தாளர் சந்திப்பு பயிற்சிப்பட் டறை, நூல் விற்பனை முகவர்க ளுடனான சந்திப்பு ஆகியவையும் அந்நாட்களில் நடைபெறவிருக் கின்றன.

## சாய்ந்தமருது இளைஞர் சூட்டுக்குக் காயம்!

(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருதைச் சேர்ந்த நளீம் (25) என்ற இளைஞர் வெள்ளி இரவு 2.30 மணியளவில் இனந்தெரியாதோரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி காயமடைந் துள்ளார் இவர் தற்போது அம்பாறை மாவட்ட வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசார ணைகளை அம்பாறை மாவட்டப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

## முஸ்லீம் காங்கிரஸ் பிளவுபடும் அபாயம்

இதேவேளை முஸ்லீம் காங்கிரஸ் கட்சியும் இரண்டாக பிளவுபடும் அபாயம் தோன்றி யிருப்பதாக கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவியும் அமைச்சருமான பேரி யல் அஷ்ரப், மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லாஹ் ஆகியோரை சேர்த்துக் கொள்ள வேண்டுமென ஐநூறுக்கு மேற்பட்ட முஸ்லீம்கள் வெள்ளி யிரவு கோஷம் எழுப்பியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து சென்ற மேற்படி முஸ்லீம் கள் முஸ்லீம் காங்கிரஸின் தலை மைக் காரியாலயம் முன்பாகக் கூடி கோஷம் எழுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தின் சில சக்திகளே கட்சியைப் பிரிப்பதற்கான நடவடிக் கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

## நம்பிக்கை.........

எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸினால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிடம் முன்வைக் கப்பட்ட சில கோரிக்கைகள் தொடர்பாக அரசு இதுவரை நிறை வேற்றாது இழுத்தடிப்பு செய்து வருதைத் தொடர்ந்தே. அரசுக்கும் முஸ்லீம் காங்கிரஸிக்குமிடை யிலான உறவுமுறிவடையும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளில் ஒன்றான கல்முனை கரை மாவட் டம் அமைக்கும் விடயத்தில் அர சாங்கம் இழுத்தடிப்பு செய்து வருவதாகவும் காங்கிரஸ் வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.





**மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவு விழாவில் பின்வருவோர் பொன்னாடை போர்த்திக் கௌர விக்கப்பட்டனர்.**

**நேற்று மாலை இடம்பெற்ற விஷேட நிகழ்வில் பின்வருவோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். கலாபூசனம் திருமதி சாந்தாவதி நாகையாவுக்கு மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி மகாதேவா பொன்னாடை போர்த்தி கௌர விப்பதையும், இரண்டாவது படத்தில் சங்கீத பூசனம் நா.இராஜுவுக்கு வங்கி முகாமையாளர் இரா நல்லையா பொன்னாடை போர்த்து வதனையும், மூன்றாவது படத்தில் ஜீவன் யோசப்புக்கு மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ் தங்கவேல் பொன் னாடை போர்த்துவதனையும் பார்வையாளர்களில் ஒரு பகுதியி னரையும் படங்களில் காணலாம்.**

**(படங்கள்+தகவல் : காந்தன்)**

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.